வாரவெளியீடு

# ஆதவன்

ராவய வெளியீடு
ATHAVAN ආදවන්

ஒளி: 8 06.04.2000 விலை ரூபா 12.00 Registered as a News Paper in Sri Lanka

இது
இன்று வந்த
அழுகையில்லை
பத்தாண்டு காலமாய்
குத்திய ஈட்டியில்
ரணமான
காயத்தினால்
வந்த
அழுகையிது

கூடு கட்டி குடும்பமான
குருவிகளுக்கு
குண்டடி பட்டதனால்
வந்த மரண
வேதனையிது

பத்தாண்டு காலமாய்
பத்திரப்படுத்திய
வேதனையை
இன்று தான்
வெளிக்கொணர
முடிந்திருக்கிறது.
அதுவும்
கல்லறைக்குள்
கண்ணயர்ந்து
கொண்டிருப்பவர்களின்
கண்ணீரஞ்சலிக்காக.

கமால்தீன். அல். ஆஷாத்





## தமிழர் ஆட்சியில் பாதுகாப்பு கிடைக்குமா?

## வெளிச்சம்

வெட்ட வெளியெங்கும்
விழிகளில் தான்
விழிப்பு இல்லை!
புரியாமல் பேசும்
அரசியல்
பொய் பேசும்
சத்தியமாய்..
தெருவெங்கும்
கட்சி கொடிகளில்
தோரணம்
பல நிறங்களில்...
மலர் வளையமாய்
செத்த
ஜனநாயகத்தை
கௌரவிக்க...

**கலாவிஸ்வநாதன்.**

## கற்சிலையாகி

ஆத்மாவுள்ள
சதைப் பிண்டமாகத்தான்
தாயின் கருவறையிலிருந்து
வெளிப்பட்டோம்.
வாழ்வின் அரைப்பாகம்
உங்கள் போர்ச்சப்தங்களையும்,
இரத்த
இரவு விடுதிகளையும்,
தூக்கியெறிந்த பூர்விகத்
தாக்கங்களையும்,
மாறி மாறி நெஞ்சினில் சுமந்து
துயிலாகவில்லை.
யுத்தச் சூழலில்
பனியும் - நெருப்புமாக
வாழ்வின் ஆசைகள்
நாளைய- மரணங்களாக
சடலங்களே பாதையாகி
வாழ்வெல்லாம் மரணமாகிவிட்டன.
இனி
கற்சிலையாகி,
பங்கருக்குள்ளே இருக்கின்றோம்.
உயிர் காவி யுத்தம்
இம் மண்ணிலிருந்து
அழியும் வரை.

**பர்ஹான் முஹம்மத்,**
**அட்டாளைச் சேனை - 11.**

## வாழ்க்கை

தினம் துப்பாக்கி
வெடி கேட்டே
கண் உறங்கி
துப்பாக்கி வெடிகேட்டே
கண் விழிக்கிறோம்.
காணும்
கனவுகள் எல்லாம்
இரத்த வெள்ளமும்
பிணக்குவியலுமே!
தெருநாய்கள்
குலைப்பது கேட்டு
இதயம் வழமைக்கு
மாறாக துடிக்கிறது.
ஊரை, உறவை
இழந்து
வடிக்கும் கண்ணீரில்
இரத்தம் கசிகிறது.
தினம்
செத்து பிழைத்து
அகதியாய் அநாதையா
வாழ்க்கை
நகர்கிறது.

**புதுக்கவி**
**சி. நாகேந்திரன்,**
**ஆரையம்பதி- 03.**




## ஓ! தொலைக்காட்சியே,

உன் அரவணைப்பின்
அரவ அணைப்பு
அவர்களுக்குப் புரியாது.
வெள்ளையுள்ளத்தில்
வெள்ளமடிக்காதே !
எம் குருத்துக்களுக்கா - உன்
கருத்தரிப்புக் காட்சிகள்?
ஓ! தொலைக்காட்சியே,
தொலைக உன் ஆட்சியே!

**இ.ஜெயக்குமார்.**

## காலம்?

கடவுளாம் கற்பனையில்
கடைபல நடத்துகின்ற
மடமை மடிந்தொழியக்-
காலம்
மலருவதிங் கெப்போடி?

மதவெறி கண்மறைத்து
மனிதனை மனிதன்கொலை
அதுஇல் லாதொழியக்- காலம்
அரும்புவதிங் கெப்போடி?

இனவெறி தலைக்கேறி
இனப்பகை யால் உலகம்
இன்னல் அனுபவியாக்- காலம்
இங்குதய மெப்போடி?

சாதி வெறிபிடித்த
சண்டாளர் ஒழிந்த
பதபக் குவமான- காலம்
படருவதிங் கெப்போடி?

இல்லா ருள்ளாரெனும்
இருபிரி வினருள்ள
பொல்லா மைநீங்கிய - காலம்
புலருவதிங் கெப்போடி?

**எம். ராமச்சந்திரன்,**
**கண்டி.**

## தமிழ் சினிமா

விட்டு விடுவேனா? - தமிழென்ற
விருட்சத்தின் விழுதுகளை
பட்டுவிடச் செய்யேனா?
பாவிகளாய் மாற்றேனா?
கட்டி யணைத்தவர்க்குக்
காட்டிடுவேன் களியின்பம்! - என்று
கொட்டமடிக்கிறது
கொட்டில்களில் மினிசினிமா

**அனலையூர்ச் சேந்தன்.**

## மந்திர தந்திரம்



ஓகோ..ஓகோ.. மனிதர்களே!
ஓடுவதெங்கே சொல்லுங்கள்
உண்மையை வாங்கி
பொய்களை விற்று
உருப்பட வாருங்கள்.....
ஓகோ..ஓகோ.. மனிதர்களே...
வெள்ளை ஓடாவியார் பாடலைப்படித்தபடி,
வேலை முடிந்து கூரையிலிருந்து இறங்குகிறார்...
வெள்ளை ஓடாவியார் தச்சுத் தொழிலில் விண்ணன்
அதுபோல் அரசியலும் அத்துப்படி.
பயப்படாமல் எந்த இடத்திலும் உண்மையை உளறுவார்
தினமும் காலையில் பேப்பர படிச்சு விட்டுத் தான் மறுவேலை
வேலை முடிந்து மாலையில் கொஞ்சம் கசிப்பு அடிச்சவுடன்
அரசியல் தானா வரும்.........
வெள்ளை ஓடாவியார் சற்று தள்ளாடியபடி வருகின்றார்.
எதிரே சாஸ்திரி ஏரம்புவும் கட்டாடி கந்தப்புவும் அதே பதத்தில்.
சாஸ்திரி சுந்தரம் அண்ணேன்ட கடைக்கு சூனியம்
செய்திருக்கிறான்கள் என்று நீ எப்படி கண்டுபிடிச்சாய்?
எல்லாம் என்ர சாஸ்திரத்தின் மகிமை என சாஸ்திரி கூற
அது சரி கட்டாடியார் எப்படி அந்த சூனியத்தை
வெட்டின நீ.......அ.........
ஏய் சாஸ்திரி...... எப்படிப்பட்ட சூனியம் என்றாலும்
ஒரே வெட்டு.......
நீ சூனியம் செய்திருக்கு என்று குறிபார்த்து சொல்ல
நான் என்ரை மை வெளிச்சத்தில் செய்தது
யார்? ஏன் செய்தார்கள்? எப்படி செய்து
தாட்டு வச்சாங்கள் எல்லாவற்றையும் கண்டு புடிச்சன்
சுந்தரம் அண்ணைக்கு நல்ல
சிலவு என்றாள் சாஸ்திரி சிலவு
செய்யாமல் முடியுமா? கடேரியையும் ஏழு
தலைமுனியையும் எல்லோ ஏவிவிட்டிருக்கிறாங்கள்
மை வெளிச்சத்தில் அனுமான் கூட ஏழுதலை முனிகிட்ட
போகப் பயந்துட்டுது. காட்டேரியை ஒரு மாதிரிகட்டிப்போட்டன்......
அந்த முனிதான் மசிய மாட்டேன்டது
பிறகு ஒரு மாதிரி சுஞ்சா ரொட்டியை
ஓதிக் கொடுத்தன் ஓடினான், "ம்"
சுடலையை நோக்கி ஓடினாள்......
இதற்கெல்லாம் சிலவை பார்த்தா சரியா?
ஆனாலும் கட்டாடி நீ ஓவர்........
தம்பி இது சாஸ்திரம் சொல்லுறது மாதிரியில்ல.
பேயோட விளையாடுற விளையாட்டு......
வேப்பமர உச்சியில் நின்று பேயொன்று ஆடுதென்று
விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க
வேலையற்ற வீரர்களின் மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட நம்பி விடாதே.....
ஏய் சாஸ்திரி ஏரம்பு.........
ஓடிவி வாரன்
வீண் வம்பு வரும்......
வாய்க்கா பக்கம் இறங்கு..........
ஓய் கட்டாடி சாஸ்திரி ஏரம்பு இப்படி நில்லு......
ஹி.........ஹி.......
ஓடாவியாருக்கு வெறிபோல........
ஏன் உங்களுக்கு.
எமக்கா? சின்ன பதம்.... அதுவும்
தென்னங் கள்ளு...... நீ கசிப்பு என்றார் கட்டாடி.
ஓய் கட்டாடி. குடியில கள்ளென்ன? கசிப்பென்ன
எல்லாம் குடிதான். என்னத்த குடிச்சாலும்
நிதானம், வேணும், நிதானம்,தெரிஞ்சுதா...
அது சரி என்னடா இரண்டு பேரும்
கடைக்கார சுந்தரத்த கஷ்டத்தில போட்டியள்
கஷ்டமா? ஐய்யய்யோ நாம நன்மையல்லவா
செய்தோம். பேயல்லோ ஓட்டினம்.....
வியாபாரத்தில விழுந்த கடைய
நிமிர்ந்து நிக்க செய்திருக்கிறம்.... என்றார் சாத்திரி ஏரம்பு
எடேய் சாத்திரி மூடுவாயை
உங்கள் சாத்திரமும், மை வெளிச்சமும்,
பேய் ஓட்டலும்.......
நீங்களே பேயள்........எடேய் கடையில
வாங்கின கடனை ஒழுங்கா கொடுங்கடா
கடை ஒழுங்கா நடக்கும்.....
ஒரு விசயம் செய்யுரியே சாத்திரி,
ஏய் கட்டாடி சொல்லுறது விளங்குதா......
இரண்டு பேரும் சேர்ந்து என்ன ஓடாவியார்...
இந்த அரசாங்கம் யாரையோ பயங்கரவாதி
என்று உளறிக் கொண்டு கோடிக்கணக்கில்
செலவு செய்து ஆளத் தேடுது
அவரை உண்ட மை வெளிச்சத்தாளையும்
சாஸ்திரத்தாலையும் கண்டு பிடிச்சு கொடுங்கோ
நல்ல வெகுமதி கிடைக்கும் இல்லாவிட்டால்
[illegible]
வீரப்பனை அனுமானிட்ட சொல்லி கண்டு பிடிச்சு கொடு.
என்ன விளங்குதா?......
சாஸ்திரி ஏரம்புவும், கட்டாடி கந்தப்புவும் தலை
நிமிர வில்லை, குனிந்தபடி நிற்க
ஏண்டா ஊர ஏமாத்தி திரியிரியள்.......
தூ..........



**விகடகவி**



## வாசகர் குரல்

ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களின் பத்திரிகையைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. எதிர்வினையான கருத்துக்களைத் தாங்கி வரும் பத்திர்கை என்பதில் மிக்க மிகழ்ச்சி, இருந்த போதிலும், மேலும் சில விடயங்களில் கவனம் செலுத்தினால் மிகச் சிறப்பாக இருக்கும்.

எழுத்துப் பிழை பரவலாகக் காணப்படுகிறது. எழுத்தமைப்பு விடயத்திலும் கவனம் செலுத்தலாம். நேரடிச் சிங்கள மொழி பெயர்ப்பு சில கருத்து மயக்கங்களை உண்டு பண்ணுகின்றது. இதனையும் சற்று அவதானித்துக் கொண்டால் நல்லது. சகோதரப் பத்திரிகைக்கு எமது வாழ்த்துக்கள்.

**(எம்.எஸ்.எம்.நியாஸ்),**
**ஆசிரியர் - நேயம்.**

ஆசிரியர் அவர்கட்கு

தமிழ் பத்திரிகை உலகில் மாற்றுப்பத்திரிகை ஆதவன் என்ற தலைப்பிடப்பட்ட உங்கள் கடிதம் எங்கள் கரம் கிடைத்தது. உடன் பதில் எழுத முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம். தமிழ் மொழியில் ஒரு பத்திரிகை வெளியிட வேண்டும் என்ற உங்கள் சிந்தனைக்கும் முயற்சிக்கும் எமது பாராட்டுக்கள். உங்கள் பணிதொடர வாழ்த்துகின்றோம்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களை என்றுமே தங்கள் எதிரிகளாக பார்த்ததில்லை. இலங்கைத் தீவில் சம உரிமைகளுடன் சிங்கள மக்களுடன் நட்புறவுடன் வாழ்தவற்கே தமிழ்மக்கள் விரும்புகின்றார்கள். இழந்த தமது அரசியல் உரிமைகளை மீட்பதற்காக தமிழ் மக்கள் செய்து வரும் தியாகங்கள் அளப்பரியது. தமிழ் மக்களின் கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கும் சிங்கள மக்களின் கருத்துக்களை தமிழ் மக்கள் அறிந்து கொள்வதற்கும் ஆதவன் களம் அமைக்கும் என நம்புகின்றோம். இந்த வகையில் ஆதவனுக்கு எமது ஆதரவு நிச்சயம் கிடைக்கும்.

முதலில் ஆதவன் பத்திரிகை எமது கரங்களுக்கு கிடைப்பதற்கு நீங்கள்தான் முயற்சி எடுக்க வேண்டும். பணம் செலுத்தி பெறுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். பத்திரிகை எமக்கு கிடைக்காதவரை அதற்கு ஆக்கங்களையும் எமது கருத்துக்களையும் எழுதி அனுப்புவதில் அர்த்தமில்லை என்பதே எமது எண்ணம். உங்கள் பதில் கண்டு தொடரும்.

**சுரேஸ்குமார்,**
**களுத்துறை சிறைச்சாலை.**

நந்தா மாலினியோர் நந்தவனம்

இன மதமொழிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட சங்கீதமானது சர்வதேசமொழி இந்தவிஷ்வபாஷையை அரசியல் வில்லர்கள் கூறுபோடுவது கேலிக்கூத்தாகும். கலையில் தாற்பரியத்தை புரிந்து கொள்ளாது ஆழ்கடலுக்கு அணைகட்ட எண்ணுகின்றனர். ஏழு ஸ்வரங்களை மாத்திரம் தன்னகத்தே கொண்டு. ஏழு உலகையும் வசப்படுத்தும் சக்தி கொண்டே சந்தனமாம் சங்கீதத்தை இனவாதம் என்ற சாக்கடையில் கரைக்க நினைப்பது முட்டாள் தன்மும் கனி இருக்க காயைப் புசிப்பதைப் போலாகும்.

இசை கேட்டால் அசைந்தாடும் புவியை பேரினவாதம் ஏனோ இடியோசை கேட்ட நாகமாய் நடுநடுங்க வைக்கிறது வீண் வில்லங்கங்கள், விதண்டாவாதங்கள், வற்புறுத்தல்களுக்கெல்லாம் கலை தலைசாய்க்க அது மதில் மேல் பூனையல்ல என்பதை கலையை கொண்டு அற்ப இலாபம் தேடுவோர் உணர்தல் வேண்டும். வாழ்க நந்தா மாலினியின் மனஉறுதி.

**மஞ்சுளா கிருஷ்ணசாமி.**

# விலை பேசப்படும் எதிரணியினர்...?

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய உத்தேச அரசியல் சீர்திருத்த யோசனைக்கு ஆதரவுகோரி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 10க்கு மேற்பட்டோரை விலை கொடுத்து வாங்குவதற்கு ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் மிகுந்த செல்வாக்கை செலுத்தும் முதலாம் தர கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

அன்னியச் செலாவணி மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்ட இந்தக் கோடீஸ்வர வர்த்தகர் இதற்கென 500 இலட்சம் ரூபா வரை ஒதுக்கி பல எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை, திருப்திப்படுத்தி வைத்துள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் வாக்கெடுப்பில் வெற்றி கொள்ளப்படுமென்ற நமபிக்கையுடன் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதற்குமப்பால் ஆளும் கட்சி பாராளுமன்ற ஊறுப்பினர்களை குசிப்படுத்தும் நோக்குடன் தலைநகர் கொழும்பிலுள்ள பிரதான ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விசேட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதைவிட அவசர காலச் சட்டத்தின் கீழ் அரசியல் கட்சிகளை தடைசெய்வது தொடர்பாகவும் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டு வருவதாகவும் சில நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமையுடன் பிரதமர் பதவியிலிருந்து ஓய்வு பெறப் போவதையிட்டு ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உயர்மட்டங்களில் நெருக்கடியும் முரண்பாடுகளும் தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

அடுத்த பிரதமர் யார் என்பதை தீர்மானிப்பதிலும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி இன்னொரு புதிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.



ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் புதிய அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை ஆட்சேபித்து ராஜகிரியவிலிருந்து பாராளுமன்ற வளவு வரை ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையே படத்தில் காண்கிறீர்கள். படம் : அஜித் செனவிரத்ன

## அலரிமாளிகையை நோக்கி தமிழ் சினிமா கலைஞர்கள்

இலங்கை சினிமாத்துறை குறிப்பாக தமிழ்ச்சினிமாத்துறை இன்று எதிர் கொள்ளும் பல்வேறு நெருக்கடிகளை விளக்கி ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமார துங்காவிற்கு மகஜரொன்றை கையளிக்க சலனசித்திரம் நிறுவனத்தினர் எதிர்வரும் சனிக்கிழமை அலரிமாளிகையை நோக்கி ஊர்வலமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் தமிழ்க் கலைஞர்கள் "புரஹந்த களுவர" சிங்கள திரைப்படத்தின் தடையை நீக்குமாறும் கோரவுள்ளனர்.

# அமைச்சரவை கூட்டமும் புதிய தேர்தல் முறையும்

விகிதாசார பாராளுமன்ற தேர்தல முறைக்கு பதிலாக புதிய தேர்தல் முறையொன்றினை அறிமுக்பபடுத்த ஆகஸ்ட் 3ஆம் திகதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் திர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் 17ஆவது சீர்திருத்தத் திற்கமைய இதனை முன்வைக்கப் போவதாகவும் இதனை அவசர ஆலோசனை யாக உயர் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கவும் முடிவெடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அறிமுகப்படுத்தப் போகும் புதிய தேர்தல் முறை என்னவென்று இன்னும் அரசு வெளியிடவில்லை என்ற போதும் அது தொகுதி அடிப்படையிலான 160 பிரதிநிதிகளுக்கு பதிலாக 168 அங்கத்தவர்கள் தொகுதி ரீதியாகவும், விகிதாசார தேர்தல் முறையின் கீழ் மாவட்ட மட்டத்தில் 100 பிரதிநிதிகளும், தேசிய பட்டியலில் 30 பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 298 பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாராளுமன்றத்தை உருவாக்கும் புதிய தேர்தல் முறை என்றும் தெரியவருகிறது.

புதிய அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏடுக்கும் முயற்சி வெறும் கண்துடைப்பு என்றும் அரசின் நோக்கம் புதிய தேர்தல் முறையின் கீழ் மீண்டும் அரச அதிகாரத்தை கைப்பற்றுவதே பிரதான நோக்கமாக இருக்கின்றது எனவும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

## யாழ் ரெலிகொம்மின் தொடரும் மோசடி

திருநெல்வேலிச் சந்தியில் தனியார் பராமரிப்பில் இருந்த நாணயக்குற்றி தொலைபேசியை எவ்வித முன்னறிவித்தலுமின்றி கடந்த மாதம் 27ம் திகதி யாழ். ரெலிகொம் ஊழியர்கள் கழற்றியெடுத்துச் சென்றுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களும் பொதுமக்களும் இந்த தொலைபேசியினால் பெரிதும் நன்மையடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த தொலைபேசியை பராமரித்து வந்த தனியார் கடை உரிமையாளர் நிலுவை ஏதும் இல்லாது முன்னறிவித்தல் ஏதுமின்றி தொலை பேசி அகற்றப் பட்டது தொடர்பாக யாழ் தொலைத்தொடர்பு நிலைய உயரதிகாரிக்கு முறையிட்ட போதும் இது தொடர்பாக அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

யாழ் ரெலிகொம் உயரதிகாரிகள் தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களிடம் பெருமளவில் பெற்றுக் கொண்டு இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது அண்மைக்காலமாக பெருமளவில் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

# புதிய அரசியலமைப்பு சட்டம்

## நிறைவேற்றப்பட்டாலும் அதிகாரம் இல்லை

பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு வருகின்ற புதிய அரசியலமைப்புச் சட்ட வரைபு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் பெற்று நிறைவறினாலும், இந்தப் பாராளுமன்றத்தின் காலம் முடிவடைந்த பின்பே மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்தலாம என்பதால் அது செல்லுபடியற்றதாகும் என சட்ட வல்லுனர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இப்போதுள்ள பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் அதுவரை முடிவடையாத அனைத்து நடவடிக்கைகளும், சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துச் சட்டங்களும், சட்டவரைவுகளும் செல்லுபடியற்ற தாக்கப்படுவதாலும், கலைக்கப்பட்ட பாராளுமன்றமொன்றின் நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லப் பொதுத் தேர்தலின் பின்பு அமைக்கப்படும் புதிய பாராளுமன்றத்திற்குக் கடப்பாடு எதுவும் இல்லாததாலுமே இந்த நிலமை எழுந்துள்ளது.


அவ்வாறான நிலைமையொன்றின் கீழ் புதிய அரசியலமைப்புச் சட்ட வரைவை மீண்டும் புதிய பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரத்தின் பின்பு, மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றின் மூலம மக்கள் ஆணையைப் பெறும் வரை அது அதிகாரமற்றதாகும் என்பது சட்ட வல்லுனர்களின் கருத்தாகும்.

சட்ட வல்லுனர்களின் கருத்துக்களை நிராகரித்து பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் பின்பு மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தாலும், பாராளுமன்றத் தேர்தலுடனேயே, மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டி இருக்கும் என்பதால் நிலைமை மேலும் சிக்கல் வாய்ந்த ஒன்றாகவே அமையலாம்.

அரசியலமைப்புச் சட்டவரைவு தொடர்பான வாக்கெடுப்பு 9 ஆம் திகதி புதன்கிழமை முடிவடைந்த பின்பு அன்றைய தினமே சபாநாயகர் அது தொடர்பான உறுதிப்படுத்தலை ஜனாதிபதியிடம் அனுப்பி வைத்தவுடன் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை அது அறிவிக்கப்படும் தினத்திலிருந்து 30 நாட்களின் பின்பே நடத்தலாம். ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து 30 3ாட்கள் கால அவகாசம் வழங்குவது கட்டாயமாதலால் செப்டெம்பர் 10ஆம் திகதிக்குப் பின்பு ஒரு நாளில் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டி இருக்கும். ஒகஸ்ட் 24ஆம் திகதி நள்ளிரவுடன் இப்போதைய பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதால் கலைக்கப்பட்ட பாராளுமன்றம் ஒன்றின் பாராளுமன்றத் தேர்தல் காலப்பகுதியிலேயே மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை நடத்தலாம்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாக வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்ட தினம் முதல் 10 நாட்களின் பின்பு வரும் 7 நாட்கள் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் காலமாகும். ஒகஸ்ட் 24 நள்ளிரவுடன் பாராளுமன்ற ஆயுட்காலம் முடிவடைந்ததன் பின்பு உரிய அறிவித்தல் ஒகஸ்ட் 25 அன்று அறிவிக்கப்பட்டால். வேட்பு மனுத்தாக்கல் செப்டெம்பர் 10ஆம்திகதி முடிவடையும். வேட்பு மனுத்தாக்கல் திகதி முடிவடைந்த தினத்திலிருந்து 5 வாரங்களுக்கும் 7 வாரங்களுக்கும் இடையில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்போது மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்கும் உரிய காலம் வருவதால் பொதுத் தேர்தலுடன் சேர்த்து ஒன்றாக மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பையும் அரசாங்கம் நடத்த வேண்டி வரும்.





# அரசியல் தீர்வுக்கான திருத்தப்பட்ட நகல்!

**செந்தணலோன்**

இலண்டனிலிருந்து நாடு திரும்பிய உடனேயே அவசர அவசரமாக தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஆகிய இரு தமிழ்க்கட்சிகளையும், அதற்கு பின்னர் ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) யையும் தனித்தனியாக சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க, தான் முன்வைக்கப்போகும் புதிய உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்த நகலுக்கு முழு ஆதர வொன்றை தருமாறு இந்த 3 தமிழ்கட்சிகளையும் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

அதேநேரம், அன்றைய தினம் இரவு ஜனாதிபதியை சந்தித்துப் பேசிய பின்னர் நடைபெற்ற இந்தியத் தூதுவரின் விருந்துபசாரமொன்றில் கலந்து கொண்ட தமிழ்க்கட்சித் தலைவர் ஒருவரை தனியாக சந்தித்து பேசிய இந்தியத் தூதுவர்



ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்கா முன்வைக்க உத்தேசித்துள்ள புதிய அரசியல் அமைப்பு சீர்த்திருத்த நகலை ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத் தியதாகவும் தெரியவருகிறது.

இலங்கை அரசினால் முன்வைக்க உத்தேசிக்கப்படும் எந்தவொரு இனநெருக் கடிக்கான தீர்வுத் திட்ட ஆலோசனைகளும் இந்தியாவுக்கு தெரிவிக்கப்பட்ட பின்னரே தமிழ்க்கட்சிகளுடனோ அல்லது ஐக்கிய தேசிய கட்சியுடனோ கலந்தாலோசிக்கப் படுவதாகவும் சில அரசியல் கட்சி வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஏதாவது தீர்வுத் திட்டத்தை முன்வைத்து சர்வதேச சமூகத்தின் அழுத்தங்க ளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவை பெற்றுக் கொள் வதற்குமான பெரும் பிரயத்தன நடவடிக்கையில் ஒன்றாகவே புதிய உத்தேச அரசியல் அமைப்பில் யோசனைகளின் உள்ளடக்கத்தையும் நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் தனது ஆட்சிகாலத்தில் முழுப் பகுதியையும் போர் நடவடிக்கை களில் மட்டுமே தீவிர கவனம் செலுத்திய ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி தனது ஆட்சியின் இறுதிக்காலங்களில் அதுவும் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியுள்ள இறுதிக் காலங்களில் சமாதானம் பற்றிப்பேசுவது இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் புதுமையான ஒன்றல்ல.

உத்தேச புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்த நகல் தொடர்பாக ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள ஒருசாரார் மத்தியிலேயே அதிருப்தி நிலவுவதாகவும் சிறுபான்மையினரை திருப்திப் படுத்த ஜனாதிபதி பண்டார நாயக்க குமாரதுங்க எடுக்கும் முயற்சிகள் தற்கொலைக்கு ஒப்பானதாகும் என்றும் ஆளும் கட்சியில் உள்ள சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித் துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதையெல்லாம் விட, பிர தான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இனநெருக்கடி விவகாரம் தொடர்பாக ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி யுடன் கூடிக் குலாவி பேசி, இணக்கம் கண்ட பின்னர் இறுதியில் புதிய உத்தேச அரசியல் சீர்திருத்தத்தை நிராகரித்துள்ளது. பிராந்தியங் களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரித் துள்ள அதேவேளை, ஜனநாயக நீரோட்டத்துக்குள் வந்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் அல்லது ஆளும் கட்சியுடன் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்ட ஏனையத் தமிழ்க் கட்சிகளும் அதிகாரப் பகிர்வு அலகு (Unit Of Devolution), இலங்கை அரசின் தன்மை (The structure Of The Sri Lankan State), காணிக்கட்டுப்பாடு (Control Over State Land) ஆகிய மூன்று முக்கியமான விடயங் களில் எந்த விட்டுக் கொடுப் புக்கும் இடம் இல்லை என தமது கடும் ஆட்சேபனையை தெரிவித் துள்ளன.

1997 யோசனைகளை சில திருத்தங்களுடன் உள்ளடக்கி இருந்த புதிய உத்தேச அர சியலமைப்பு நகலில் இடைக்கால நிர்வாக சபையின் பதவிக்காலம், பிராந்திய சபைகளின் பதவிகாலம் ஆகிய இரண்டையும்



சேர்த்து அதாவது 10 வருடங்களின் பின்னர் வடக்கு கிழக்கும் . தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கு மாகாணம் பூராவும் நடத்தப்படும் இதுவே வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பான புதிய ஏற்பாடாகும் என கூறப்பட்டுள்ளது. என்றும் குறித்த 10 வருடங்களுக்குள் கிழக்கில் சர்வஜனவாக்கெடுப்பு, நடாத்தப்பட்டால் வடக்கும், கிழக்கும் தனித்தனியாகவுமே செயற்பட வழிவகுக்கும் வகையிலேயே அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இம்மாதம் 24ம் திகதியுடன் ஆயுட்காலம் முடிவடையபப் போவது கவனிக்கத்தக்கதோர் விடயமாகும். இந்த மிகக் குறைந்தகால இடைவெளியில் இவ்வாறானதோர் அரசியல மைப்பு சீர்திருத்த சட்ட நகல் வரைபை அவசரஅவசரமாக முன்வைத்துள்ள ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உள்நோக்கம் இலகுவாகப் புரிந்துக் கொள்ளக் கூடிய தொன்றாகும்.

அதேநேரம் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் நெருக்கத்துக்குரிய தமிழ்க் கட்சிகளையே திருப்பதிப் படுத்தாத புதிய உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தம் இலங்கை இனநெருக்கடி விவகாரத்தில் பிரதான பாத்திரம் வகிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை இணக்கத் துக்கு கொண்டு வருவதென்பது இயலாத விடயமேயாகும்.

புதிய உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனை களை கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட போது பாராளுமன்றத் திற்கு உள்ளேயும், வெளியேயும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத, பிரதி பலிக்காத அந்த சீர்திருத்த யோசனைகளுக்கு கடும் எதிர்பு கிளம்பியது.

பாராளுமன்றத்தில் உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகளை சமர்ப்பித்த போது ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் உரத்து கூச்சலிட்டு பாராளு மன்ற ஜனநாயகத்தை போர்களம் ஆக்கினார்கள்.

வெளியே ஜே.வி.பியினர் ஆயிரக்கணக்கில் திரண்டு பாராளுமன்றத்தை நோக்கி படையெடுத்து வந்தனர். நாட்டை துண்டாட முனையும், புதிய உத்தேச அரசியல் சீர்திருத்த யோசனைகளை நாட்டை துண்டாடும் போக்கிற்கு வழிவகுக்கும் என சிவப்புச் சட்டை போர்த்திய ஜே.வி.பி. யினர் இனவாதக் கக்கல்களை வெளிப் படுத்தினர்.

கொழும்பு மருதானையில் இருந்து புறக்கோட்டை நோக்கி படையெடுத்த பௌத்த குருமார் சிஹல உறுமய ஆகியோரின் எதிர்ப்பு ஊர்வலம் நூற்றுக் கணக்கானோர் உடனேயே சென்ற போதும் புதிய உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகள் சிங்கள இனத்தை யும், பௌத்த மதத்தையும் குழிதோண்டி புதைக்கும் நடவடிக்கை என்றும் இதனை சிங்கள பௌத்தர்கள் எதிர்க்க வேண்டும் எனவும் அவர் குரல் எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களின் கடந்த கால உயிர்த்தியாகங்களை எந்த வகையிலும் பிரதிபலிக்காத ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் புதிய உத்தேச அரசியல் சீர்திருத்த யோசனை கள் தமிழ் மக்களை நோக்கிய வெறும் கண்துடைப்பே அன்றி வேறொன்றும் இல்லை.

இதே வேளை இந்த புதிய உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகளை பாராளுமன்ற வாக்கெடுப்பில் எவ்வாறேனும் வெல்லவேண்டும் என்ற நம்பிக்கையில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் எவ்வாறாயினும், தோற்கடிக்க வேண்டும் என்ற உறுதியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போடும் இந்த தீர்வுத் திட்டம் யாருக்கு என்பது புரியவில்லை? குறிப்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளுக்காவது புரியுமா?

புதிய உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகள் நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றாலும், தோற்றாலும் அது தமிழ் மக்களின் விமோசனத்திற்கு வழிவகுக்கப் போவதில்லை. யுத்தத்திற்கு தீர்வொன்றை தரப் போவதுமில்லை என்பதை எதிர்கால அரசியல் நிகழ்வுகள் எடுத்துக் காட்டும்.

ஒருபக்கம் இனநெருக்கடி விவகாரத்தில் தீர்வொன்றைக் காண்பதற்கான புதிய உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்த நகலொன்றை கொண்டு வர முயற்சியெடுக்கும் அதேவேளை போரின் மூலம் வெற்றி கொள்ளலாமென்ற வெறும் மாயையில் வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான நவீனரக போர்த்தளபாடக்குவிப்பு, ரஷ்யா இஸ்ரேல் ஆகிய நாடுகளிலிருந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் தருவிக்கப்பட்ட மிக்- 27 சுப்பர் சொனிக், கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் என்பனவற்றின் கொள்வனவு என்பன தொடர்ந்தும் போர் நடவடிக்கைகளை முன்னெடுக் கும் அரசின் உள்வெளிப் பாட்டையே வெளிக்காட்டி நிற்கிறது.

> புதிய உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகளை. பாராளுமன்ற வாக்கெடுப்பில் எவ்வாறேனும் வெல்லவேண்டும் என்ற நம்பிக்கையில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் எவ்வாறாயினும், தோற்கடிக்க வேண்டும் என்ற உறுதியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டிப் போடும் இந்த தீர்வுத் திட்டம் யாருக்கு என்பது புரியவில்லை? குறிப்பாக பாராளுமன்ற த்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகளுக்காவது புரியுமா?

இல-83, பிலியன்தல வீதி, மஹரகம.
தொலைபேசி எண் - 851672, 851814.
விநியோகப் பிரிவு - 842064.
தொலைமடல் - 851814.

## வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உ ிமை உள்ளது.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# தமிழ் முஸ்லிம் இன நல்லுறவின் அவசியம்

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்ட நிகழ்வுகளில் முஸ்லிம்களின் குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் பங்களிப்புகளும் அவர்கள் அனுபவித்த கசப்பான சம்பவங்களும் அவசியம் நினைவு கூரப்பட வேண்டியவையாகும். அதேநேரம் அதன் மறுபக்கத்தில் அப்பாவித் தமிழ் மக்களை பலியெடுத்த சம்பவங்களும் கவனத்திற்குரியவை.

சிங்கள பௌத்த பேரினவாதப் போக்குகளின் பன்னெடுங்கால இன நசுக்குதல்களுக்கு எதிராக முனைப்புக் கொண்டெழுந்த தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் இன்னொரு இனத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என நினைப்பது, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை மறுதலிக்க முயலும் தவறான அணுகுமுறைகளுக்கும் இலக்கற்ற போக்குகளுக்குமே அவை வழிவகுக்கும் என்பதை அனைவரும் உணர வேண்டும். தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால நிகழ்வுகளில் முஸ்லிம் மக்கள் காட்டிய நேரடிப் பங்களிப்பும், ஆதரவும் பெருமளவில் இருந்து வந்தன. தமிழ் இயக்கங்கள் அனைத்திலும் முஸ்லிம் இளைஞர்கள் இணைந்து தமது முழுமையான பங்களிப்பை நல்கினர். முஸ்லிம் மக்கள் மீதான தமிழ் தேசிய வாதத்தின் பார்வையும், அணுகுமுறைகளும் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களில் இருந்து அந்நியப்படுவதற்கு காரணமாக அமைந்தன.

அதேவேளை, தமிழ்த்தேச விடுதலைப்போராட்டத்தின் உருவாக்கத்தை தொடர்ந்து தோற்றம் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு துணைபோயிருப்பதுடன் முஸ்லிம் மக்களை தமிழ் மக்களுடனான வன்முறை போர் ஒன்றுக்கு அவை இட்டுச் சென்றன.

இதைவிட தமிழ்த்தேசிய விடுதப் போராட்டத்தை திசை திருப்புவதற்கும் பன்நெடுங்காலமாக ஒன்றுபட்டு பின்னிப் பிணைந்து வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தை இரத்த களரியாக்குவதற்கும் வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட பேரினவாதிகளின் திட்டங்களுக்கு தமிழ் இயக்கங்களும் சில முஸ்லிம் தலைமைகளும் பலியாகிப் போனமை, பெரும் வரலாற்றுத் தவறொன்றை அவை இழைப்பதற்கு காரணமாயிற்று.


யாழ் குடா நாட்டிலும் வடக்கின் மன்னார், முல்லைத்தீவு பகுதிகளிலிருந்தும் முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்டமை தமிழ் தேசிய இனத்தின் தற்கொலை நிகழ்வுக்கு ஒப்பானதோர் விடயமாகும். இதைவிட காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலைகள் என்பனவும் தமிழ் மக்களிடம் இருந்து முஸ்லிம் மக்களை மேலும் அந்நியப்பட வைத்தன.

இதே போன்று காரைத்தீவு கிராமம் மீதான பாரிய அழித்தொழிப்பு, வீரமுனைக் கோயிலில் தஞ்சமடைந்திருந்தவர்கள் மீதான தாக்குதல், புதுக்குடியிருப்பு படுகொலை உட்பட பல சம்பவங்கள் தமிழ் மக்கள் மீதான முஸ்லிம் பிற்போக்கு தலைமைகளின் வன்முறை நிகழ்வுகளைச் சுட்டி நிற்கின்றன. இவற்றில் ஜிகாத் முஸ்லிம் ஊர்காவற் படை என்பன அரச படைகளுடன் இணைந்து கட்டவிழ்த்து விட்ட வன்முறை சம்வங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. நிலத்தொடரிலும், சமூக கலாசார பின்னணியுடனும் நெருங்கிய தொடர்புடைய தமிழ் முஸ்லிம் மக்கள் தமது கடந்த கால வரலாற்று தவறுகளில் இருந்து விடுபட்டு கசப்புணர்வுகளை மறந்து பரஸ்பரம் இனநல்லுறவை வளர்த்துக் கொள்ளத் தவறும் பட்சத்தில் இவ்விரு இனங்களினதும் ஒளிமயமான எதிர்காலம் பழைய இருண்ட யுகங்களுக்கே மீண்டும் செல்ல நேரிடும் என்பதை இச்சந்தர்ப்பத்திலாவது அனைவரும் உணருவது அவசியமானது.

கடந்த ஒருதசாப்த காலமாக தொடரும் போர் நிகழ்வுகளிலும், இழப்புகளிலும் இருந்து தமிழ் முஸ்லிம் மக்கள் விடுபட வேண்டுமெனில் தமிழ் மக்கள் வேண்டிநிற்கும் அதே அளவு அரசியல் உரிமைகளும் தனித்துவம், ஆளுமையும், இறைமையும் முஸ்லிம் மக்களுக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்தக் கூடிய புரிந்துணர்வுடன் கூடிய ஐக்கியமே இன்றைய அவசியமான தேவையாகும்.

*ஆசிரியர்.*

## விக்டர் ஐவன் எழுதுகிறார்...





# ஜே.ஆரும் - சந்திரிகாவும்

பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ காலம் இன்னும் மூன்று வாரங்களில் முடிவடைகின்றது. இதற்கிடையே அரசாங்கத்திற்கு தேர்தல் முறையில் மாற்றமொன்றினை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்போது உள்ள பாராளுமன்றத்தில் 225 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். இதனை 281 அங்கத்தவர்களாக அதிகரித்து அதில் 168 உறுப்பினரை தொகுதி அடிப்படையில் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் புதிய முறையொன்றை ஏற்படுத்திக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அரசு இதற்கு முன்பு 1997ம் ஆண்டு, புதிய அரசியலமைப்பொன்றிற்கான சட்ட வரைபு ஒன்றினை முன் வைத்தது. அந்த வரைபில் இது போன்றதொரு மாற்றம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அதில் விகிதாசார முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்ற முறை பற்றியே குறிப்பிடப்படுகின்றது. விகிதாசார முறையின் கீழ் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் உறுதியான வெற்றியைப் பற்றிய நம்பிக்கையின்மையின் காரணமாக அரசாங்கத்திற்கு தேர்தல் முறையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசர தேவை ஏற்பட்டுள்ளதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

தற்போதுள்ள அரசியலமைப்பிற்கு ஏற்ப அரசியலமைப்பில் அடிப்படை மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டுமாயின் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்காக பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு அங்கீகாரத்தோடு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும். தேர்தல் முறையின் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமென அரசாங்கம் நம்புகின்றது. இருந்தாலும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றிற்குச் செல்ல அரசு தயாராக இல்லை. கருத்துக் கணிப்பு தேர்தலில் தோல்வி கண்டால் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைவது என்பது நிச்சயம் என்பது அறிந்த விடயம். அடுத்து கருத்துக் கணிப்பு வாக் கெடுப்பொன்றை நடாத்தப் போதுமான காலமும் அவகாசமும் இல்லை. எனவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அங்கீகாரத்துடன் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்தாமல் நீதிமன்ற உத்தரவொன்றைப் பெற்றுக் கொள்வதின் மூலம் புதிய முறையிலான தேர்தலொன்றுக்குச் செல்வது அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது.

தற்போதுள்ள அரசியலமைப்பின் படி, ஸ்ரீலங்கா ஜனநாயகக் குடியரசின் இறைமை பொதுமக்களையே சார்ந்துள்ளது. இது அழிக்க முடியாத உரிமையொன்றாகும். அதன்படி அரசியலமைப்பு அதிகாரம் பொது மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதி நிதிகளுடன் கூடிய பாராளுமன்றத்திற்கு உரித்தாகின்றது. இப்பொழுது விகிதாசார அடிப்படையிலேயே பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகின்றது. விகிதாசார தேர்தல் முறைமீதான மாற்றத்திற்கு பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரமும் கருத்துக் கணிப்பு அங்கீகாரமும் வேண்டும். தற்போது அரசாங்கம் தேர்தல் ம்றையில் மாற்றத்தை ஏற்படுத்தப் போகும் விதம், ஐ.தே.க. அரசாங்கம் சரத் முத்தெட்டுவேகம அவர்களை பாராளுமன்றத்திற்குச் செல்வதைத் தடுப்பதற்காக மேற்கொண்ட முயற்சிக்குச் சமமானதாகவே தெரிகின்றது.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது கலவானைத் தொகுதியில் ஐ.தே.க சார்பில் அபேரத்ன பிலபிடிய போட்டியிட்டு வெற்றிபெற்று, ஐ.தே.கட்சி அரசாங்கத்தில் தபால் தந்தித் தொலைத் தொடர்பு பிரதியமைச்சரானார்.

இவரது தேர்வுக்கு எதிராக சரத் முத்தெட்டுவேகமவினால் தேர்தல் மனுவொன்று முன்வைக்கப்பட்டது. இத் தேர்தல் வழக்கில் தமக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்படுமென அறிந்து கொண்ட பிலபிடிய தொடர்ந்து மூன்று மாத காலம் வரை எவ்வித அறிவித்தலும் இன்றி பாராளுமன்றத்திற்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்டார். இதன் காரணமாக இவரது பாராளுமன்ற உறுப்புரிமை 1977 ஜனவரி 5ம் திகதியுடன் இல்லாமல் போயிற்று. அதன் பின்பு, ஐ.தே.க. செயலாளர் இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மீண்டும் இவரது பெயரையே முன்மொழிந்தார். இதன் காரணமாக ஜனவரியில் பாராளுமன்ற அங்கத்தவராக அபேரத்ன பிலபிடியா சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தேர்தல் வழக்கில் பிலபிடியா தோல்வியடைந்து அந்தத் தீர்ப்புக்கு எதிராக அவர் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார். 1980ம் ஆண்டு ஒக்டோபர் 9ம் திகதி உயர் நீதிமன்றம் தேர்தல் மனுத் தீர்ப்பை ஏற்று தீர்ப்பை வழங்கியது.

இருந்தாலும் பிலபிடியா பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமா செய்யாது நியமன அங்கத்தவராக தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் இருந்தார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின் கலவான தேர்தல் தொகுதிக்கு இடைத்தேர்தலொன்றுக்காக தேர்தல் ஆணையாளரினால் நியமனப் பத்திரம் கோரப்பட்டது. அவ் வேளை பிலபிடிய சபாநாயகருக்கு மனு ஒன்றினை சமர்ப்பித்து தனது நியமனப் பிரதி நிதித்துவத்தை நீதிமன்றம் ரத்துச் செய்யாததாலும் கலாவானைத் தொகுதிக்கு வெற்றிடம் இன்மை யாலும் தாமே கலவானைத் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவர் என தெரிவித்தார்.

பிலபிடிய, நியமன அங்கத்தவர் என்ற ரீதியில் கலவானைத் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவர் என சபாநாயகர் பாக்கீர் மாக்கார் தேர்தல் நியமன தினத்திற்கு முன் தினம் தீர்ப்பு அளித்தார்.

இருந்தாலும் அன்று தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிய பியசிறி சபாநாயகரின் தீர்ப்பைப் பொருட்படுத்தாது சபாநாயகர் தீர்ப்பு வழங்கியதிற்கு மறுநாளான 1980 ஜனவரி 12ம் திகதி கலவானைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெறுமெனத் தெரிவித்தார். கலவானைத் தொகுதிக்கு இரண்டு பிரதிநிதிகளை நியமிக்கும் வகையில் அரசியல் அமைப்பை சீர்திருத்தம் செய்வதாக அரசாங்கம் அறிவித்தது. அந்த சீர்திருத்தத்திற்கான சட்ட வரைபு உயர் நீதிமன்றத்தில் ஐந்து நீதவான்கள் முன்னிலையில் டிசம்பர் 27ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஜனவரி 12ம் திகதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலின் மூலம் தெரிவாகும் எவருக்கும் பாராளுமன்றத்தில் வெற்றிடம் இல்லாதபடியால் அந்த நியமனத்திற்குச் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த சீர்திருத்தத்தை கொண்டு வருவதாக சட்ட மா அதிபர் வாதிட்டார். இருந்தாலும் உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தையேனும் கூட்டுவதற்கு மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மை அங்கீகாரம் மட்டுமன்றி, கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றின் மூலமே அங்கீகரிக்கப்பட வேண்டும் என தீர்ப்பளித்தது.

கலவானை இடைத்தேர்தலில் சரத் முத்தெட்டுவேகம தெரிவு செய்யப்பட்டதோடு, உயர் நீதிமன்றம் அரசின் தவறான போக்குக்கும் தடையாக இருந்தது. சரத் முத்தேட்டுவேகம பாராளுமன்ற அங்கத்தவரானவுடன் பிலபிடிய பாராளுமன்றத்திலிருந்து விலகி, மதுவரித்திணைக்களத்தின் தலைவரானார்.

ஜே.ஆர். ஜயவர்தத்னா பலம் கொண்டதொரு தலைவராயினும், தன்னிச்சையான போக்கிற்கு உயர் நீதி மன்றம் அனுமதி வழங்கவில்லை. அதன் மூலம் அரசியலமைப்பின் உள்ளடக்கமும் நீதிமன்றத்தின் சுயாதீனமும் பாதுகாக்கப்பட்டது.

இன்றைய அரசாங்கம் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை அன்று ஜே.ஆர் ஜயவர்தனா மேற்கொண்டதிலும் பார்க்கப் பயங்கரமானதாகும். கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்று இல்லாமலேயே இன்றைய அரசு பாராளுமன்ற அங்கத்தவர்களை 56 னால் அதிகரிக்க முனைகின்றது. இதற்கு உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பில தான் இலங்கையின் எதிர்காலம் மாத்திரமன்றி உயர் நீதிமன்றத்தின் எதிர்காலமும்

தொடர்ச்சி 16ம் பக்கம்

# யாழ் மக்களின் இடம் பெயர்வும், தமிழ்கட்சிகளின் தேர்தல் ஞானமும்

நி.நிவேதா.



எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்படுகின்றதோ இல்லையோ யாழ் மாவட்டத்தில் தேர்தலை எதிர் கொள்வதற்காக கட்சிகள் இப்பொழுதிலிருந்தே ஊமைத் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டுவருகின்றன. யாழ். குடாநாட்டில் 1995க்கு பின்னர் மக்களது இடப்பெர்வுகள் இன்று நேற்று ஆரம்பிக்கப்படவில்லை. இருந்தாலும் அரசியல் வாதிகளைப் பொறுத்த மட்டில் இன்று தான் அம்மக்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் இருப்பது போல் இங்கு கூற முற்படுகிறார்கள்.

இதற்கு காரணம் இவ் வருடம் முடிய முன்னர் நடைபெறவுள்ள தேர்தல் என்ற வண்டியின் யாழ்ப்பாண பாராளு மன்ற ஆசனங்களில் தம்மை தமிழ் தலைவர்கள் என கூறக் கொள்பவர்கள் ஏறி இருந்து அமர்வதற்கான முன்னோடி ஏற்பாடே இது என்று கருதப்படுகின்றது. இத் தேர்தலினால் அரசியல் கட்சிகளுக்கு பலத்த கொண்டாட்டம். ஆனால், பாவம் அரசாங்க ஊழியர்கள் அரசியல் பிரச்சாரத்திற்காக அரசாங்க கடமை என்ற பெயரில் அழைக்கப்படும் சில நிகழ்வுகளுக்கு செல்ல வேண்டி இருக்கின்றது.

அரசாங்க திணைக்களங்களின் அதிகாரிகளை சந்திக்க தமக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறி இவ் அதிகாரிகளை இலகுவாக தமது கட்சிக் காரியாலயத்திற்கு இந்த தலைவர்கள் அழைத்து சில அரசியல் வேலைகளை மறை முகமாக இவர்கள் மீது சுமத்தி விடுகின்றனர். என்ன செய்ய ஓய்வ பெற்ற நிலையிலும் தமக்கு சேவை நீடிப்பை வழங்க முன் வந்ததற்காக பல அரசாங்க உயர் அதிகாரிகள் காலையும் மாலையும், அரசியல் கட்சிகளின் காரியாலயங்களுக்கு சென்று வருவதை தவிர்க்க முடியாத ஒன்றாக இன்று ஆகியிருக்கிறது.

1999ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலைப் புலிகளால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஓயாத அலைகள் 3 இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து யாழ். குடா நாட்டில் சில ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்த நிலையில் அவல வாழ்க்கை நடத்தி வருகின்றன. சில இடங்களில் இடம் பெயர்ந்தும் தம்மால் எடுத்து வர கூடிய பொருட்களை மட்டுமே எடுத்து வந்த போதும், இடைமறித்து இம்மக்களை மனித கேடயமாக பயன்படுத்தி இவர்களை வெளியேற்ற விடாது படையினர் தடுத்த சமயங்களில் கண்களை மூடி ஒன்றுமே தெரியாதவர்கள் போன்று இருந்ததமிழ் கட்சிகள் தற்போது இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக பேச முற்படுகின் றனர். உணவுக்காகவும், ஏன் தமது உயிருக்காகவும் பச்சிளம் குழந்தைகள் முதல் முதியோர் வரை ஏங்கி தவித்த போது, முட்கம்பி வேலியை தாண்ட மாட்டாமல் இருந்த மக்களுக்காக பொது அமைப்புகளும் பல்கலைகழக மாணவர்களும் ஒன்றிணைந்து தமது உயிரையே கொடுக்கும் அளவுக்கு முன்வந்த வேளை தமிழ் தலைவர்கள் என்ன செய்தார்கள் என்பதுதான் ஒருவருக்கும் தெரியவில்லை. இடம்பெயர்ந்த நிலையில் தமது இருப்பிடத்தை சென்றடைய முன்னர் இடைத்தங்கல் முகாமில் பசிக்களையுடன் வந்தவர்களுக்கு அரசாங்க அதிகாரிகள் குடிக்க தண்ணீர் வசதி கூட ஒழுங்கு செய்ய முன் வராத நிலையில் இது அரசசார்பற்ற நிறுவனங்களின் (N.G.O)வேலை என கூறி தமது "பிக்கப்"பில் இடைத் தங்கல் முகாமிறகு வந்து சென்ற் போது இவற்றை யெல்லாம் கேட்டும் கேளாததும் போல நின்ற இவ் அரசியல் கட்சிகளுக்கு இன்று திடீர் தேர்தல் ஞானம் பிறந் துள்ளது என்பது எவருக்கும் புரியாமல் உள்ளது. அன்று இடம் பெயர்ந்து பல ஜீவ மரண போராட்டங்கள் நடத்திய மக்கள் மத்தியில் இன்று போய் இடம்பெயர்ந்தமைக்காக அரசாங்கம் வழங்கும் இரண்டாயிரம் ரூபாவுக்கான காசோலையை அரசாங்க அதிகாரிகள் வழங்குவதை தாம் வழங்குவது போன்று காட்டிக்கொள்ளவே இவர்கள் விரும்புகின்றார்கள். இதே சமயம் இடம் பெயர்ந்து சுமார் 90 நாட்கள் கழிந்த பின்னர் அம் மக்களுக்கு வழங்கும் உலர் உணவு பொருட்கள் தரம் இல்லை என்றும் அரிசியில் புழு நெளிகின்றது என்றும் கூறி அரசியல் நாடக கதாபாத்திரத்தை இவர்கள் அரங்கேற்ற முற்படுகின்றனர்.





சில தமிழ் கட்சிகளை பொறுத்த மட்டில் தவிச்ச முயல் அடிக்கும் வாய்ப்பு இவர்களுக்கு அதிகம் உண்டு. வாக்குப் பெட்டிகளில் வாக்கு சீட்டுக்கள் ஒன்றுக்கு மேற்பட்டகட்டுகளாகக் கூட இருந்தாலும் ஆச்சரியப்படுவற்கில்லை.

சில இடம் பெயர்ந்த முகாம்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் இவர்களை "பிக்கப் வண்டிகளில் கண்டால் பொது மக்கள் "படையப்பா" மார் வாறாங்கள் என்றே கூறுகின் றனர். இந்திய அரசியல் சாறி, சாரம் வழங்கி தேர்தலில் குதிப்பதை போன்று இங்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு உடுபுடவை, சவர்க்காரம், ஜீவாகாரம் போன்ற வற்றை வழங்கி இவற்றை வீடியோ படம் பிடிப்பதும் இதற்காக சுமார் ஐந்து அல்லது ஏழு "டபிள் முகம பிக்கப்" வாகனங்கள் வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை பார்க்கும் மக்கள் தென் இந்திய திரைப்படமான "படையப்பா" திரைப்படத்தின் பெயரை இவ் அரசியல் கட்சிகளுக்கும் சூட்டியுள்ளனர்.

தேர்தல் ஒன்று மிக விரை வில் நடைபெற இருப்பதையே இந்த நிகழ்வு காட்டுகின்றது. இத் தேர்தலில் எந்த கட்சி, மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை காட்ட முற்படும் தேர்தலாகவே இது காணப்படுவதால் இப்போது இருந்தே தேர்தல் ஊமை பிரச்சாரத்தை இக்கட்சிகள் மேற்கொண்டுள்ளனவே, தவிர உண்மையான தமிழ் மக்களின் மீது கொண்ட பாசத்தினால் இல்லை என்பது மட்டுமே உண்மை. இவற்றை கட்சிகள் ஏற்பதாக இல்லை. ஆனால் மக்கள் கருத்து இதுவாகவே அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

யாழ். குடா நாட்டில் கடந்த இருபத்தி மூன்று வருட காலம் நடைபெற்ற தேர்தலை போலன்றி மிகவும் சுமுகமான சூழ் நிலையில் மக்கள் தமதுவாக்குகளை சுதந்திரமாக அளிப்பார்களேயானால் இத் தமிழ் கட்சிகள் கச்சையும் இல்லாமல் போய் விடுவார்கள். யாழ். குடா நாட்டில் தேர்தல் இடாப்பின் படி வாக்காளர் எண்ணிக்கை இங்கு வசிக்கும் மக்கள் தொகையை விட அதிகமாக இருப்பதே உண்மை. இந்த நிலையில் தேர்தல் நடைபெற்றால் தமது வாக்குகளை அளிக்கும் மக்கள் தொகையை விட வேறு வழியில் அளிக்கப்படும் வாக்கின் தொகை தான் அதிகமாக இருக்கும் என்பதே உண்மையான விடயம்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் இரண்டு தேர்தல் தொகுதிகளில் அதாவது சாவகச்சேரி தேர்தல் தொகுதி, கிளிநொச்சி தேர்தல் தொகுதி முழுமையாக இன்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இதேபோன்று உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் அரை வாசிக்கு மேற்பட்ட பகுதிகள் (வடமராட்சி கிழக்கு) புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. நல்லூர் தேர்தல் தொகுதியில் நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் இருந்து முழுமையாக மக்கள் வெளி யேறியுள்ளனர். இவர்கள் யாழ். மாவட்டத்தில் பல இடங்களிலும் சிதறி வாழுகின்றனர். இவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் எவ்வாறு அமையப் போகின்றது? என்பது தெரியவில்லை.

இம் மக்கள் வாக்களிக்க முன் வருவார்களா? என்ற கேள்விக்கு தேர்தல் திணைக்களம் தான் பதில் சொல்ல வேண்டும். எப்படியும் தேர்தலை நடத்தி முடித்தால் போதும் என்ற நிலையை விடுத்து தேர்தல் திணைக்களம் எப்படி தேர்தலை நடத்த முடிக்க போகின்றோம் என ஆராய்வது நல்லது. இதே சமயம் யாழ். தேர்தல் மாவட்டத்தில் இருந்து புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்களின் வாக்களிப்பு நிலையம் எப்படி எங்கு அமைய போகின்றது என்பது தொடர்பாக தேர்தல் திணைக்களம் முடிவு செய்ய வேண்டும். கொத்தணி முறை யிலான வாக்களிப்பு நிலையங்களை அமைக்கும் முறை யானது, அரசியல் கட்சிகளின் திருகுதாளங்களுக்கு ஏற்ப வாக்களிப்பு நிலையங்கள் மாறிவிடுவதற்கே வாய்ப்பை ஏற்படுத்தும். எனவே கடந்த வருடங்களை போன்று அல்லது கடந்த வருடங்களின் அனுபவங்களை மையமாக கொண்டு இத் தேர்தலில் மக்கள் தமது வாக்கை மட்டும் அளிக்கும் தேர்தலை நடத்த தேர்தலாக திணைக்களம் முன் வரவேண்டும்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் அனேகமாக ஏழு முனையில் போட்டி நடைபெறும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. இதில் ஆறு கட்சி ரீதியாகவும் ஒரு சுயேட்சை அணியாகவும் இத் தேர்தலில் கலந்து கொள்வதற்கான சாத்திய கூறுகள் மிக அதிகமாக தெரிகின்றது. தற்போது இத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலுக்கு ஆட்களை சேர்க்கும் முயற்சிகள் கட்சி மட்டத்தில் மிக மிக தீவிர மாக ஆராயப்பட்டு வருகின்றது. இதே சமயம் சில கட்சிகள் வேறு அணியுடன் தேர்தல் உடன்பாடுகளை ஏற்படுத்தி கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட அரசாங்க அதிகாரிகளை பொறுத்த மட்டில் தேர்தல் முடியும வரை அனேகமான அதிகாரிகள் லீவில் செல்வதையே விரும்புகின்றனர். இதற்கு முக்கிய காரணம் அர சியல் கட்சிகள் தேர்தல் பரப்புரை களுக்கு மறைமுகமாக தம்மை ஈடுபடுத்தி விடுவார்கள் என்ற பயபீதியும், தமது கடமைகளை தலையீடு இன்றி செய்து முடிக்க முடியுமா? என்ற குழப்பமுமே இதற்குக் காரணமாகும்.

அனேகமாக தேர்தலில் போட்டியிடும் ஓரிரு கட்சிகளை தவிர ஏனையோர் தோளிலும், இடுப்பிலும் ஆயுதங்களுடன் தேர்தலில் போட்டியிடுவார்கள். எந்த நேரம் என்ன நடக்கும் என எவராலும் கூறமுடியாத நிலையே அங்கு காணப்படுகிறது.

தேர்தல் தொடர்பாக புலிகளின் நிலைப்பாட்டில் எந்த ஒரு மாற்றமும் இல்லை. அவர்கள் தேர்தலில் போட்டியிடவும் மாட்டார்கள். அதே சமயம் தேர்தலில் மறை முகமாக ஆதரவை எவருக்கும் நல்கவும் மாட்டார்கள் என்பதே உண்மை. இச் சமயங்களில் தேர்தல் காலங்களில் சிறிய அல்லது பெரிய அளவிலான தாக்குதல்களை இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் புலிகள் மேற்கொள்ளக்கூடும். இதன் காரணமாக ஓர் அசாதாரண சூழ்நிலையை சகலரும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம். சில தமிழ் கட்சிகளை பொறுத்த மட்டில் தவிச்ச முயல் அடிக்கும் வாய்ப்பு இவர்களுக்கு அதிகம் உண்டு. வாக்குப் பெட்டிகளில் வாக்கு சீட்டுக்கள் ஒன்றுக்கு மேற்பட்டகட்டுகளாகக் கூட இருந்தாலும் ஆச்சரிய படுவதற்கில்லை.

யாழ் செயலகத்தை பொறுத்த மட்டில் என்றும் இல்லாத அளவு நிதி யாழ். செயலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந் நிதி ஒதுக்கீட்டிற்கான அபிவிருத்தி பணிகள் ஒரு மாத காலத்திற்குள்ளே அதாவது பாராளுமன்றம் கலைக்க முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டும் என் அமைச்சால் அரச அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று பல வருடகாலமாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த இடைக்காலக் கொடுப்பனவு, அரசாங்க ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்தின் பாக்கி பணம் என பல மில்லியன் ரூபா பண காசோலைகள் தற்போது திணைக்கள தலைவர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இத் திடீர் கொடுப்பனவுகளுக்கு காரணம் தேர்தலுக்கான அரசாங்கத்தின் பிரச்சாரமே என யாழ் மாவட்ட அரச ஊழியர்கள் கருதுகின்றனர்.

தேர்தல் வந்தால் தான் இவ்வாறு மக்களும், பிரதேசமும் நலம் பெறுமானால் வருடம் ஒரு தேர்தல் வந்தால் நாடு செழிக்கும், வடு வளம் பெறும். விரைவாக பாராளுமன்றம் கலைக்க படுமா? யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடைபெறுமா? என்பதை விட தேர்தலினால் சிலருக்கு சில நன்மைகள் ஏற்படும் வாய்ப்பு உறுதியாகியுள்ளது என்பது மட்டுமே உண்மையாகும்.

பலவருட காலம் யாழ்ப்பாணத்தை வரைபடத்தில் பார்த்த படி இங்கிருந்து கிடைக்கும் தகவல்களை கேட்டு "படையப்பா" பாணியில் செய்யப்பட்டு வரும் ஏற்பாடுகளை பார்க்கும் போது தமிழ் கட்சி தலைவர்கள் மக்களது பாதுகாப்பு என்பதை விட தமக்கு பாராளு மன்ற உறுப்பினர் பதவியும் அதனூடாக தாம் உழைத்த உழைப்பு தான் முக்கியம் என்ற நோக்கத்துடன் வீறு கொண்டு எழுந்து இன்று இவர்கள் யாழ்ப்பாணம் வந்து கொண்டு இருப்பதையே நாம் இப்போது இங்கே காணக் கூடியதாக உள்ளது. இன்னும் பலர் வருவதற்கு எத்தனித்து கொண்டு இருக்கின்றனர்.

தேர்தல் எந்த கட்சிக்கு தேய்பிறை, எந்தகட்சிக்கு வளர் பிறை என்பதை மக்கள் வாக்கு மட்டும் இன்று நிர்ணயிக்கப் போவதில்லை. இவர்கள் பின்னால் நிற்கும் ஆதரவும் ஆட்பலமும், அரசபலமும் கையில் வைத்திருக்கும் வெடிகலங்களும் தான் தீர்மானிக்க போகின்றது. இவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக வீறு நடைபோடுவார்கள். மீண்டும் தேர்தல் வந்தால் மக்கள் மத்தியில் வருவார்கள். இரண்டாயிரம் ஆண்டில் நடைபெறவுள்ள முதலாவது தேர்தலாவது ஏதாவது மாற்றத்தை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துமா?




கௌதமன்

# புலிகளின் புலனாய்வுத் துறையும், படைகளின் கனரக ஆயுத நகர்த்தலும்

பொதுத் தேர்தல் நெருங்க, நெருங்க குழப்ப நிலைகளும் உட்கட்சி மோதல்களும் அதிகரிக்கத் தொடங்கியிருப்பதுடன், ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான "ஆவேசமான முறைகேடுகளும்" இடம் பெற்று வருகின்றன. நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்து சமாதானத் தீர்வை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதுடன், புலிகளை இராணுவ ரீதியில் ஒழித்துக்கட்டி தமிழர்களின் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வை கண்டு விட வேண்டுமென்று சகல தரப்பிலும் வற்புறுத்தப்பட்டு வருகின்றன. எனினும், அரசியல் தீர்வை எட்டி விடும் நிலையில் அரசியல் தரப்பினர் இல்லாதது போன்றே இராணுவ ரீதியில் புலிகளை ஒடுக்கிவிடும் நிலையில் படையினரும் இல்லை. இதனால் இரு வழிகளிலும் தீர்வொன்றை எட்டமுடியாது தொடர்ந்தும் தீவிரமடைந்து வரும் போரினால், அரசு நிலை தடுமாறி கொண்டிருக்கிறது.

யாழ். குடா போர் முனை தொடர்ந்தும் அமைதியாகவே இருக்கிறது. கடந்த மூன்று மாதங்களாக அங்கு பாரிய மோதல்கள் எதுவும் நடைபெற வில்லை. ஆனையிறவு படைமுகாம் வீழ்ச்சியைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளிலுமிருந்து பலகோடி ரூபாவிற்கு பெருமளவு நவீனரக கனரக ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதில், தரையிலிருந்து தரைக்குச் சென்று தாக்குதலை நடத்தி பாரிய அழிவை ஏற்படுத்தக் கூடிய பல குழல் ரொக்கட் செலுத்திகளும் அடங்கும். இந்த ஆயுத தளபாடங்களின் வருகையுடன் புலிகளின், யாழ் நகர் நோக்கிய நகர்வுகள் முடிவுக்கு வந்து விட்டதாக படையினர் கூறிவருகின்றனர். எனினும் யாழ் நகர் மீதான தங்கள் இறுதித் தாக்குதல்களை புலிகள் ஏன் இடைநிறுத்தி வைத்துள்ளனர் என்பது, அவர்ளைத் தவிர வேறெவர்க்கும் இதுவரை தெரியவரவில்லை.

1996ம் ஆண்டு நடுப்பகுதியில் முல்லைத்தீவு முகாம் மீது புலிகள் "ஓயாத அலைகள்- 1" தாக்குதலை நடத்தியிருந்தனர். அதன் பின் 1998 பிற்பகுதியில் "ஓயாதஅலைகள்-2"ஐ கிளிநொச்சியிலும் கடந்தவருட பிற்பகுதியில் ஓயாதஅலைகள்-3ஐ வன்னியிலும் நடத்தினர். வன்னியில், ஒட்டு சுட்டான் முகாம் மீதான தாக்குதலுடன் ஆரம்பமான இத்தாக்குதல் இன்னமும் முடிவடையவில்லை. கட்டம் கட்டமாக நடைபெற்றே வருகின்றது. முல்லைத்தீவு முதல் ஆனையிறவு வரையான தாக்குதல்களுக்கும் யாழ்.நகர் மீதான தாக்குதலுக்கும் பெருமளவு வேறுபாடுள்ளது. முதலில் இடம்பெற்ற தாக்குதல்களெல்லாம் அடர்ந்த காட்டுப் பகுதியிலும், வெட்டாவெளித் தரவையிலும் மக்கள் குடியிருப்புகளற்ற பகுதிகளிலும் நடைபெற்றன. ஆனால் யாழ். நகர் மீதான தாக்குதல் அவ்வாறில்லை. மிகச் சிறிய நிலப்பரப்பில் அதிகளவு மக்கள் வாழும் பிரதேசமே யாழ்ப்பாணம். அத்துடன்

படுகாயமடைந்ததாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதைவிட சாவகச்சேரி நவீன சந்தை இடிந்து முற்றாகத் தரை மட்டமாகி விட்டது. இதுபோன்று, சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரைமட்டமாகியதுடன் நூற்றுக் கணக்கான வீடுகளும் அழிக்கப்பட்டுள்ளன. பெரு மனித அவலமே இங்கு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், யாழ். நகர் நோக்கிய புலிகளின் நகர்வானது மேலும் பேரழிவுகளை ஏற்படுத்தி விடுமென அவர்கள் கருதுவதாகவே கூறப்படுகிறது. இரு தரப்பிலும் உள்ள மிக நவீன பாரிய ஆயுதங்களின் தாக்கத்தை அண்மைக்கால போர் நடவடிக்கைகள் பெரிதும் புலப்படுத்தியுள்ளன. இதுவே அவர்களது தயக்கத்திற்கான காரணமாயிருக்கலாமெனவும் கருதப்படுவதால் அவர்கள் யாழ். நகர் மீதான தாக்குதல்களுக்கு வேறு

வன்னிப் பிராந்திய கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள அதேநேரம், வன்னித் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திர, யாழ் மாவட்டத் தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளார். சகல நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதி பதவியும் நீக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மேற்கொண்ட இந்தநடவடிக்கையானது அரசு மட்டத்திலும் படையினர் மட்டத்திலும் மிகப்பெரிய கேள்விகளை எழுப்பியுள்ளதுடன் இது அரசியல் ரீதியானதொரு "அப்புறப்படுத்தல்" எனவும் விபரித்துள்ளனர். இவ்விருவரும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதர வாளர்கள் என்பதாலும் இருவரும் ஒரே நேரத்தில், ஆச்சரியப்படத்தக்க வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அரசியல்

வேண்டுமென்றும் வற்புறுத்தி வருகின்றன. இதனால் தேர்தல் காலத்தில் அரசு நெருக்கடிகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இதேநேரம் அண்மையில் இலங்கை அரசு பல்வேறு நாடுகளிலுமிருந்து சுமார் 2500 கோடி ரூபாவுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்திருந்தது. இவற்றுக்கான பணத்தை

செய்யப்பட்ட எம்.பி.ஆர்.எல்களே தற்போது குடா நாட்டில் படையினரின் நம்பிக்கை நட்சத்திரங்களாகவுள்ளன. இந்த எம்.பி.ஆர்.எல்களை புலிகளே முதன் முதலில் யுத்த முனைகளில் பயன்படுத்தினர். கடந்த வருட பிற்பகுதியில் வன்னியில் பல படை முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்ட போது புலிகள் இந்த



எம்.பி.ஆர்.எல்களையே இதற்குப் பயன்படுத்தியிருந்தனர். தற்போது இந்த எம்.பி.ஆர்.எல்களை படையினர் குடாநாட்டில் பயன்படுத்து கிறார்கள். இதற்குப் பயன்படுத்தப்படும் . ரொக்கட்டுகள் மிக விலை உயர்ந்தவை. குடா நாட்டில் தற்போது, படையினர் ஐந்திற்கும் மேற்பட்ட எம்.பி.ஆர்.எல்களை வைத்துள்ளனர். இவை 30முதல் 40 குழல்களைக் கொண்டவை. இதனால் சில செக்கன்களுள் 30 முதல் 40 ரொக்கட்டுகள் ஓர் பிரதேசத்தை பதம்பார்க்கின்றன. இவற்றை அளவுக்கதிகமாய் பயன்படுத்தும் போது வீடு, வாசல்களெல்லாம் அழியுண்டு போகின்றன. தென்மராட்சிப் பகுதியில் இவை ஏற்படுத்திய அழிவுகளே இதற்கு சான்று பகிர்கின்றன. இனிவரும் மோதல்கள் கூட பொது மக்களின் சொத்துக்களையும் உயிர்களையும் அழித்தொழிக்கும் என்பதில் ஐயமில்லை.

இதே நேரம், குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் படையினர் நிறுத்தியுள்ள ஆட்லறி மற்றும் எம்.பி.ஆர்.எல். நிலைகளை கண்டறியும் புலனாய்வு நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டுள்ளதாக படையினரின் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. இதனால் படையினர் தங்களின் ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதுடன் கனரக ஆயுதங்களை இடத்திற்கிடம் மாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தல் காலத்தில் வடக்கு- கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் தாக்குதல்கள் இடம்பெறலா மென்ற அச்சம் நிலவுகின்றது. தேர்தல் வெற்றிக்காக அரசு பல்வேறு உத்திகளையும் கையாண்டு வருவதாக குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. இதில் பல நடவடிக்கைகள் கூட அடங்குமென்றும் கூறப்படுகிறது. பாரிய படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு, நிலைமை தலைகீழாகி விட்டால் அது தேர்தல் வெற்றிகளை மோசமாக்கி விடும் என்பதால், இந்தத் தேர்தல் காலத்தில் அரசு பாரிய படை நடவடிக்கை எதற்கும் உத்தரவிடாதென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரதேசம் ஒரு குடா நாடாகவுமுள்ளது. இதனால், பாரிய யுத்தமொன்று நடைபெறும் போது ஏனைய பகுதிகளைப் போலன்றி பேரழி வுகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

ஆனையிறவு படைத்தளம் மீதான தாக்குதலின் போது, பளையிலும் அதனை அண்டிய பகுதியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்கிய போது பெரும் மனித அவலம் ஏற்பட்டது. படையினர், மக்களை பணயம் வைத்திருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டதுடன் இந்த விடயம் சர்வதேசத்தின் கவனத்திற்கும்

உபாயங்களைக் கடைப்பிடிப்பதுடன் அதற்கான தருணத்திற்கும் காத்திருக்கலாமெனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அத்துடன், படையினரிடம் வசம் வந்துசேர்ந்த கனரக ஆயுதங்களும், பல எம்.பி. ஆர். எல்களும், அவர்களுக்கு பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதாகக் கூறப் படுவதையும் ஆய்வாளர்கள் நிராகரித்துள்ளனர். படையினர்வசம் இந்தஆயுத தளபாடங்கள் வந்து சேர்ந்து இரு மாதங்கள் கழிந்து விட்ட போதிலும் படையினர் இது



வட்டாரங்களில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. எதிர்வரும் பொதுத்தேர்தலைக் கருத்தில் கொண்டே இந்த பதவி விலகல்கள் நடைபெற்றுள்ளதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

எதிர்வரும் தேர்தலில் குடா நாட்டில் ஐ.தே.க. வுக்கு ஆதர வான படைத்தளபதிகள் இருந்தால் சிலவேளைகளில் அவர்கள் வாக்களிப்பின் போது அவர்களுக்கு சார்பானவர்களுக்கு ஆதரவாக நடந்துகொள்ளலாமென்ற அச்சம் அரசு தரப்பில் நிலவியதாலேயே தங்கள் சார்பான தளபதியை அரசு அங்கு நியமித்திருப்பதாக அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இதனால் யாழ். குடாநாட்டில் தேர்தலின் போது பெரும் மோசடிகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் எதிர்கட்சிகள் கருதுகின்றன. குடா நாட்டுப் போர் நிலையையும் கருத்தில் கொள்ளாது அரசியல் நிலையை அரசு கருத்தில் கொண்டுள்ளமை தெற்கில் பௌத்தபீடங்கள் மத்தியிலும் தீவிரவாத சிங்களக் கட்சிகள் மத்தியிலும் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அரசு உடனடியாக இவ்விரு தளபதிகளையும் மீண்டும் குடாநாட்டிற்கு அனுப்ப

செலுத்துவதில் அரசு தற்போது பெரும் நிதிநெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. இந்த ஆயுதக் கொள்வனவையடுத்து பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு வரி அறவீடுகள் அதிகரிக்கப்பட்ட போதிலும் ஆயுதக் கொள்வனவிற்கான பணத்தை உடனடியாக செலுத்த முடியாது, பல்வேறு நாடுகளிடமும் இந்தப் பணத்தை கடன் அடிப்படையில் அடுத்த வருடம் செலுத்தி முடிப்பதாக அரசு அவகாசம் கோரியுள்ளது. இது குறித்து, ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் திறைசேரி அதிகாரிகளைச் சந்தித்து பேசியுள்ளார். அத்துடன் ஆயுதக் கொள்வனவிற்காக பணம் செலுத்தப்பட வேண்டிய நாடுகளுக்கு, முக்கிய அமைச்சர்கள் அனுப்பப்பட்டு நிலைமைகள் விளக்கப்பட்டதுடன் தவணை அடிப்படையில் அடுத்த வருடத்திற்கிடையில் முழுப் பணமும் செலுத்தப்பட்டு விடுமென்ற உறுதியும் வழங்கப்பட்டுள்ளது. இதைவிட முன்னர் நடைபெற்ற ஆயுதக் கொள்வனவிற்காக பல்வேறு நாடுகளுக்கும் செலுத்த வேண்டிய பணமும் இதுவரை நிலுவையிலுள்ளதாகக் கூறப் படுகிறது.

அண்மையில் கொள்வனவு



சென்றது. இதையடுத்து அங்கிருந்து பெருமளவு மக்கள் மீட்கப்பட்ட பின்பே புலிகள் ஆனையிறவுத் தாக்குதலை தீவிரப்படுத்தினர். இதுபோன்றே, புலிகள் ஆனையிறவைக் கைப் பற்றி தென்மராட்சியினுள் நுழைந்து பல பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு முன்னேறி சாவகச்சேரியினுள் நுழைந்தனர். இந்தவேளையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சு, ஆட்லறி ஷெல் தாக்குதல் மற்றும் பல குழல் ரொக்கட்டுகளின் தாக்குதலால் ஏற்பட்ட அழிவுகள் இதுவரை மதிப்பிடப்படவில்லை. மட்டுவில் பகுதியில் மட்டும் 500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டும்,

வரை பாரிய நகர்வெதனையும் மேற்கொள்ளாததும் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டதுடன், வடபகுதிக்கான சகல நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்பட்டார். எனினும் குடாநாட்டில் புலிகளின் அச்சுறுத்தல் நீங்காத நிலையில் சுமார் மூன்று மாதங்களில் இவர்கள் இருவரும் அங்கிருந்து விலக்கப்பட்டுள்ளனர். மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா

# யுத்த சூழலில் சிறுவர்கள்

இலங்கையில் சிறுவர்கள் பலர் கண்ணி வெடிகள் காரணமாக ஊனமடைந்துள்ளனர். அதே விதமாகவே யுத்தம் சிறுவர்களை பல விதங்களில் பாதித்துள்ளது. ஆயிரக் கணக்கான சிறுவர்கள் யுத்தத்தினால் தமது பெற்றோர் ஒருவரை அல்லது இருவரையுமே இழந்துள்ளனர். அவர்கள் கொலை, அழிவு போன்ற காட்சிகளை நேரடியாகக் கண்டுள்ளார்கள். அவை அவர்களின் மனங்களிலிருந்து நீங்காத, நிரந்தர வடுக்களை ஏற்படுத்தியுள்ளன. திரும்பவும் எப்போதாவது ஒரு நாள் அவை தமக்கு நடக்கலாம் என்ற அச்சத்துடனேயே அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் உள்ள சிறுவர்களுக்கான புனர்வாழ்வு இல்லத்தில் 350 சிறுவர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வழியில் நீடித்துக் கொண்டு செல்லும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான ஒன்றியத்தின் ( Save The Children Alliance) கணக்கெடுப்பு ஒன்றிற் கிணங்க, வடகிழக்கில் மட்டும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் 9,00,000 பேர் உள்ளனர். இன மோதல்கள் காரணமாக 3,50,000 சிறுவர்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். அவர்களில் இப்போது இடம் பெயர்ந்துள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 2,70,000 ஆகும்.

ஒவ்வொருவரும் 18 வயது வரை யுத்தத்தை விட எதையுமே தெரியாதவர்களாகவே வளர்ந்துள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கிய உறுதிப்பாட்டுக்கு முரணாக, இலங்கை அரசுக்கு எதிரான யுத்தத்தை நடத்துவதற்காக விடுதலைப் புலிகலிகளால் நன்கு திட்டமிடப்பட்டுத் திரட்டப் படுகின்றமையானது சிறுவர்கள் மீதான வெளிப்படையானதும் மிக மோசமானதுமான செயல் விளைவை பிரதிபலிக்கின்றது.

இவை மிகத் தீவிரமாக வெளித் தெரிபவை ஆகும். ஆனாலும் நாளாந்தச் செயல் விளைவுகள் எந்த விதத்திலும் ஆபத்துக் குறைவானவை அல்ல. மோதல் நடைபெறுகின்ற வடகிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற சிறுவர்களுக்கோ, போரில் ஈடுபடுபவர்களைக் காண்பது என்பது நாளாந்தக் காட்சியாகும். அதே போலவே பதுங்கு குழிகள், மணல் மூட்டைகள், உலங்கு வானூர்தி (ஹெலிகொப்ரர்) விசிறிகள் சுழலும் சப்தம், இயந்திரத் துப்பாக்கிகள் சட சடக்கும் சப்தம் ஆகியனவும் அவர்களின் அன்றாட நிகழ்வுகளாக உள்ளன. இலங்கையின் வட புலத்தைச் சேர்ந்த 10 வயது நிரம்பிய சிறுவர் ஒருவரால் ஒரு துப்பாக்கியிலிருந்து மற்றைய துப்பாக்கியின் வேறுபாட்டை வெறுமனே அதன் ஒலியை வைத்தே அறிய முடியும். எறிகணை (ஷெல்) ஏற்படுத்தக் கூடிய அழிவை அந்தச் சிறுவர்கள் நன்கு அறிவர்.

இது மட்டுமல்ல, இந்தப் பகுதிகளில் வாழ்கின்ற சிறுவர்களுக்குச் சுகாதார, கல்வி வசதிகளுக்கான வழிகளும் அரிதாகவே உள்ளன. பல இடங்களில் வகுப்புக்கள் மரங்களின் கீழ் அல்லது தீக்கிரையாக்கப்பட்ட எலும்புக் கூடு போன்றுள்ள கட்டிடங்களிலேயே நடத்தப்படுகின்றன. பாடசால வரவு குறைவு, உரிய காலத்திற்குரிய கல்வியைப் பயிலாது, முன்னதாகவே பாடசாலையை விட்டு விலகுவோரின் வீதம் நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகம் ஆகும்.

பாரிய அளவிலான இடப்பெயர்வுகள் காரணமாக ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதுடன் அவ்வாறு பணி புரிய இருப்பவர்களும் கூடவே பாரிய மன உளைச்சல்களுக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றனர். விஞ்ஞான பாடங்களுக்குப் பாவிக்கப்படும் பொருட்கள் மீதான இராணுவத் தடைகள் காரணமாகப் பாடவிதானம் பாரிய பின்னடைவைக் கண்டுள்ளது.



இராணுவ மோதல் நிலைமைகளின் கீழ் சிக்குண்டுள்ள சிறுவர்கள் முயன்று வெற்றி பெறும் பொறிமுறைகளை நன்கு தெரிந்து கொண்டுள்ளார்கள். அவை சில வேளைகளில் பாடசாலைத் தரங்களிலும், வகுப்புக்களிலும் பிர திபலிப்புக்களைச் செய்வதுண்டு.

வெளிப் பார்வைக்குச் சுமூக நிலை உள்ளதாகக் காணப்படுகின்ற மட்டக்களப்புப் போன்ற பகுதிகளில் யுத்தம் பற்றிய சிந்தனைகள் வெகு தூரத்தில் இல்லாத பின்னணியில் பெற்றேரர் - பிள்ளை தொடர்பாடலானது ஒரு நல்ல அறிகுறியே. சிறுவர்கள் தனியார் (ரியூஷன்) வகுப்புக்கள் தவிர வேறு எங்கும் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. சிறுவர்கள் வெளியே விளையாடுவதைக் காண்பதென்பது அரிதான காட்சி ஒன்றாகும்.

பெற்றோரின் அச்சத்தைப் போக்குவதென்பது முடியாத காரியமாகும். கடந்த மாதம், மட்டக்களப்பிலுள்ள பௌத்த ஆலயமொன்றில் நடைபெற்ற மதஒன்று கூடலொன்றின் போது அந்த இடத்தில் குண்டொன்று வெடித்ததால் அது அவலத்தின் முடிவடைந்தது. கொல்லப்பட்ட 22 பேரில் 09 பேர் சிறுவர்கள் ஆவர். வேறு 06 சிறுவர்கள் தாக்குதலினால் காணப்பட்டார்கள்.

ஆனால் சிறுவர்களுக்கோ, அவர்கள் வாழ்கின்ற வீடுகளின் உள்ளேயும் கூடப் பாதுகாப்பு இல்லை. அந்தச் சம்பவம் நடைபெற்ற சில தினங்களின் பின்பு, மட்டக்களப்பிற்குத் தென்புறமாக 02 கி. மீ. தொலைவிலுள்ள கல்லடி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் இயக்கம் ஏவிய எறிகணைகள் (மோட்டர்), முகாமிற்கு அருகேயுள்ள வீடொன்றினுள் வீழ்ந்து 03 சிறுவர்கள் கொல்லப்பட்டதுடன், ஒரு குழந்தை உட்பட மூவர் காயப்படுத்தப்பட்டனர்.

மோதல் நடைபெறும் பகுதிகளிலுள்ள சிறுவர்களின் பிரதான வீழ்ச்சிக்கு அல்லது பின்னடைவுக்குக் குடும்பமே காரணமாகும். ஆனால் பெற்றோர் அளவுக்கு அதிகமான மன உளைச்சல் காரணமாகத் தமது 100 சதவீதத்தையும் தமது வாரிசுகளுக்கு அளிக்க முடியாத நிலையில் உள்ளார்கள். உண்மையிலேயே, உறவினர்களை அடிக்கடி சந்திப்பது என்பது சிறுவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்ற ஒரு விடயமாக இருந்த போதிலும், முழுக் குடும்ப வலையமைப்புமே மிகவும் சின்னா பின்னமாகி, வலுவற்றுப் போயுள்ளது.

மோதல் பகுதிகளுக்கு வெளியேயும் கூட, இலங்கையின் வட கிழக்கை விடக் குடும்பம், பாடசாலை, சமூகம் என்பன உறுதியாக உள்ள துணைக் கட்டமைப்புக்கள் இருந்தும் கூடச் சிறுவர்கள் மீதான யுத்தச் செயல் விளைவுகள் பல்வேறு விதமான வடிவங்களில் இருக்கவே செய்கின்றன.

இலங்கையின் தென் பகுதிகளில் சோதனைச் சாவடிகள், பெருந் தொகையினரான படையினர் அல்லது பொலிசாரின் பிரசன்னம் சிறுவர்கள் மத்தியில் ஆர்வத்தைத் தூண்டுகின்றதாய் அமைகின்றன.

இலங்கையின் தென்பகுதிக் கிராமங்களில் உள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்கள் யுத்தத்தினால், படையினரான தமது தகப்பனையோ, சகோதரனையோ இழந்திருக்கின்றனர். வட பகுதியில் உள்ள சிறுவர்களைப் போலவே இலங்கையில் தென் பகுதியில் உள்ள சிறுவர்களும் கூடவே குண்டுகள் காரணமாக, அச்சம் காரண மாக வெளியே சென்று விளையாட அஞ்சுகின்றார்கள். பெற்றோர் தமது பிள்ளைகளைத் தமது கண்காணிப்பின்றி சிறிது நேரம் விடக்கூட அஞ்சு கின்றார்கள்.

ஆனர் இலங்கையில் நடைபெறும் மோதலில் சிறுவர்கள் மீதான செயல் விளைவுகளில் உண்மையிலேயே கவலை தருகின்ற விடயம் என்னவெனில், வடபகுதியானாலும் தென்பகுதியானாலும் சிறுவர்களின் மனப்பாங்கு உருவாக்கத்தின் மீது படிப்படியான பாதகமான செயல் விளைவுகளை இந்த யுத்தம் உருவாக்குகின்றது என்பதேயாம்.

இன்றைய தலைமுறையின் மீதும், அடுத்த தலைமுறையின் மீதும் இந்த மோதல் செயல் விளைவுகளின் நீண்ட காலப்பயன் அல்லது விளைவுகள் பற்றி இலங்கை இப்போது தான் சிந்திக்கத் தொடங்கியுள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, சமூகத்தொடர்பாடல் ஆகிய சந்தர்ப்பங்களை நழுவ விட்ட இலங்கைச் சிறுவர்கள் பெரியவர்களாக வளரும் போது அவை அவர்களின் பழக்க வழக்கங்களில் பாரிய செல்வாக்கைச் செலுத்தும் என்பது நிச்சயமானதாகும்.

**நிருபமா சுப்ரமணியம்**

*(நன்றி த இந்து 23-07-2000)*

*தொகுப்பு- சி. வி. வினோத்*

---

# அடிப்படை வசதிகளற்ற வவுனியா வைத்தியசாலை

- ☆ இருப்பதோ ஒரு குழாய் கிணறு.
- ☆ 50 வைத்தியர்கள் தேவையான இடத்தில் 24 பேரே உள்ளனர்.
- ☆ ஒரு விஷேட நிபுணத்துவ வைத்தியரும் இல்லை.
- ☆ மலசல கூடப்பக்கம் போக முடியாது, துர்நாற்றம்.
- ☆ இயக்கபாணியில் சிற்றூழியர்கள்.

வன்னி மாவட்டத்தில் அவசர நோய்களுக்கு சிகிச்சை பெற வவுனியா அரசினர் ஆதார வைத்தியசாலை மட்டுமே உள்ளது. பொதுவாக போர்ச் சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்களும், பாதுகாப்பப்புப்படைப் பிரிவினரும் அவசர சிகிச்சை பெற இங்கு வருகின்ற னர். வன்னியில் தொற்றுநோய்களான மலேரியா, விஷக்காய்ச்சல், வயிற் றோட்டம் என்பன வெகு விரைவில் பரவுகின்றது. இவற்றிற்கு சாதாரண குளிசையொன்றைக் கூட வறியவர்கள் இங்கு தான் பெற்றுக் கொள்ள வேண்டும். முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகள் ஒழுங்காக இயங்காத காரணத்தினால் வன்னி பெருநிலப்பரப் பில் உள்ள நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலைக்கே சிகிச்சைக்காக வர வேண்டியுள்ளது. இவர்கள் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருவதும் கடினம், திரும்பி போவதும் கடினம். பாதுகாப்பு என்னும் இரும்புக் கைகள் இவர்களையும் பாதிக்கின்றது. வன்னி வாழ் மக்களின் உயிர்காப்பிற்கு என இருக்கும் வவுனியா ஆதார வைத்தியசாலையின் இன்றைய நிலை என்ன?

இது ஒரு வைத்தியசாலையாக இல்லை. மாபெரும் நரகம் என்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்கள் கூறுகின்றனர். வடிகாலெங்கும் துர் நாற்றம் மலசல கூடங்கள் ஒழுங்காக இல்லை. நீர் இல்லாமல் மலசல கூடங்கள் நாற்றமெடுக்கின்றன. நோயாளர்கள் முகங் கழுவுவதற்கு கூட நீர் இல்லாமல் அவதிப்படுகின்றனர். குழாய்களில் நீர் வருவதில்லை. வைத்தியசாலையில் ஒரு குழாய் நீர் கிணறே உள்ளது. இதிலிருந்து பெறப் படும் நீரே 9 வாட்டுகளுக்கு பயன்படுகின்றது.

கிணற்றில் இருந்தே முழு வைத்தியசாலைக்கும் நீர் பெறப்பட்டது. ஆனால் நீர் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது. இது தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகள் உரிய இடத்தில் முறைப் பாடு செய்தும் பயனில்லை. தண்ணீர் பிரச்சினை கார ணமாக வைத்தியசாலை அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் காரணமாக ஒரு நீர் இறைக்கும் இயந் திரம் வழங்கப்பட்டது. வைத்தியர்களின் பாவனைக்கே இது போதுமானது. சவச்சாலை, பிரசவ வாட்டிற்கும் நீர் இல்லாத பஞ்சம் நிலவுகின்றது.



சவச்சாலையில் நீர் இல்லாத காரணத்தினால் இரத்தம் தட்டுத்தட்டாக உறைந்து போயுள்ளது.

சத்திர சிகிச்சைப் பிரிவில் விசேட சத்திர சிகிச்சை நிபுணர்கள் எவரும் இல்லை. இதனால் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்கள் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் யுத்தத்தால் பாதிக்கப்படுகின்ற பாதுகாப்பு படையினரும், பொது மக்களும் போதிய வைத்திய வசதி இல்லாத காரணத்தால் அனுராதபுரம், குருநாகல், கொழும்பு போன்ற வைத்தியசாலைகளை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. வவுனியா வைத்தியசாலைக்கு ஐம்பது வைத்தியர்களாவது அவசியம் தேவை ஆனால் இருபத்துநான்கு பேரே இருக்கின்றனர். மூன்று வைத்திய நிபுணர்களுக்கு வெற்றிடங்கள் இருந்தாலும் ஒருவரேனும் இல்லை. என்பத்தியேழு தாதிகள் சேவையாற்ற வேண்டிய இடத்தில் ஐம்பத்து நான்கு பேர்களே உள்ளனர். மேட்டன், சிஸ்டர் ஒருவர்தானும் இல்லை. வாட்டுகள் ஆறு இருக்கின்றது. தற்காலிகமாக மூன்று வாட்டுகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் எவ் விதபிரயோசனமும் இல்லை. நோயாளருக்கான 189 கட்டில்களே இருக்கின்றது. ஆனால் நோயாளர்கள் 425 பேர் தங்கி சிகிச்சை பெறுகின்றனர்.

வெளி நோயாளர் பிரிவில் தினமொன்றிற்கு சுமார் ஆயிரம் பேராவது சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களில் இருநூற்றி முப்பது பேரளவில் வாட்டில், தங்க வைக்கப்படுகின்றனர். விரும்பியோ விரும்பாமலோ இவ் நோயாளர்கள் இங்கு தங்கி சிகிச்சை பெற வேண்டி துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வைத்தியர்களையும், நோயாளர்களையும் தவிர்த்து வைத்தியசாலை ஊழியர்கள் இதனால் பெரும் இன்னல்களுக்கு முகங் கொடுக்கின்றனர். இவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. இங்கு எந்தவொரு வைத்தியரும் சேவையாற்ற விரும்புவதில்லை. இதற்கு



பல காரணங்கள் உண்டு. இங்குள்ள பாஸ் நடைமுறையும இதற்கு காராண மாகும். வைத்தியர் மூன்று மாதத் திற்கு ஒருமுறை வதிவிட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். இது வெரும் சிரமமான விடயம்.

இதற்காக அலைந்து திரிவதிலேயே அரைவாசி காலம் முடிந்து விடும். தங்குமிட பொது வசதிகள் இல்லை. விஷேட நிபுணத்துவ வைத்தியர்கள் மாத்திரமல்ல சதாரண வைத்தியர்களும் சேவையாற்ற முடியாத நிலையில் உள்ளனர். வைத்தியர்கள் தங்கும் விடுதிகள் ஒழுங்காக இல்லை அவை குடும்பங்கள் இருக்கக் கூடிய நிலையில் இல்லை. இதற்கு ஐந்நூறு ரூபா வாடகையாக அறவிடுகின்றனர். மேலும் மின்சாரம், நீர் பாவனைக்காக ஐந்நூறு ரூபா அறவிட உள்ளனர். இவ்வாறான நிலையில் வைத்தியர்கள் சேவையாற்ற வருவார்களா?


இங்கு தேவைப்படும் சிற்றூழியர்களில் மூன்றில் ஒரு வீதத்தினரே இருக்கின்றனர். இவர்களில் சில பேர் தமிழ் இயக்கங்களின் ஆதரவாளர்களாகும். இவர்கள் இங்கு தேவையற்ற சில பிரச்சினைகளை எழுப்புகின்றனர். இவர்களால் வைத்தியசாலை நிர்வாகத்தை திறம்பட செய்ய முடியாமல் இருக்கின்றது. எல்லாவற்றிலும் இவர்கள் தலையிடு கின்றார்கள். அடுத்து வைத்தியசாலையில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படுகின்றது. இக் கட்டடத்தை கட்டுவதற்கு ஒப்பந்தம் செய்த நிறுவனத்தையே பெரும் மோசடி செய்துள்ளது. கட்டிடச் சுவரில் உள்ள வெடிப்புகளே இதற்கு சான்று பகரும்.

> வவுனியா வைத்தியசாலையை சேலைன் கொடுத்து உயிர்ப்பிக்க முடியாது. விசேட நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியாக்களாலேயே அதற்குச் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும்.
> அல்லாது போனால் வைத்தியசாலையின் மரணத்தை யாராலும் தடுக்க முடியாது.


**எஸ்.பி.என்**




மகேந்திர சௌத்ரி



லைசெனியா குராசே



அடல்பிஹாரி வாஜபாய்



ஜோர்ஜ் ஸ்பெயிட்

# புதிய அரசு பதவியேற்ற பிஜியில் காணாமல் போய்விட்ட அமைதி!

ஞானரதன்



> தனக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை அறியாமல் தன்னிடமிருந்த ஒரே ஒரு பிடியான பணயக் கைதிகளை விடுவித்த ஸ்பெயிட், ஆயுதங்களையும் ஒப்படைத்தார். உண்மையில் இராணுவத்தின் கைகள் ஓங்கிவரும் நிலையில் ஸ்பெய்ட்டுக்கு இருந்த ஒரே வழியும் இதுதான்...! ஆனால் ஸ்பெய்ட்டைப் பொறுத்தவரையில் இது அவருக்குச் சரணாகதியாகிவிட்டது.

பிஜியின் புரட்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பெயிட்டின் ஆதரவாளர்களால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் மகேந்திர சௌத்திரி உட்பட இருபத்தியேழு பேரும் விடுதலை செய்யப்பட்ட போதிலும். பிஜியின் நிலைமைகள் தொடர்ந்தும் மோசமடைந்தே வருகின்றது. இராணுவ ஆட்சியாளர்களுக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில். ஸ்பேயிட்டின் முக்கியமான மூன்று கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும். பின்னர் ஸ்பெயிட் கைது செய்யப்பட்டுள்ளமையும். அதனைத் தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைகளும் அந்நாட்டில் அமைதி வெகு அருகில் இல்லை என்பதையும் அந்நாட்டின் இந்திய வம்சாவழியினர் ஆபத்தான நிலையில்தான் தொடர்ந்தும் இருக்கின்றார்கள் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. அதே வேளையில் இராணுவ ஆட்சியாளர்களுடனான பலப் பரீட்டையில் ஸ்பெயிட் தலைமையிலான புரட்சியாளர்கள் பலவீனமடைந்து வருவதையும் காண முடிகின்றது.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த மகேந்திர சௌத்ரி பதவியிலிருந்து அகற்றப்பட வேண்டும், பல இனத் தவர்களையும் உள்ளடக்கும் விதமான தற்போதைய அரசியலமைப்பு நீக்கப்பட வேண்டும். ஸ்பேய்ட்டுக்கும் அவரது ஆதர வாளர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்பனவே புரட்சியாளர்களால் முன்வைக்கப்பட்ட முக்கியமான 3 கோரிக்கைகளாகும். இந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாக இராணுவத்தினர் உறுதியளித்ததைத் தொடர்ந்து தம்மிடம் பணயக் கைதிகளாக இருந்தவர்களை விடுதலை செய்த புரட்சியாளர்கள், பாராளுமன்றக் கட்டடத்தில் வைத்து பெருந்தொகையான ஆயுதங்களையும் ஒப்படைத்தார்கள். இந்த ஆயுதங்கள் இராணுவத்தினரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டவையாகும். அதேவேளையில், இராணுவத்தில் ஒரு பிரிவினரும் புரட்சியாளர்களுக்கு ஆதர வாக இருந்துள்ளார்களா? என்ற கேள்வியையும் இந்த நவீன ரக ஆயுத ஒப்படைப்பு எழுப்பிவிட்டுள்ளது.

தனக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை அறியாமல் தன்னிடமிருந்த ஒரே ஒரு பிடியான பணயக் கைதிகளை விடுவித்த ஸ்பெயிட் ஆயுதங்களையும் ஒப்படைத்தார். உண்மையில் இராணுவத்தின் கைகள் ஓங்கிவரும் நிலையில் ஸ்பெய்ட்டுக்கு இருந்த ஒரே வழியும் இதுதான்...! ஆனால் ஸ்பெய்ட்டைப் பொறுத்தவரையில் இது அவருக்குச் சரணாகதியாகிவிட்டது.

பணயக் கைதிகள் விடுதலையுடன் பிஜியின் அரசியல் அரங்கில் அடுத்த காட்சி ஆரம்பமாகியது. சமூகத்திலுள்ள முக்கியஸ்த்தர்களின் சபை எண்பது வயதான ரட்டு ஜோசேபா இலோயில்யோவை ஜனாதிபதியாக நியமித்தது. இலோயில்லோ மிகவும் நோய்வாய்ப்பட்ட ஒருவர். ஒரு வங்கி அதிகாரியான லைசெனியா குராசே பிரதமராக நியமிக்கப்பட்டார். 32 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சர வை ஒன்று ஜூலை 19 ல் நியமிக்கப்பட்ட போதிலும், ஸ்பெயிட்டின் எதிர்ப்புக் காரணமாக அது பதவியேற்கவில்லை. பின்னர் கடந்த 27ம் திகதி பலத்தபாதுகாப்புக்கு மத்தியில் பதவியேற்றுக்கொண்ட குராசே இருபது உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சர வை ஒன்றையும் அறிவித்தார். இவர்கள் அனைவரும் பழங்குடியினர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைவிட எட்டு உதவி அமைச்சர்களையும் அவர் நியமித்தார். இதில் ஒருவர் இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர்.

இந்த நியமனங்களால் திருப்தியடையாத ஸ்பெயிட் ஆட்சியாளர்களுக்குத் தொடர்ந்தும் தலையிடியைக் கொடுக்கத் தொடங்கினார். தற்போது மலேஷியாவில் பிஜியின் தூதுவராகக் கடமையாற்றும் அடி சமனுனு தலக்குளியைப் பிரதமராக நியமிக்க வேண்டும் என்ற ஸ்பெயிட்டின் புதிய கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராகவில்லை. ஸ்பெயிட்டின் தீவிர ஆதரவாளரும் விசுவாசியுமான அடி, "பாவு" என்ற சமூகத்தின் முக்கியஸ்த்தர். அவரைப் பிரதமராக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படாமையால் ஆத்திரமடைந்த ஸ்பெயிட் தனது ஆதரவாளர்கள் சகிதம் சுவாவிலுள்ள கலாபு என்ற கிராமத்துக்கு பாதுகாப்பு நோக்கங்களுக்காக இடம் மாறியதுடன், தனது கோரிக்கை நிறை வேற்றப்படாவிட்டால் மேலும் வன்முறை கள் இடம்பெறும் எனவும் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்தார்.

இவரது இந்த அறிவிப்பு இராணுவத்தினருக்கு அச்சுறுத்தலைக் கொடுத்த அதேவேளையில் ஸ்பெயிட்டை இனியும் விட்டுவைப்பது நல்லதல்ல என்ற உணர்வையும் ஏற்படுத்தியது. ஜூலை 26ல் ஸ்பெயிட்டும் அவரது 369 ஆதர வாளர்களும் கைது செய்யப்பட்டார்கள். ஸ்பெயிட் இதன் பின்னர் அருகேயுள்ள இரண்டு தீவுகளில் மாறிமாறி சிறை வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட அவரின் ஆதரவாளர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விசார ணைகளின் பின்னர். தண்டப் பணம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு வருகின் றார்கள். ஆனால் தீவிர ஆதரவாளர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஸ்பெயிட்டின் கைதைத் தொடர்ந்து எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே, வன்முறைச் சம்பவங்களால் பிஜி மீண்டும் ஒரு முறை அதிர்ந்துள்ளது. இந்தியர்கள் பலர் பணயக் கைதிகாளகப் பிடிக்கப்பட்ட போதிலும் இராணுவத்தின் தலையீட்டால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இதனைவிட இராணுவ முகாம் ஒன்று கூட புரட்சியாளர்களால் கட்டுப்பாட்டுள்குள் கொண்டு வரப்பட்ட போதிலும், பின்னர் அதனையும் இராணுவத்தினர் மீளக் கைப்பற்றிக் கொன்டார்கள். இவை அனைத்தும் ஸ்பெயிட்டின் ஆதரவாளர்கள் பலவீனமடைந்து செல்வதன் வெளிப்பாடாகவே இருந்தது. இருந்த போதிலும் அவர்கள் பாரியளவிலான வன்முறைகளில் ஈடுபட்டுள்ளார்கள். தலைநகர் சுவாவில் இந்திய வம்சாவழியினருக்குச் சொந்தமான பல வீடுகள் சூறையாடப்பட்டுள்ளன. மேலும் பல எரிக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. தமது நிலைமை பலவீனமாக இருந்தாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஸ்பெயிட்டின் ஆதரவாளர்கள் பெருமளவிலான வன்முறைகளில் ஈடுபடக் கூடிய சாத்தியக் கூறுகளே காணப்படுவதாக பிஜியிலுள்ள ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வன்செயல்களை ஒரே யடியாகக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரக்கூடிய நிலையில் இராணுவத்தினர் இருக்கின்றார்களா?

பிஜியின் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்ரி. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவது கடினமாக உள்ளது எனவும், அதற்கு வெளிநாட்டு உதவிகள் அவசியம் எனவும் வலியுறுத்தியிருக் கின்றார். பிரதமர் குராசேயின் நிர்வாகத்தால் சட்டம் ஒழுங்கைப் பேண முடியாத பட்சத்தில், ஐக்கிய நாடுகள் போன்றவற்றின் உதவி நாடப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார். இதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பே பொருத்தமானது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள அவர் இருந்தபோதிலும் பிஜியின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுமாறு தான் யாரையும் கேட்டுக்கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இராணுவத்தைப் பொறுத்தவரையில், அவர்களின் செயற்பாடுகள் சரியானவை என்றே பெரும்பாலான நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. முதலில் பதவி கவிழ்க்கப்பட்டு பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த பிரதமர் சௌத்ரியை விடுவிப்பதில் அவர்களது கவனம் இருந்தது. அதனைத் தொடர்ந்து இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைத்துக் கொள்வதிலும், இந்திய வம்சாவழியினருக்குப் பாதுகாப்புக் கொடுப்பதிலும் அவர்களது கவனம் இருந்தது. ஆனால் நிலைமைகளை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாததுதான் அவர்களது பிரச்சினை! அடுத்ததாக அவர்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியது, முன்னைய அரசியலமைப்பை மீண்டும் நடைமுறை க்குக் கொண்டுவ்ருவதுதான்.

அதேவேளையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்திரியோ மற்றொரு பிரச்சினையை இப்போது கிளப்பியிருக்கின்றார். அதாவது இடைக்கால அரசாங்கத்தை நிராகரித்துள்ள செள்த்ரி, பிஜியில் அரசியல் யாப்பின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் தன்னுடையதெனவும் ஆட்சி அதிகாரம் தன்னிடம் தரப்பட வேண்டும் எனவும் கேட்டிருக்கின்றார். இல்லையெனில் நாடு கடந்த நிலையில் அரசாங்கம் ஒன்றை த்தான் அமைத்துக் கொள்வது தவிக்க முடியாததாகிவிடும் எனவும் அவர் எச்சரித்திருக்கின்றார். ஆனால் அவரது இந்த முயற்சிக்கு சர்வதேச ஆதரவு எந்தளவுக்கு உள்ளதென்பது தெரியவில்லை. இவ்வார முற்பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள அவர் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட்டுடனான சந்திப்பின் போதும் இக்கருத்தைத்தான் வலியுறுத்தினார் . ஆனால் இந்தப் பிராந்தியத்தில் ஒரு வல்லரசாகக் கருதப்படும் அவுஸ்திரே லியா இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. ஆனால் சௌத்ரி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், அடுத்ததாக எவ்வாறான அரசியல் நடவடிக்கைகளை முன்னேடுப்பது என்பதில் குழம்பிப்போயுள்ள சௌத்ரி இம்மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்கு வரவுள்ளதாகவும் தெரிகின்றது.

பிஜி தொடர்பான எந்த ஒரு சர்வதேச நிலைப்பாட்டுக்கும் முன்னோடியாக இருக்கக் கூடியது அவுஸ்திரேலியா எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கின்றது என்பதுதான் அதனால்தான் சௌத்திரியும் முதலில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று நிலைமைகளை நாடி பிடித்துப் பார்த்துள்ளார். நாடு கடந்தநிலையில் அரசாங்கம் ஒன்றை அமைக்கும் சௌத்திரியின் திட்டத்தை நிரகூரித்த அவுஸ்திரேலியப் பிரதமர் இவ்விடயத்தில் அவுஸ்திரேலியா நியுசிலாந்து அமெரிக்கா ஆகியன எடுக்கும் நடவடிக்கைகளே போதுமானவை எனத் தெரிவித்திருக் கின்றார். பிஜி நிலைமைகள் தொடர்பாக சௌத்ரியுடன் விரிவாக ஆராய்ந்த அவர் பிஜியின் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது தொடர்பாக சௌத்திரி கொண்டுள்ள கவலையைத் தானும் பகிர்ந்து கொள்வதாகவும் தெரிவித்திருக்கின்றார். ஆனால் பிஜி மிகவும் வறிய நாடு என்பதால் அதன் மீது தடைகளை விதிப்பது மோசமான நிலைமைகளை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இருந்த போதிலும் பிஜியில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பிராந்தியத்தின் ஸ்திரத் தன்மையையும் பாதிப்பதாக இருப்பதால் வரையறுக்கப்பட்ட சில பொருட்களுக்கான தடையை விதிப்பது தொடர்பாக அவுஸ்திரேலியா ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. பிஜி தனது வர்த்தக நடவடிக்கைகளில் ஐம்பது வீதமானதை அவுஸ்திரேலியாவுடனேயே மேற்கொள்கின்றது. எனவே, அதன் மீது விதிக்கப்படும் முழுமையான தடைகள் பாரியளவிலான விளைவுகளைத்தான் ஏற்படுத்துவதாக இருக்கும். இந்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அவுஸ்திரேலியாவுடன் சுமுக உறவுகளைப் பேணுவதற்கே பிஜியின் இடைக்கால நிர்வாகம் முயல்வதாகத் தெரிகின்றது. இதற்காக பிஜியின் வெளியுறவு அமைச்சர் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார்.

ஸ்பெயிட்டின் கைதுடன் பிஜியின் பிரச்சினை முடிவுக்கு வந்து விடவில்லை. இவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கூட இந்திய சமூகத்தினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தீவிரமடைந்து கொண்டே செல்கின்றன. காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே பிஜியில் இந்திய சமூகத்தவர்கள் இராணுவம் பொலிஸ் போன்றவற்றிலிருந்த ஒதுக்கிவைக்கப்பட்ட நிலைதான் காணப்படுகின்றது. சுதந்திர த்துக்குப் பின்னர் இந்தியர்கள் பொலிஸ் படைக்குத் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் அது மிகவும் குறைந்த தொகையாக இருப்பதுடன் குறைந்த தரங்களிலேயே அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இராணுவத்திற்கு இந்தியர்கள் தெரிவு செய்யப்படாத நிலைமைதான் இப்போதும் தொடர்கின்றது. பொலிஸ் பிரிவிலுள்ள இந்திய வம்சாவழியினர் கூட அதிகாரங்கள் அற்றவர்களாகத்தான் உள்ளார்கள். இந்திய சமூகத்தவர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலைமையைத்தான் இது உணர்த்துகின்றது.

பிஜியைத் தவிர இந்தப் பிராந்தியத்திலுள்ள கயானா, றினிடாட்-ருபாகோ சுரினாம் மற்றும் மொறிசியஸ் போன்ற நாடுகளிலும் பெருமளவிலான இந்திய சமூகத்தினர் வசிக்கின்றார்கள். தமது நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனப்போக்கு இவர்களிடம் இப்போது ஏற்பட்டு வருவதையும் காணக் கூடியாதாக இருக்கின்றது. இந்தப் பிராந்தியத்தில் மட்டுமன்றி வேறு பல நாடுகளிலுமுள்ள இந்திய வம்சாவழியினர் கடந்தகாலங்களில் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்குமுறை க்குள்ளான சந்தர்ப்பங்களில் எல்லாம் இந்தியா பெரிதாக எதனையும் செய்துவிடவில்லை. கடந்த மார்ச் மாதம் மொறீசியஸ் சென்றிருந்த பிரதமர் வாஜ்பாய் இந்து சமுத்திரம் எம்மைப் பிரித்து வைத்தாலும் அவர்களது கரை யிலிருந்து விடுக்கப்படும் அழைப்பு அவர்களை இந்தியாவுடன் இணைத்துவிடும் என பலத்த ஆரவாரத்துக்கு மத்தியில் குறிப்பிட்டார். ஆனால் இது அவ்வளவு இலகுவானதல்ல. இந்திய சமூகத்தினர் அந்தந்த நாடுகளில் உரிய உரிமைகளுடன் வாழ்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதில்தான் அவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. ஆனால் அது சாத்தியமானதா?

# உலகம் @ தமிழ்? கணிச்சுழியோடி

என். சரவணன்



"தமிழர்கள் வாழும் உலகில் சூரியன் அஸ்தமிப்பதேயில்லை." இவ்வாறு கூறியவர் தொண்டமான். கடந்த 99ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது தமிழ் இணைய மாநாட்டில் கலந்து கொண்டபோது தெரிவித்திருந்தார். அது பொய்யல்ல. தமிழர்கள் தமக்கென சொந்த நாடற்றவர்களாக இருக்கின்ற போதும் கூட, உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழ்ந்து கொண்டும், தமிழ் மொழியின் இருப்பை உறுதி செய்வதற்கான முனைப்பையும் காட்டி வருகிறார்கள். உலகில் தமிழர்களுக்கிடையிலான தங்குதடையற்ற இணைப்பு உருவாகும் காலம் தூரத்திலில்லை. உலகமயமாக்கல் பிடியிலிருந்து ஓரளவு விலகி, தமது ஆற்றல்களை தாமே சுயமாக வளர்த்துக் கொள்வதாயிருந்தால் அதற்கு சொந்த தாய்மொழி மூலமான அணுகுமுறைகளின்றி இலகுபடுத்தல் சாத்தியமில்லை.

"கிட்டத்தட்ட 500 வருடங்களுக்கு முன் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட சமயத்தில், நூற்றுக்கணக்கான ஐரோப்பிய மொழிகள் இருந்தன. ஆனால், அவற்றை அச்சு வடிவில் கொண்டு வருவது மிகவும் கடினமான காரியமாக இருந்ததால், ஒரு சில மொழிகள் மாத்திரமே அச்சு வடிவில் வந்தன. அந்த மொழிகள் தான் இப்போது புழக்கத்தில் உள்ளன. இணையமும் அப்படித்தான். இப்போது இணையத்தில் இடம்பெறாத எந்த மொழியும், இந்த நூறு வருடங்களுக்குள் அழிந்து விடும்." இப்படிக் கூறியவர், தமிழக அரசின் தகவல் தொழில்நுட்ப பணிக்குழு தலைவர் டாக்டர் மு.ஆனந்தகிருஷ்ணன். அச்சுவடிவம் பெற்ற முதல் இந்திய துணைக்கண்ட மொழி, தமிழ் தான். அது போல, இன்று தகவல் தொழில்நுட்பத்துறையில் யுகத்தின் முன்னணி மொழிகளிலும் ஒன்றாகிவிட்டது.

தகவல் தொடர்பில் தன் தாய் நாட்டிற்கும், தாம் இருக்கும் இடத்திற்கும் இடையேயான இடைவெளியால் கவலையுற்று இருந்தனர் தமிழர்கள். "இந்நேரம் என் நாட்டில் என்ன நடக்கிறதோ?" என்ற நினைப்பு, தவிர்ப்பு என்பவற்றுடனேயே கழிகிறது காலம். ஒரு கடிதமோ, தொலைபேசியோ வந்தால் தான் தெரிகிறது சேதி. பல மணி நேரம் முதல், பல நாள்கள் வரை காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது ஒரு தகவலைப் பெற. ஆனால், இன்றோ ஒரு நொடிப்பொழுதில் - ஒரு சொடுக்கில் கணனியில் விரிகிறது உலகம். இதனால் தானோ என்னவோ, இணையம் வழி தகவல் தொடர்பு தமிழர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த 22, 23 ஆம் திகதிகளில் சிங்கப்பூரில் நடந்து முடிந்த 3வது தமிழ் இணைய மாநாடு, தமிழ் தகவல்தொழில் நுட்பத் துறையை பலப்படுத்துவதற்கான தரப்படுத்தல் பற்றிய பல முடிவுகளுக்கு வந்துள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் மீதான அக்கறையை ஆரம்பத்தில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் அக்கறையென குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், அவர்களுக்கென்றொரு சொந்த தேசமின்றிய, சொந்த வாய்ப்புகளின்றிய நிலையில் ஒரு கட்டத்திற்கு மேல் அது வளர்ந்துச் செல்லப்படவில்லை. ஆனாலும் அதற்கு வெளியில் தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ் போன்ற நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களும் தமிழ் மொழிமூலமான தகவல் தொழில்நுட்ப உருவாகத்தில் அதிக நடைமுறை வெற்றிகளை கண்டு வருகிறார்கள். இதில் தமிழக ஆய்வாளர்களின் பங்கு அதிகம்.

இந்தியாவின் மென்பொருள் உற்பத்தி வேகம் மற்றும், மென்பொருள் உற்பத்தித்திறனுடைய மனிதவள உற்பத்தியின் அதிகரிப்பு என்பன உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இன்று இந்தியா மென்பொருள் உற்பத்தியில் மாத்திரமல்ல, மென்பொருள் ஆற்றலுடைய நிபுணர்களையும் ஏற்றுமதி செய்யும் உலகின் முக்கிய நாடாகியிருக்கிறது. கடந்தவாரம் ஜெர்மனி, இந்தியாவிலிருந்து பல ஆயிரக்கணக்கான நிபுணர்களுக்கு தொழில்வாய்ப்பு அளிக்கவிருப்பதாக தெரிவித்திருந்தது. அமெரிக்காவில் 3.22 மில்லியன் இந்தியர்கள் வாழ்கிறார்கள். அங்கு 38 சதவீத டாக்டர்கள் இந்தியர்கள். 12 சதவீத விஞ்ஞானிகள் இந்தியர்கள். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவில் (NASA) 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் இந்தியர்கள். இதைவிட, கடந்த வருடம் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் சொந்தகாரர் பில்கேட்ஸ் தெரிவித்திருந்த கருத்தின்படி, தமது ஊழியர்களில் 24 சதவீத்தினர் இந்தியர்களாம். இதில் தமிழர்களது எண்ணிக்கையும் பங்களிப்பும் அதிகளவானது.

கடந்த வருடம், சென்னையில் நடந்த இந்திய அமெரிக்க உச்சி மாநாட்டின் போது அமெரிக்கத் தூதர் ரிச்சர்ட் செலஸ்டி, "வலிமை வாய்ந்த தென் பகுதி" என தலைப்புச் சூட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் கலிபோர்ணியாவில் உள்ள "சிலிக்கான் பள்ளத்தாக்கு"க்கு இணையான "சிலிக்கான் முக்கோணம்" (இதன் முனைகளாக சென்னை, பெங்களூர், ஹைதரபாத் ஆகியவை) இது என்றும் அவர் குறிப்பிட்டார். கர்நாடகாவையும், ஆந்திராவையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு தகவல் தொழில்நுட்பத்துறையில் நிபுணர்களின் பெருக்கத்தையும், குறைந்த வாழ்க்கைச் செலவு, முதலீட்டாளர்களை ஈர்க்கும் மாநில அரச கொள்கை என்பனவற்றை தமிழகம் கொண்டிருப்பதும் ஒரு சிறப்பு. 1988இல், மாத்திரம் 300 மில்லியன் மொடல்களுக்கு மென்பொருள் உற்பத்தி செய்திருக்கிறது தமிழ்நாடு. வன்பொருள் உற்பத்தி குறித்து தற்போது ஏற்படுத்தியிருக்கும் திட்டம் நிறைவேற்றப் பட்டால் 1.25 பில்லியன்களுக்கு (அதாவது இந்திய மொத்த வன்பொருள் உற்பத்தியில் 30 சதவீதத்தை) தமிழ்நாடு எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையான மென்பொருள் நிபுணர்களைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு மாநிலம் அதன் உட்கட்டமைப்பில் கணனி உபயோகத்தை விரிவாக்கியிருக்கிறது. இந்த யூலை மாதம் 24ஆம் திகதி வெளியான ஒரு ஆய்வொன்றின் படி, இந்தியாவின் இணையத் தொடர்பு 10 லட்சத்தை எட்டியுள்ளது. இணைய பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 40 லட்சங்கள் 2003ஆம் ஆண்டளவில் இணையத்தொடர்பு 1 கோடியே 10 லட்சமாகவும் இணையப் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 2 கோடியே 20 லட்சமாகவும் (இலங்கை மொத்த சனத்தொகையை விடக் கூட) உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.




தமிழ், இப்போது தகவல் தொடர்பு மொழியாக ஆகியிருக்கிறது. தமிழில் இப்போது மின்னஞ்சல் அனுப்பலாம், இணையத்தளம் உருவாக்கலாம். இணைய அரட்டை (Chat) அடிக்கலாம். தமிழில் சில தேடுதல் பொறிகள் உருவாக்கப்பட்டுள்ள (yarl.com) இது மேலும் திருத்தங்களுக்குள்ளாக்கப்படவிருக்கின்றன.) மென்பொருட்கள் தமிழில் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ் இணையப் பலகலைக்கழகம் உருவாக்கப்பட்டு வருகிறது.

இணையத்தில், தகவல் மற்றும் கருத்துப் பரிமாற்றம் படுமும்முரமாக நடக்கின்றன. இலங்கையில் நடக்கும் அரச பயங்கரவாதம் எந்தளவுதான் அரசு மறைத்தாலும் அதனை முழு உலகிற்கும் துரித வேகமாகவும், பல்லூடகங்களுக்கூடாகவும் அது பல மொழிகளாலும் சென்றடையுமளவுக்கு தகவல் தொழில்நுட்பத்தின் மீதான தமிழர்களின் ஆதிக்கம் வளர்ந்திருக்கிறது. இந்திய துணைக்கண்ட மொழிகளிலேயே தமிழில் தான் அதிகளவு இணையத் தளங்களும், மென்பொருட்களும் உருவாக்கப்பட்டுள்ளன. "இணையத்தில் ஆங்கிலமல்லாத மொழிகளிலேயே தமிழில் தான் அதிகளவில் இணையத் தளங்களும் மென்பொருட்களும் உருவாக்கப்பட்டுள்ளன. "இணையத்தில் ஆங்கிலமல்லாத மொழிகளில் முக்கியமானதாக தமிழ் ஆகியிருக்கிறது. (அடுத்ததாக ஜப்பான்,சீன மொழிகள்.) ஆசியாவின் அடுத்த பெரிய சந்தை தமிழ் தான்" என்கிறார் ஆனந்தகிருஷ்ணன். தமிழில் முதலாவது இணையப் பக்கத்தை உருவாக்கியவர், மறைந்த சிங்கப்பூர் தமிழர் நா.கோவிந்தசாமி. தமிழை, தகவல் தொழில்நுட்ப மொழியாக ஆக்குவதில் அரும்பாடுபட்டவர் அவர். தமிழ் இணையப் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், மென்பொருள் பயன்பாட்டு அதிகரிப்பும்தான் சர்வதேச, மற்றும் உள்நாட்டு நிறுவங்கள் பல தமிழ் சந்தையை குறிவைக்கின்றன. இந்த ஆண்டு வெளியிடப்பட்ட விண்டோஸ் 2000 மென்பொருளைக் கூட தமிழில் பயன்படுத்தக்கூடிய வகையில் அளிக்கப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. லோட்டஸ், ஓரக்கிள் போன்ற நிறுவனங்களும் தமது மென்பொருட்களும், தமிழில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. yahoo.com மற்றும் lycos.com போன்ற நிறுவனங்களும் தமிழில் தமது வலைப்பக்கங்களை உருவாக்கிக் கொண்டிருப்பதாக தகவல் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தமிழ் பகுதிகளின் மூலம் மொத்த சந்தையையும் வேறு கைகளுக்கு போய் சேர்ந்து விடாமல் தடுப்பதற்காக இந் நிறுவனங்கள் தாமே அவற்றை செய்து வருகின்றன.

தமிழர்களுக்கிடையேயான எத்தனையோ உட்சண்டைகள் பிரிவுகள், ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டபோதும், யாரும் தகவல் எதனையும் பெறக்கூடிய வசதிகளுள்ள தகவல் தொழில்நுட்பத்தை எந்த சக்தியும் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிவதில்லை. இந்த ஜனநாயகப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தான், தமிழர்கள் பலரையும் இதனை நோக்கி நகரச் செய்திருக்கிறது. யாரும். தனியுரிமை கொண்டாட முடியாது. யாரும் கட்டுப்படுத்த முடியாது.

இந்த வகையில், இம்முறை தமிழ் இணையம் 2000 மாநாடு அதிமுக்கிய சிறப்பைப் பெறுகிறது. இம்முறை இணையத்திற்கான ஒரே வரிவடிவம் உருவாக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அடுத்த கட்டமாக அகராதிகள், பிழை திருத்திகள், செலிகள், உடனடி எழுத்து இறக்கங்கள் என பல சோதனைகள் வெற்றிகளைத் தந்த வண்ணம் உள்ளன. வரிவடிவச் சீரமைப்பு, அறிவியல் தமிழ் சீரமைப்பு, எழுத்துரு மேம்பாடு, சீரான தமிழ்ச்சொல் பிரயோகங்கள், சீரான ஒலிபெயர்ப்பு, யாவரும் பயன்படுத்தும் கலைச்சொற்கள், ஒளிவடிவ எழுத்து மாற்றம், தமிழிலேயே தேடுதல் பொறி என புதிய கள்ங்களில் இணையத் தமிழ் ஊடுருவலுக்கான கூட்டு முயற்சியாக "சர்வதேசத் தமிழ் இணைய மாநாடு" நடந்தது.

கடந்த பத்தாண்டுகளாக நடந்து வரும், இணையத் தமிழ் வளர்ச்சியின் சோர்வற்ற தன்மையை தமிழ் இணையம் மாநாடு சுட்டிக்காட்டுகிறது. தொடர்ந்தும் புதிய முடிவுகளை நடைமுறைக்கு கொண்டுவரவும், புதிய கண்டுபிடிப்புகளுக்காகவுமாக இந்த துறையை மையப்படுதுவதற்கென "தமிழ் தகவல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச அமைப்பு" (IMFIYY) எனும் அமைப்பு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. எதிர்காலத்தில், இந்த அமைப்பின் மூலம் தான் இணை மாநாடுகள் நடத்தப்படவுள்ளன. இதன் நிறைவேற்றுக்குழுவில் 51பேர் இடம்பெறுவார்கள். முதல் தலைவராக டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இணையம் சார்ந்த தகவல் தொழில்நுட்பம் அனைத்தும், தமிழர்களையும் பரவலாக சென்றடையவும், நிலைப்படுத்தவும் வேண்டுமானால் இத்துறையை வளப்படுத்திக் கொள்வதன் மூலமே சாத்தியமாகும். இதில் வெற்றியடைந்தால் உயர் தொழில் நுட்பம், அதிகபொருள் செலவு, சாதாரண மக்களை எட்டாமை என்ற தடைகளை தாண்டியும் இணையத் தமிழ் வளரும். தொடர்ந்தும் இது ஒரு சேவை ஊடகமாக விரிவடையச் செய்யவேண்டியுள்ளது.

இம்முறை நடந்துமுடிந்த இணைய மாநாடு, தமிழை டிஜிட்டல் உலகுக்கு புகுத்துவதற்கான பிராரம்ப ஏற்பாடுகளை செய்வதனை கருப்பொருளாகக் கொண்டும், ஏலவே முடிக்கப்படாத விடயங்களுக்கு முற்றுப்புள்ளி காண்பதற்குமாக நடந்தது. தமிழக முதல்வர் கருணாநிதி அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இம்மாநாட்டை "டிஜிட்டல் உலகிற்கான திசைகாட்டி" என்றார். அவர் தமிழ் நாடுபற்றி "குறிப்பிடுகையில், ஆசியாவின் எதிர்கால தகவல் தொழில்நுட்ப வாயில் என வர்ணிக்கப்படும் தமிழகம்..." என்றார்.

இரண்டாவது நாளன்று தமிழ்க்குடிமகனின் இனமும், இணையமும் என்ற தலைப்பிலான உரையைக் கேட்க பலர் குழுமினர். 650 பேரே அமரக்கூடிய இடத்தில் ஆயிரக்கணக்கானோர் குழுமிவிட்டதால் பலரை, "நிழல் வெளி பல்கலைக்கழகம்" பற்றிய அமர்வில் டாக்டர் குழந்தைசாமி பேசுகிறார் அங்கு போங்கள் என ஏற்பாட்டாளர்கள் அனுப்பி வைத்தனர். ஒவ்வொரு நாளும் 40- 50 ஆயிரம் பேர் இந்த மாநாட்டின் சமூக மையத்தில் கலந்து கொண்டுள்ளனர். இம்மாநாட்டில் பலர் கட்டுரைகள் வாசித்திருந்தனர். டாக்டர் கண்ணன், குமார் மல்லிகார்ன், டாக்கடர் கல்யாண சுந்தரம், சிவா பிள்ளை, மணி, மணிவ்ண்ணன், திருப்பூர் கிருஷ்ணன் (அம்பலம் டொட் கொம்) என பலர் படைப்புகளை வெளியிட்டனர். இரண்டாம் நாள் தமிழ் கணனி, தமிழ் இணையம் நேற்று, இன்று, நாளை என்கிற தலைப்பில் ஆனந்தகிருஷ்ணன் வாசித்த கட்டுரை பலரால் கவரப்பட்டது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் (YAN Yin Wrr) இவர் தமிழை இணையத்தில் கொண்டுவர கோவிந்தசாமிக்கு உறுதுணையாக நின்றவர். அத்தோடு சிங்கப்பூர் தமிழ் இணையக் குழு எனும் அமைப்பை உருவாக்க பாடுபட்டவர்.) உரையாற்றும்போது, தனது முகவரி அட்டையை காட்டி இந்த அட்டை எத்தனை பேரிடம் இருக்கிறது என கேட்டார். அரங்கத்திலிருந்த அனைவரும் கையைத் தூக்கினர். அடுத்ததாக அட்டையை புரட்டி எத்தனை பேர் உங்கள் பெயர் முகவரியினை தமிழில் அச்சடித்துள்ளீர்கள் என்று கேட்டார். மயான அமைதி தான் நிலவியது. இரண்டு பேர் மாத்திரம் கையைத் தூக்கினர். "நான் மலேசியா, தாய்லாந்து, ஜப்பான், தென்கொரியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றிருக்கிறேன். அங்கே அவர்கள் ஆங்கிலத்துடன் தங்கள் தாய்மொழியையும் சேர்த்திருக்கிறார்கள். அதனை அவர்கள் பெருமையாகவும் கருதுகிறார்கள், ஆனால், இந்தியர்கள் குறிப்பாக தமிழர்கள் தமிழில் அப்படி செய்வது மிக மிகக் குறைவு. இணையத்தில் மற்ற இந்திய மொழிகளை விட தமிழ் ஒரு முக்கிய இடத்தைப் பெறப்போகிறது. அதற்கு நீங்கள் உங்கள் மொழிப் பற்றை இப்படி முகவரி அட்டை மூலமாகக் கூட வெளிப்படுத்தலாமே என்றார். இதனை ஒரு சீனர் வழிகாட்ட வேண்டியிருக்கிறது.

மாநாட்டின் இறுதியில், ஏற்பாட்டுக்குழுவின் பலருக்கும் நகல் அறிக்கையை மாநாட்டில் சுருக்கமாக வெளியிட்டனர்.

எழுத்துரு பற்றி முடிவுக்கு வராதது தான் பலருக்கும் ஏமாற்றத்தைத் தந்த விடயமாக இருந்தது. தமிழகத்திலிருந்து கலந்துகொண்டிருந்த பெரியவர் ஒருவர், "அடே போங்கப்பா, சீக்கிரம் ஒரு முடிவுக்கு வாங்கப்பா" என்ற தொனியில் தனது அதிருப்தியை தெரிவித்துக்கொண்டார். தகுதரம் இல்லாததால் கல்வி தொடர்பான பல மென்பொருட்கள் செய்ய முடியாமல் கிடப்பில் இருப்பதாக சிங்கப்பூர் ஆசிரியர் தன் ஆதங்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

எப்படியோ, மாநாட்டின் மொத்த முடிவுகளும் இன்னமும் வெளியாகவில்லை. ஆனால் எதிர்கால சந்ததியினரின் வளமான எதிர்காலத்திற்கு தாய்மொழிக் கல்வியும், தாய் மொழி மூலமான தகவல் தொழில்நுட்ப கையாளுகையும் முன்நிபந்தனையானவை. இந்த இணையம், தகவல் தொழில்நுட்பம் என்பவற்றின் அரசியல் மற்றும் அதன் பிரயோகங்கள் குறித்து தனியாக பேசப்பட வேண்டிய விடயங்கள்.அதனை தொடர்ந்து பேசுவோம்.

இக்கட்டுரைக்கு உதவிய ஆறாம் திணை, வெப்உலகம், ரெடிப், தமிழ் இணையம் மற்றும் இந்தியா டுடே, தமிழ் நெட் போன்ற இடங்களிலிருந்து பெறப்பட்ட கட்டுரைகளுக்கு நன்றி.

தமிழ் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை

அரசியல் தொடர் 8

# தமிழ்த்தேச அரசியலில் கோரமுகத்தை காட்டும் சாதியம்.

"தமிழ் அரசியல் சக்திகள் எங்களின் வீட்டுக்கு வருவார்கள், தோழமையுடன் பழகுவார்கள். உணவு உண்ணுவார்கள், வீட்டில் தங்குவார்கள். ஆனால் பதவி, திருமணம் என்று வருகின்ற போது மட்டும் தமது சொந்த வேளாள புத்தியைக் காட்டிக் கொண்டுவிடுவார்கள்"

இது, நீண்டகாலமாக விடுதலை இயக்கங்களில் பணியாற்றிய சாதியால் தாழ்த்தப்பட்ட நண்பர் ஒருவரின் கருத்து.

தமிழ்த்தேசத்தின் அக முரண்பாட்டில் சாதியம் வகிக்கும் கோரமான பாகத்தினை காட்டுவதற்கு நண்பரின் இக்கருத்து போதும் என்று நினைக்கின்றேன்.

சாதாரண மக்களைத் தவிர்த்து விடுவோம். சாதாரண மக்களில் சாதியத்தின் தொழிற்பாடானது தமிழர் தாயகம், கொழும்பு, எல்லாம் கடந்து புலம் பெயர் நாடுகளிலும் இன்று கொடிகட்டிப் பறக்கின்றது. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆதவனில் வெளிவந்த சரவணனின் நோர்வே குறிப்புகள் இதற்கு நல்ல சான்று.

ஆனால் அரசியல் சக்திகளிடமும் முன்னேறிய பிரிவினரிடமும், இது இன்றும் கோலோச்சுகின்றது என்பது தான் இங்கு முக்கியவிடயம். இந்த முரண்பாடு அரசியல் மட்டத்தில் நன்கு உணரப் பட்டுள்ளதா? தமிழ்த் தேசிய அரசியலில் இது ஒரு முக்கியமான பேசு பொருளாக்கப்பட்டுள்ளதா? அரசியலிலும், அமைப்புத் துறையிலும் இதன் ஆதிக்கத்தை களைந்தெறிவதற் கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா? தமிழ்த் தேசிய இயக்கங்கள் தமது வேலைத்திட்டத்தில் இதனையும் ஒரு முக்கிய விடயமாகக் கருதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனவா?

இது விடயத்தில் மகிழ்ச்சிப் படத்தக்க வகையில் பெரிதாக எதுவும் நடக்கவில்லை என்பதையே தமிழ்த்தேசத்தின் அரசியல் வரலாறு காட்டுகின்றது.

வெறுமனே தேசிய கோஷங்களுடன் மட்டும் வெளிப்பட்ட அரசியல் இயக்கங்கள் மாத்திரமல்ல சமூக மாற்றத்தையும் தம்முடைய கொள்கைகளாக வரித்துக் கொண்ட இயக்கங்களில் கூட இவை போதுமானளவு நடைபெற வில்லை என்பது தான் சோகமான வரலாறு.

தமிழர் மத்தியில் இன அரசியல் ஆரம்பிக்கப்பட்ட போதே, அது வேளாளத் தனத்துடன்தான் ஆரம் பிக்கப்பட்டது. சேர். பொன். இராமநாதன் அதன் சின்னமாக விளங்கினார். 1928ஆம் ஆண்டு, இராமநாதன் 79 கிராமச் சங்கப் பிரதி நிதிகளுடன் தேசாதிபதியைச் சந்தித்து பாடசாலைகளில் சம ஆசனம், சமபோசனம் திட்டத்தினை நடைமுறைப் படுத்தக் கூடாது என வலியுறுத்தினார்.

1944ம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்ட போதும் வேளாள ஆதிக்கத்தனமே அங்கு மேலோங்கியிருந்து. தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிர்வாக மட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் எவரும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதன் தலைவரான ஜீ:ஜீ. பொன்னம்பலம் தான் சைவவேளாளரின் பிரதி நிதியாக இருப்பதிலேயே அதிக ஆர்வம் கொண்டிருந்தார். சோல்பரி குழுவினர் முன்னிலையில் தமிழர் தரப்பில் சாட்சியமளிக்கும் போது தாழ்த்தப்பட்டவர்களின் அபிலாசைகளும் அதில் அடங்கவேண்டும் என கோரப் பட்டபோது அவர் அதனை நிராகரித்தார். தாழ்த்தப் பட்டவர்கள் தாமாக சாட்சியமளிக்க முனைந்தபோது அதற்கும் முட்டுக்கட்டைகள் போட்டார்.

1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றபோது இப்போக்கில் சற்று மாற்றம் ஏற்பட்டது. தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்திலேயே தீண்டாமையை ஒழித்தல் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சைவப்பாரம்பரியத்திலல்லாது, ஓரளவு ஜனநாயகத் தன்மை வாய்ந்த கிறிஸ்தவ பாரம் பரியத்திலிருந்து வந்தவராக தந்தை செல்வா இருந்தமையினால் சாதி ஒடுக்குமுறையைத் தகர்த்தல், தீண்டாமையை ஒழித்தல், என்பதில் கொள்கை ரீதியாக தந்தை செல்வா மிக உறுதியாக இருந்தார். கட்சியின் நிர்வாக மட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடமும் கொடுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஜி.நல்லையா செனற் சபைக்கு தெரிவு செய்யப்பட்டார். 1957ல் தமிழ் அரசுக்கட்சியால் சமூகக் குறை பாடுகள் சட்டம் பாராளு மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே 1977ம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில், ரி.இராசலிங்கம் உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் நடைமுறையில் தீண்டாமைக்கு எதிரான நேரடியான போராட்டங்களை தமிழரசுக்கட்சி முன்னெடுத்தது கிடையாது. இடதுசாரிக் கட்சிகளின் தலைமையில் இயங்கிய சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பன மட்டுமே போராட்டங் களை நடாத்தின. தமிழர சுக்கட்சி, நிலைமைகள் கட்டுக்கடங்காமல் செல்வதைத் தடுக்கும் வகையில் சமரசச் செயற்பாடுகளில் மட்டும் ஈடுபட்டது.

கட்சித் தலைமை மட்டத்தில் கூட தாழ்த்தப்பட்டவர்களுக்கு பெரிய பங்குகள் எவற்றையும் கொடுக்கவில்லை. முக்கியமான பதவிகள் ஒரு போதும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. மூன்றாம் தரமட்டத்தில் இருக்கும் பதவிகள் மட்டுமே வழங்கப்பட்டன. பிரதி நிதித்துவ அரசியலில் கூட ஒரு சிலர் யாழ் மாநகர சபை மட்டத்தில் மாநகரசபை உறுப்பினர்களாவதற்கு மட்டும் வழிசெய்தது. (ஜி.நல்லையாவின் செனற் சபை பிரதிநிதித்துவத்தைத் தவிர) கோப்பாய்த் தொகுதி தாழ்த்தப்பட்ட சாதிமக்களை பெரும்பான்மையாக கொண்ட தொகுதியாக இருந்த போதும் அங்கிருந்து கூட தாழ்த்தப்பட்டவர் ஒருவர் உறுப்பினராவதற்கு வழிசெய்யப்பட வில்லை. 1977இல் மட்டும் பல்வேறு நிர்ப்பந்தங்களினால் உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து ரி.இராசலிங்கம் தெரிவு செய்யப்பட் வழி செய்தது.

கட்சிக்குள் சுயமாக வளர முற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களது இளம் தலைமுறை யைக் கூட கட்சித் தலைமைப் பீடம் வளரவிடவில்லை. தமிழ் இளைஞர் பேரவை தலைவர ாக இருந்த, மயிலிட்டி சி.புஸ்பராஜா, பிரான்சீஸ் போன்றவர்கள் மேலே வளர விடாது, இந்த வகையிலேயே ஓரம் கட்டப்பட்டனர்.

உண்மையில் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு இடதுசாரிப்பிரிவு கட்சியின் ஆரம்பகாலம் தொட்டே இருந்து வந்தது. அதுவே சாதிஒழிப்பு உட்பட சமூக மாற்றத்துக்கான கருத்துக்களை தொடர்ச்சியாக முன்வைத்து வந்தது. கட்சியின் தலைமை செய்ததெல்லாம் இப்பிரிவு சக்தி பெற்று மேலே வருவதற் கான சகலபாதைகளையும் அழித்து ஓரம்கட்டியது தான்.

தமிழ்த்தேசிய அரசியல், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற் றின் கைகளில் இருந்து, இயக்கங்களின் கைகளுக்கு மாறிய போது சமூக மாற்றத் துடன் கூடிய தேசிய விடுதலை என்ற கொள்கையை முன்வைத்த இயக்கங்கள் மட்டும் சாதீய ஒடுக்க முறை யில் அக்கறை செலுத்தின. EPRLF, EROS, NLFT என்ற அமைப்புக்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இதில் EPRLF மட்டுமே நடைமுறைப் போராட்டங் களிலும் ஈடுபட்டது. EPRLF தன்னுடைய அரசியல் தளத்தினை தாழ்த்தப் பட்டவர்கள் மத்தியில் மட்டும் அதிகளவு விரிவு படுத்தியமையால் அதற்கு அது கட்டாயமாகவும் இருந்தது.

**சாதியால் ஒடுக்கப்பட்டவர்கள் அரசியல் இயக்கங்களில் தீர்மானம் எடுக்கும் தளங்களில்அதிகளவு இருக்கும் போதே அவ்வியக்கம் அதனை உணர்வு ரீதியாக முன்னெடுக்கும். இது, தேசிய இயக்கங்கள் தொடக்கம் இடதுசாரி இயக்கங்கள் வரை, எல்லாவற்றிற்கும் பொருந்தும்.**

ஆதிசங்கரர்.

ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் EPRLF மூன்றாவது மட்டத் தலைமையைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்டவர்களாகவே விளங்கினர்.

EPRLF தீண்டாமைக்கு எதிரான போராட்டம் என்ற நிலையில் இருந்து பொருளாதார ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம் என்ற நிலைக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்தினை உயர்த்தியது. சிறுப்பிட்டி கூலி உயர்வுப் போராட்டம், புத்தூர் காணிப் போராட்டம், உரும்பிராய் காணிப்போராட்டம், புன்னாலைக் கட்டுவன் பாதைப் போராட்டம் என்பன இவற்றுள் முக்கியமானவை ஆகும். இப்போராட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் EPRLF க்கு ஒரு பலமான அங்கீகாரத்தையும், தளத்தையும் எடுத்துக் கொடுத்தது. மறுபக்கத்தில், உயர் சாதியினரிடமிருந்து தூர ஒதுக்கப்படுவதற்கும் காரண மாகியது. EPRLF என்றால் பள்ளற்றை இயக்கம் என்ற முத்திரையும் அதற்குக் கிடைத்தது.

புலிகளைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சியின் தொடர்ச்சியையே பின் பற்றினர். பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது கண்டும் காணாமல் இருந்தனர். அல்லது சமரசமுயற்சிகளில் ஈடுபட்டனர். அவர்களைப் பொறுத்தவரை இத்தகைய பிரச்சினைகளை கிளறுவது தேசப் போராட்டத்திற்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதாகவே இருந்தது. இதைவிட தமது ஆயுத பலத்தினாலும், சட்டங்களினாலும் இவற்றை ஒழித்து விடலாம் என்ற கருத்தும் அவர்களிடம் மேலோங்கி இருந்தது. யாழ்குடாநாடு தமது முழுக்கட்டுப்பாட்டில் வந்தபோது இக்கருத்தின் அடிப்படையிலேயே தமிழ் ஈழ ஒறுப்புச் சட்டத்தில் தீண்டாமைக்கு எதிரான ஏற்பாடுகளைச் சேர்த்திருந்தனர்.



உண்மையில் சாதி ஒடுக்குமுறையை ஒழித்தல் என்பது, சித்தாந்த ரீதியில் ஒழித்தல், பொருளாதார ரீதியில் ஒழித்தல், என்கின்ற இரு பணிகளுக் கூடாக நடைபெற வேண்டிய ஒன்றாகும்.

சித்தாந்த ரீதியில் ஒழித்தல் என்பது தீண்டாமையை ஒழித்தல் சாதிச் சடங்குகளை ஒழித்தல், சாதி தொடர்பான கருத்து நிலைகளை ஒழித்தல் என்பவற்றுடன் தொடர்புபட்டதாகும்.

பொருளாதார ரீதியில் ஒழித்தல் என்பது, சாதி முறைமைக்கு காரணமான உற்பத்தி உறவுகளை ஒழித்தல், பொருளாதார ரீதியாக மேல்நிலையாக்கம் பெறுவற்கான வழிவகைகளை உருவாக்குதல், என்பவற்றுடன் தொடர்புபட்டதாகும்.

இவ் ஒழித்தலை, ஒரு தொடர்ச்சியான நீண்டகால வேலைத்திட்டங்களினூடாகவே மேற்கொள்ள முடியும். அதற்கு தேசத்தின் அரசியல் தலைமையிடம் போதுமானளவு திட்டங்கள் இருத்தல் அவசியம்.

அரசியல் இயக்கங்களின் அரசியலிலும், அமைப்புத் துறையிலும் அதற்கான இடம் இருக்கும் போதே, இவை தொடர்பான திட்டங்களை உருவாக்குவதற்கும் செய்படுத்துவதற்கும் வாய்ப்பு இருக்கும்.

சாதியால் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கே, சாதி ஒடுக்குமுறையின் கோரத்தை அனுபவ ரீதியாக உணர முடியும். மற்றவர்களுக்கு அவையெல்லாம் கேள்வி உணர்வே ஒழிய, அனுபவரீதியான உணர்வு அல்ல.

எனவே சாதியால் ஒடுக்கப்பட்டவர்கள் அரசியல் இயக்கங்களில் தீர்மானம் எடுக்கும் தளங்களில்அதிகளவு இருக்கும் போதே அவ்வியக்கம் அதனை உணர்வு ரீதியாக முன்னெடுக்கும்.

இது, தேசிய இயக்கங்கள் தொடக்கம் இடதுசாரி இயக்கங்கள் வரை, எல்லா வற்றிற்கும் பொருந்தும்

தமிழ்த்தேசிய அரசியலில் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான நடவடிக்கைகள் போதுமானளவிற்கு நடைபெற வில்லையென்றால் அதற்கு பிரதான காரணம் தமிழ்த்தேசிய அரசியலிலும், அமைப்புத் துறையிலும் அதற்கு போதிய இடம் கிடைக்காமையே ஆகும்.

இங்கே இப்போது எழுகின்ற கேள்வி இதுதான்!

தமிழ்த்தேசத்தின் பிரதான அகமுரண்பாடாக இருக்கின்ற சாதி ஒடுக்குமுறையை ஒழிப்பதற்கு, இனிமேலாவது நாம் என்ன செய்யப் போகிறோம்?

தொடரும்...

## தனியான அமைப்பின் தேவையை வேண்டி நிற்கும்

# மலையக மக்களின் போராட்டங்கள்!

**மலையக சமூகத்துக்குள்ளேயும் வெளியேயும் வாழ்ந்துக்கொண்டிருக்கும் சமூக அக்கறைக்கொண்டவர்கள் அனைவருக்கும் மலையக சமுதாயத்தின் பிரச்சினைகள் என்ன? தேவைகள் என்ன? என்பது பற்றி நன்கு தெரியும். எனவே, மேலும் மேலும் பிரச்சினைபற்றியே பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. ஏற்ற வியூகங்கள் அமைக்கப்பட்டு போராட்டம் உடனே முன்னெடுக்கப்பட வேண்டும்.**



தொழில் புரட்சியுடன் பிரிட்டிஷ் உயிர்தெழுந்தது. முற்றிலும் புதிதான ஒரு சமூக அமைப்பினை உலகுக்கு அறிமுகப்படுத்தியது. தனது முதலாளித்துவ வயிற்றுப்பசிக்கு உகந்த விதத்தில் பொருளாதாரக் கொள்கைகளையும் அரசியல் அமைப்பு வழிமுறைகளையும் சமூக உறவு முறை களையும் வகுத்து முன்னொருபோதும் உலகம் கண்டிராத வியக்கத்தக்க அற்புதங்களை வரலாற்றரங்கில் நிகழ்த்திக்காட்டியது. இந்த அற்புதங்களின் ஒரு நேரெதிரான விளைவுதான் இந்த மலையக சமுதாயம். மலையக மக்கள் எனக்கூறும் போது பெருந்தோட்ட பயிர் செய்கையில் உட்பட்ட தொழிலாளர்களை மட்டுமல்லாது நகர்ப்புறத் தொழிலாளர்கள் சிறு நிலவுடமையாளர்கள், வர்த்தகர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், அறிவு ஜீவிகள் ஆகியோர் உள்ளடங்கிய ஒரு சமூக அமைப்பை குறித்தாலும் யதார்த்த நிலையில் இச்சமூக உருவக்கம் (Social Formation) குழுவாக, இந்திய வம்சாவளியினராக, நாடற்றவர்களாக, கள்ளத்தோணிகளாக, இலங்கையின் அந்நியர்களாக பார்ப்பவர்கள் இவர்களை ஒரு புதிய சமூக உருவாக்கமாகவோ இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றாகவோ பார்ப்பதில்லை என்பதே உண்மையாகும்.

தொழில்புரட்சியுடன் பிரிட்டிஷ் சமூகம் உயிர்த்தெழுந்தது. ஆனால் வறுமையிலும் வரட்சியிலும் நெரிக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தினரின் வாழ்வினை அஸ்தமிக்க செய்தது. தமது கிராம எல்லைக்குள்ளேயே உணவு தேடி ஊர்ந்த இந்திய விவசாயிகள் தமது உழைப்பு சக்தியை விற்பனை செய்வதற் கும் தமது ஜீவாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்குமாக முதலாளிகளின் கைக்கூலிகளான கங்காணிமார்களை நம்பி இலங்கைக்கு வந்தனர். வெறும் நம்பிக்கையை மட்டுமே தமது சொத்தாக எடுத்துக்கொண்டு இலங்கை வந்த இம்மக்களை இலங்கை அரசாங்கமும், முதலாளித்துவ வர்க்கமும் பழிவாங்கியது இதன் பின்னர், இப்போது தோட்ட நிர்வாகமும், அரசியல் தலைவர்களும் பழிவாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் 50 வருடத்துக்கு தனியார் தோட்ட முதலாளிகள் பழிவாங்கப் போகிறார்கள். இவர்களோடு அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களும் சேர்ந்து கொண்டு இம்மக்களின் வறுமையை வெளிநாட்டில் விலைபேசி தமது வயிற்றை நிரப்பிக் கொள்கிறார்கள். இப்படி வருகின்றவர்கள் போகின்ற வர்களெல்லாம் இம்மக்களை பழிவாங்குவதற்கு காரணம் இம்மக்கள் அரசியல் ரீதியாக பலமற்றிருப்பதும், மலையக அரசியல்வாதிகளின் தான்தோன்றித்தனமான செயற் பாடுகளும், ஓரணியில் திரண்டு போராட்டங்களை முன்னெடுப்பதற்குரிய ஒற்றுமை தொழிலாளர்களிடையே இல்லாமையுமே பிரதான அடிப்படை காரணங்களாகும்.

கடந்த 18.6.2000ஆம் திகதி "ஆதவன்" பத்திரிகையில் மலையக "அரசியல் எங்கே போகிறது" என்ற தலைப்பில் திரு. ரெங்கசாமி அவர்கள் எழுதியிருந்த கட்டுரை மலையகத்தில் தற்போது அரங்கேறும் அரசியல் லீலைகளை படம்பிடித்து காட்டியிருந்ததோடு, கடைசியாக கட்டுரையாசிரியர் குறிப்பிட்டிருந்த "உண்மையில் இன்றைய மலையகத்தின் தேவை வடக்கு - கிழக்கு அரசியலின் இரண்டாவது கட்டத்தை முன்னெடுத்த தமிழரசு கட்சி போன்ற தலைவர்களும், வன்னிய சிங்கம் அமிர்தலிங்கம் போன்ற தளபதிகளும் தான். ஆறுகள் முன்னோக்கி பாய்வதில்லை. எத்தனை தடைகள் வந்த போதும் மலையக அரசியல் முன்னோக்கியே பாயும். வளர்ந்து வரும் மலையகத்தின் புதிய தலைமுறை இந்த வரலாற்று கடமையை செவ்வனே செய்யும் நாள் வெகுதொலைவில் இருக்கப்போவதில்லை" என்ற வரிகள் முற்றிலும் நிதர்சனமானவை. இவரின் வார்த்தைகள் உண்மையாக வேண்டுமானால், மலையகத்தின் படித்த கல்விமான்களும் சமூக உணர்வுமிக்க இளைய சமுதாயத்தினரும் ஒன்று சேர்ந்து ஒரு பொதுக் கொள்கையுடன் கூடிய அரசியல் அமைப்பினை முன்னெடுக்க வேண்டும்.

மலையக மக்களின் வரலாற்றினை திருப்பிப்பார்ப்போமேயானால் ஒவ்வொரு கட்டத்திலும் அர சாங்கம் மற்றும் மாறி, மாறி பதவியேற்ற அரசியல் தலைவர்களின் இனவாதப் போக்குகளால் இந்த அப்பாவி மக்கள் பழிவாங்கப்பட்டிருப்பதை காணலாம். மலையக சமுதாயத்தின் துயரமான காலக்கட்டத்தை பின்வரும் காலப்பகுதிகளாக பட்டியலிடலாம்.

1. முதலாவது 1940க்கு முன்னுள்ள காலக்கட்டம்.
2. 1948ம் ஆண்டு பிரஜாவுரிமைப்பறிப்பு.
3. 1964ம் ஆண்டு ஸ்ரீமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு பிறகானது.
4. 1972-1977க்கு பிறகான காலக்கட்டம்.

இந்த நான்கு காலக்கட்டங்களிலும் இந்த மக்களுக்கெதிராக நடைபெற்றவை. "மனித உரிமைகளை மீறிய செயல்களாகும்" ஆனால் நடந்ததென்ன முதல் 3 காலகட்டங்களிலும் இம்மக்கள் குறித்த வரலாறு.

இவர்கள் இலங்கைக்கு அளித்த பொருளாதார பங்களிப்புகள் ஒப்பந்தங்களின நன்மை தீமைகள் என்பன வற்றை காரசாரமாக விவாதித்து ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டன. இலங்கையின் இடதுசாரி சக்திகளும், மனித உரிமை விரும்பும் தனிநபர்களும், பல்கலைக்கழக பேரா சிரியர்களும், மாணவர்களும் சில சமூக ஆய்வுத்தறை - அறிஞர்களும் தங்களது சொந்த நலனுக்காகவும், சிறிது அளவு சமூகத்தின் நலனுக்காகவும் ஆய்வுகளை மேற் கொண்டனர். இவர்களும் பாரம்பரிய ஆய்வுகள் போலவே வெறுமனே வரலாறு ஒப்பந்தங்கள், மக்கள் வாழ்நிலமை, பொருளாதார நிலமை, கல்வி சுகாதாரம் என்பவற்றை உள்ளடக்கமாக கொண்டனர். ஐரோப்பாவின் மனித உரிமை விரும்பிகளும் இவ்விடயம் குறித்த பலசிறந்த ஆய்வுகளை மேற்கொண்டனர்.

1972-77ம் ஆண்டு காலப்பகுதிகளை உள்ளடக்கிய 4வது காலகட்டத்தில் இந்தியாவுக்கு திரும்பிச் சென்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டிருந்த காலக்கட்டம். அங்கு சென்ற மக்களின் நிலமை மிக மோசமாக இருந்தது. இக்காலப்பகுதியிலும் இம்மக்களின் புனர்வாழ்வு குறித்து ஆய்வுகள் வெளிவந்தன. இந்தியாவிலிருந்தபல சமூக சேவை நிறுவனங்கள் ஆய்வுகளை மேற்கொண்டன. இலங்கையிலிருந்தும் பல புத்திஜீவிகள் இம்மக்களின் நிலவரத்தை நேரில் சென்று பேட்டிக்கண்டு இம்மக்களின் வாழ்க்கை நிலவரத்தை ஐரோப்பிய சமூக சேவை நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டி இம்மக்களுக்கு பொருளாதார உதவிகள் பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு மட்டும் செய்யப்பட்டவையாக இருந்தனவேயன்றி இம்மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்ற அக்கறை யாருக்கும் ஏற்படவில்லை. இதனால் தான் இம்மக்கள் கடந்த 175 வருடகாலமாக வாழ்க்கையே பிரச்சினை என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே மேற்குறிப்பிட்ட நான்கு காலக்கட்டங்களிலும் வெளியிடப்பட்ட ஆய்வுகள் மற்றும் நூல்களில் எவையேனும் பொருளாதார கண்ணோட்டத்தையும், மனித உரிமை கண்ணோட்டத்தையும் கடந்து செல்லவில்லை. இன்றும் கூட இதே நிலை.காணப்படுவதால் தான் மக்கள் இன்னும் கூலிப்போராட்டங்களை செய்ய வேண்டிய நிலையிலுள்ளனர். இந்த நிலை மாற வேண்டும். எனவே அரசியல் இலாபம் கருதாத, சுயநலம் இல்லாத ஒரு சுதந்திரமான தேசிய அமைப்பு ஒன்றினை மலையக நலனில் அக்கறை கொண்ட கல்விமான்களள் புத்திஜீவிகள் ஆகியோர் அமைக்க முன்வர வேண்டியது மிக மிக அவசியமானதாகும். இந்த அமைப்பு பொருளாதார கண்ணோட்டத்தையும் மனிதாபிமான கண்ணோட்டத்தையும் கடந்து சென்று இம்மக்களின் பிரச் சினையை தேசிய இனச்சிக்கலில் ஒரு கூறு என்பதை உணர்ந்து அதை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க கூடிய ஒரு அமைப்பாகவும் இருக்கவேண்டும். மேலும் இலங்கையில் குடியேற்றப்பட்ட இந்த மக்கள் இலங்கையின் மக்களே. இந்த நாட்டின் தேசிய இனங்களில் அவர்களும் ஒரு பிரிவே. இவர்கள் இலங்கையின் இதர தேசிய இனங்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் சமமாக அனுபவிக்கும் தகுதி பெற்றவர்களே என்பதை உறுதி செய்வதாகவும் இவ்வமைப்பு இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

மலையக சமுதாயத்தின் துன்ப துயரங்களை தொடர்ந்து சொல்லிக்கொண்டு போனால் அது அனுமார் வாலாக நீண்டுக்கொண்டேயிருக்கும். எனவே மலையக சமூகத்துக்குள்ளேயும் வெளியேயும் வாழ்ந்துக்கொண்டிருக்கும் சமூக அக்கறைக் கொண்டவர்கள் அனைவருக்கும் மலையக சமுதாயத்தின் பிரச் சினைகள் என்ன? தேவைகள் என்ன? என்பது பற்றி நன்கு தெரியும். எனவே மேலும் மேலும் பிரச்சினைபற்றியே பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. நமது சமுதாயம் சமூக விரோதிகளால் பழிவாங்கப்படுவதை இனியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. எனவே இம்மக்களின் எதிர்காலம் பற்றிய ஒரு தொலைநோக்கு பார்வை கொண்ட ஒரு அரசியல் ரீதியான அமைப்பு கட்டாயம் தேவையென்பதை உணர்ந்து மக்கள் மயப்படுத்திய போராட்டங்களை முன்னெடுத்து உரிமைகளை வென்றெடுக்க சமூக நலனில் அக்கறைக்கொண்டவர்கள் உணர்ந்து அதற்கேற்றவாறு வியூகம் அமைத்து செயற்பட முன்வரவேண்டும்.

**செல்லத்துரை கோகிலவர்த்தனி.**

---

# "இலங்கை இந்தியர் வரலாறு"

## நூல் கூறும் தகவல்கள்

### ஒப்பந்த முறை

இந்தியாவுக்கு வெகு தொலைவில் அமைக்கப்படிருந்த குடியேற்ற நாடுகளுக்கு ஒப்பந்த முறையின் அடிப்படையில் தொழிலாளர்கள் திரட்டப் பட்டனர். அங்கு சென்ற இந்தியர்கள் நிரந்தர மாகவே வசிக்கத் தொடங்கினர். இலங்கை, மலேசியா, பர்மா ஆகிய நாடுகளை பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் தற்காலிகமாக வசிக்கும் நோக்கத்துடனேயே இந்நாடுகளில் இந்தியர் சென்று குடியேறினர். இதற்குக் காரணம் இந்நாடுகள் இந்தியாவுக்கு அண்மையில் இருந்தமையாகும். குடியேற்றங்களில் காணப்பட்ட அறுவடைநிலை, பருவகால நிலை என்பவற்றைப் பொறுத்தே இந்திய மக்கள் குடியேற்றம் நடை பெற்றது. இலங்கை, மலேயா, பர்மா முதலிய நாடுகளுக்குக் கங்காணி முறை யின் மூலமே தொழிலாளர்கள் திரட்டப்பட்டனர். இம்முறையைக் கடைப்பிடித்தமையால் தொழிலாளர்கள் இந்நாடுகளையும் சென்றடையு முன்னர் தமது சொந்தக் கிராமங்களில் வைத்தே கடனாளி ஆக்கப்பட்டனர்.

ஒப்பந்த முறைக்கும் கங்காணி முறைக் குமிடையில் சில வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் தொழிலாளர்களைப் பொறுத்தவரை யில் இரண்டு முறைகளின் கீழும் அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் ஒன்றாகவே இருந்தன.

ஒப்பந்தமுறையின்படி, தோட்ட உரிமையாளர் தமக்குத் தேவையான தொழிலாளர்களைத் திரட்டி அனுப்புமாறு இந்தியாவிலுள்ள தமது முகாமையாளனுக்கு அறிவிப்பார். அம்முகாமையாளன் தனது ஆட்களைக் கிராமங்களுக்கு அனுப்பி தேவைப்பட்ட தொகையினாரான தொழிலாளர்களைத் திரட்டுவான். அவர்கள் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அதன்படி ஐந்தாண்டுகளுக்கு அக்குறிப்பிட்ட தோட்ட உரிமையாளனுக்குக் கட்டுப்பட்டிருந்தார், அதாவது அவர்கள் வேறு தொழில்களை நாடுவதோ அல்லது வேறு தோட்ட உரிமையாளரிடம் சென்று வேலைக்கு அமருவதோ ஒப்பந்தத்தை மீறியதாக்க கருதப்படும். ஐந்தாண்டு காலம் முடிவடைந்ததும் மீண்டும் ஐந்தாண்டுகளுக்கு மறு ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும். முதல் ஐந்தாண்டுகாலம் முடிவடைந்த பின்னர் ஒப்பந்தத்திலிருந்து விடுதலையும் பெறலாம். தொழிலாளர்கள் திரட்டப்படும் போதே அவர்களுடைய சம்பளமும் நிர்ணயிக்கப்பட்டுவிடும். அதன் பின்னர் சம்பளத் தொகை மாற்றப்பட மாட்டாது. ஒப்பந்தமுறை யின் கீழ் பெண்களை விட ஆண்களே கூடிய சம்பளத்தினைப் பெற்றனர்.

சில வேளைகளில் கங்காணிகள் நேரடியாகத் தாங்களே இந்தியக் கிராமங்களுக்குச் சென்று தொழிலாளர்களைத் திரட்டினர். கங்காணி கொண்டு வந்த ஒவ்வொரு ஆளுக்கும் 5 ரூபாய் அல்லது 10 ரூபாவைத் தோட்ட நிர்வாகம் வழங்கியது. இவ்வாறான கங்காணி முறை ஏனைய ஆள் திரட்டும் முறைகளை விட ஓரளவுக்கு நன்மையானதாக இருந்தது. கங்காணி கூடிய கவனத்துடன் தொழிலாளர்களைத் தெரிவு செய்தான். அத்துடன் கங்காணிகள் கிராமங்களில் ஏற்கனவே அறிமுகமானவர்களாக இருந்தமையால் பலரும் குடிபெயர்ந்து செல்ல முன்வந்தனர். இதனால் பயமுறுத்தி ஆட்களைத் திரட்டுதல் போன்ற ஒப்பந்தமுறையின் குறை பாடுகள் நீக்கப்பட்டன. தொழிலாளர்கள் குடும்பங்களாகக் குடிபெயர்ந்து வர இக் கங்காணி முறை வழிவகுத்தது.

இலங்கையில் கோப்பிப் பயிர்ச் செய்கை ஆரம்பமான காலத்தில் தோட்ட உரிமையாளர்கள் தமது சொந்த முகாமையாளர்களை இந்தியாவுக்கு அனுப்பி அவர்கள் மூலமாகத் தொழிலாளர்களைத் திரட்டினர். ஆனால் பின்னர் தொ்ழிலாளர்கள் தாங்களாகவே நூறுபேர் வரையில் சேர்ந்து கூடி குழுக்களாகக் குடியகலத் தொடங்கினர். அவர்கள் தமக்குள் ஒருவனைக் கங்காணியாகத் தெரிவு செய்தனர். அவனே அவர்களுக்கு வழிகாட்டியாகவும் அவர்களுடைய வேலைகளை மேற்பார்வை செய்பவனாகவும் விளங்கினான். தொழிலாளர்களின் சார்பில் அவன் தோட்ட நிர்வாகியுடன் தொடர்பு கொண்டான். உண்மையில் கங்காணி என்னும் சொல்லுக்கு பல கருத்துக்கள் உண்டு. இலங்கையில் கோப்பிச் செய்கை ஆரம்பமான காலத்தில் அவன் சனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட தலைவனாக விளங்கினான். ஆயினும் தோட்ட உரிமையாளரின் முகாமையாளராக வேறுசிலரும் இருந்தனர். 1850 ஆம் ஆண்டின் பின்னரே தோட்ட உரிமையாளர்களின் முகாமையாளர்கள் என்ற அந்தஸ்த்தைக் கங்காணிகள் பெற்றனர். மூன்றாவது வகையைச் சேர்ந்த கங்காணி தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட காலங்களில் ஒரு தோட்டத்திலிருந்து மற்றொரு தோட்டத்திற்கு தொழிலாளர்களை இடம்மாற்றி அதன் மூலமாக வருவாயைப் பெற்றான்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கங்காணி முறை ஒரு முழுமையான ஆள் திரட்டும் முறையாக வளர்ச்சியுற்றிருந்தது. ஆரம்பத்தில் கோப்பித் தோட்டங்கள் அமைக்கப்பட்ட போது நிரந்தரமாகத் தொழிலாளர்களைக் குடி அமர்த்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை. குறிப்பிட்ட பருவ காலங்களில் மட்டுமே தொழிலாளர்கள் திரட்டப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப் பட்டனர். அறுவடைவேலைகள் முடிவடைந்ததும் அவர்கள் தாயகம் திரும்பினர். 1850ஆம் ஆண்டின் பின்னர் தேயிலை, இறப்பர், தோட்டங்கள் அபிவிருத்தியடைந்த போது நிரந் தரமாக வசிக்கக் கூடிய தொழிலாளர்களின் தேவை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்தது. அதன் காரணமாகக் கங்காணிகள் தொழிலாளர்களைத் திரட்டி வருவதற்கு அதிக பணத்தை முற்பணமாகத் தருமாறு கேட்டனர். குடியேற்ற நாட்டு அரசாங்கமும் தனது பல்வேறு வேலைத் திட்டங்களுக்குத் தொழிலாளர்களைத் திரட்ட முற்பட்டமையால் தொழிலாளர்களுக்கான தேவை மேலும் அதிகரித்தது. தொழிலாளர்கள் இலங்கை வந்து சேர்வதற்கு உத்தரவாதம் எதுவுமின்றி, கங்காணிகளுக்குப் பெருந்தொகைப் பணத்தை முற்பணமாக வழங்க தோட்ட உரிமையாளர்கள் தயங்கினர். எனவே முற்பணமாக வழங்கப்பட்ட தொகை அதிகரித்து சென்றதைக் கண்காணிப்பதற்காகத் தோட்ட உரிமையாளர்கள் 1898 ஆம் ஆண்டில் ஒரு சங்கத்தை நிறுவினர். இச்சங்கம் தொழிலாளர்கள் இலங்கை வந்து சேர்ந்தபின்னர் பணம் வழங்கும் முறை யொன்றை அறிமுகப்படுத்தியது. இம்முறை யினால் துரிதமாகவும் மலிவாகவும் தொழிலாளர்களைத் திரட்டிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

தோட்ட உரிமையாளர்களிடம் முற்பணம் பெற்று இந்தியா சென்ற கங்காணிகள் சில வேளைகளில் அப்பணத்தை மோசடி செய்தனர். அதன் காரணமாக அவர்களை இந்தியாவில் வைத்துக் கைது செய்து இலங்யையில் விசாரணை நடத்துவதற்கு வசதி செய்து தருமாறு 1874ம் ஆண்டில் தோட்ட உரிமையாளர்கள் அர சாங்கத்தை வேண்டினர். அரசாங்கம் அவ்வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தென்னிந்தியர்கள், கங்காணிகள் ஆகியோர் மத்தியில் பயமும், ஐயமும் ஏற்படுவதை அக்காலத்தில் தேசாதிபதியாக இருந்த சேர்.வில்லியம் கிரெகரி விரும்பவில்லை. மேலும் இலங்கைக்கு வருகின்ற தொழிலாளர்களின் தொகையும் இதனால் குறைந்து விடக்கூடும் என்று கருதப்பட்டது. எனவே தோட்ட நிர்வாகிகளின் நலன்களைக் கருத்திற்கொண்டே அவர்களுடைய வேண்டுகோள் மறுக்கப்பட்டது. அதன் பின்னர் தான் தோட்ட நிர்வாகிகள் தொழிலாளர்களைத் திரட்டுவதற்கு வேறு பாதுகாப்பான முறைகளை நாடினர்.

**வே. சண்முகராஜா B.A**



# அவன்விதி

தொடர் 7

மிகயில் ஷோலகவ்

அவன் திடீரென்று இடையில் பேச்சை நிறுத்தினான். பிறகு நிலவிய அமைதியில் அவன் விம்மலை அடக்க முயன்றதால் ஏற்பட்ட ஒலிமட்டும் என் செவிக்கு எட்டிற்று. அவனது உள்ளத்தின் நெகிழ்ச்சி என் நெஞ்சைத் தொட்டது. ஓரப் பார்வையாக அவனை நோக்கினேன். ஆனால் அவனது வறண்ட, சாம்பல் நிறக் கண்களிலே ஒரு துளி நீர் கூடக் காணவில்லை. ஏக்கத்துடன் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான். அவனுடைய சோர்ந்த பெரிய கைகள் சற்றே பதறின. மோவாய் நடுங்கிற்று; உறுதியாக மூடியிருந்த உதடுகள் கூட அவ்வாறே நடுங்கின...

"இப்படிக் கவலைக்கு இடங் கொடுக்க வேண்டாம், தம்பி. அதைப் பற்றி நினைக்கவே வேண்டாம்!" என்று மெல்லக் கூறினேன். ஆனால் அவன் என் சொற்களைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. துயரப் பெருக்கைப் பெரிதும் முயன்று அடக்கிக்கொண்டு புதுமையாக மாறிய, தழுதழுத்த குரலில் திடீரென்று சொன்னான்.

"எனது கடைசி வாழ்நாள் வரையும், சாகும் வரையும், வாழ்வின் இறுதிக் கணம் வரையும், என்னை நான் ஒருபோதும் மன்னித்துக் கொள்ளவே மாட்டேன். அவளை அப்படி எட்டித் தள்ளினேனே, அந்தக் குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது என்னுள்ளத்தில்!..."

மீண்டும் அவன் மௌனமாகி விட்டான். நெடு நேரம் வரை ஒன்றுமே பேசவில்லை, செய்தித் தாளிலிருந்து கிழித்த துணுக்கில் சிகரெட் சுருட்ட முயன்றான். ஆனால் காகிதத் துண்டு அவனது விரல்கள் அழுத்தியதில் சர்ரென்று கிழிந்து போயிற்று. புகையிலை சிதறி அவனது முழுந்தாளின் மேல் விழுந்தது. முடிவில் காகிதத்தையும், புகையிலையையும் எப்படியோ தாறுமாறாகச் சுற்றி ஒரு சுருளாக்கிப் பற்றவைத்து ஆவலாகச் சில முறை புகை இழுத்தான். பிறகு தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டு தொடர்ந்து பேசினான்.

"இரீனாவின் அணைப்பிலிருந்து என்னை விடுத்துக் கொண்டேன். அவளது முகத்தை நிமிர்த்திப் பிடித்து முத்தம் தந்தேன். அவள் உதடுகள் அப்படியே பனிக்கட்டி போலச் சில்லிட்டிருநதன. "போய்வருகிறேன்" என்று குழந்தைகளிடம் சொல்லிவிட்டு வண்டியை நோக்கி ஓடினேன். அது நகர்ந்து கொண்டிருந்தது. அதன் படியில் குதித்து ஏறினேன். தொடக்கத்தில் ரயில் வண்டி மெதுவாகச் சென்றது. அது என் பெண்டு குழந்தைகள் நின்று கொண்டிருந்த இடத்தைக் கடந்து சென்ற போது நான் அவர்களை மறுபடியம் பார்த்தேன். பாவம், திக்கற்ற சிறு குழந்தைகள் ஒன்று சேர்ந்து நின்று கொண்டு கைகளை ஆட்டி வழியனுப்பினார்கள். முகத்தில் புன்னகையை வருவித்துக் கொள்ள அவர்கள் முயன்ற போதிலும் முடியவில்லை. இரீனாவோ கைகளை மார்போடு சேர்த்து வைத்துக் கொண்டு நின்றாள். அவள் உதடுகள் சுண்ணாம்பு போல் வெளுத்திருந்தன;

> "எனது கடைசி வாழ்நாள் வரையும், சாகும் வரையும், வாழ்வின் இறுதிக் கணம் வரையும், என்னை நான் ஒருபோதும் மன்னித்துக் கொள்ளவே மாட்டேன்."

ஏதோ முணுமுணுத்துக் கொண்டு பரக்க விழித்தாள்; பேய்க் காற்றை எதிர்த்து நடக்க முயல்பவள் போன்று அவள் உடம்பு முழுவதும் முன்னோக்கி வளைந்திருந்தது... மார்புடன் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தஅவளது கைகள், வெளிறிய இதழ்கள், கண்ணீர் மல்கிய விரிந்த கண்கள், இந்தக் கோலத்தில் தான் அவளை வாழ்நாள் முழுவதும் என் மனத்திலே காண்பேன்... பெரும்பாலும் எனது கனவுகளிலும் இதே தோற்றத்தில் தான் அவளைக் காண்கிறேன்... ஐயோ, அவ்ளை ஏன் அப்படி அப்பால் தள்ளினேன்? இப்போது கூட நினைத்துப் பார்க்கும் போது மழுங்கிய கத்தியினால் நெஞ்சைக் குதறுவது போலிருக்கிறது...

"உக்ரேய்னாவைச் சேர்ந்த பேலயா த்ஸேர்கவ் நகருக்கருகே எங்களுடைய படைப்பிரிவுகளுக்கு நாங்கள் அனுப்பப்பட்டோம். எனக்கு ஒரு மூன்று டன் லாரி ஓட்டும் வேலை தரப்பட்டது; அதிலே தான் போர்முனைக்குப் போனேன். நல்லது. சண்டையைப் பற்றி உம்மிடம் விவரிப்பதில் ஒன்றும் அர்த்தமில்லை. நீயுந்தான் அதைப் பார்த்தாயே. தொடக்கத்தில் எப்படியிருந்தது என்று உனக்கே தெரியும். வீட்டிலிருந்து எத்தனையோ கடிதங்கள் வரும். ஆனால் நாங்கள் நிறைய எழுதுவதில்லை. என்றாவது தான் எழுதுவோம். அதுவும் என்ன? இங்கே எல்லாம் நன்றாய்த்தானிருக்கிறது. ஏதோ கொஞ்சம் சண்டை செய்கிறோம். தற்போது நாங்கள் பின் வாங்கிக் கொண்டிருக்கலாம், ஆனால் விரைவிலேயே ஏங்கள் பலத்தை எல்லாம் திரட்டி ஜெர்மன்காரன் ஒருபோதும் மறக்க முடியாதபடி செம்மையாகத் தரப்போகிறோம், என்றெல்லாம் எழுதுவோம். வேறு என்ன எழுத முடியும்? அதுவோ சங்கடமான நேரம். எழுதவே பிடிக்கவில்லை. எப்பொழுது பர்த்தாலும் துயரப் பல்லவி பாடி அழும் வழக்கம் எனக்கு ஒரு நாளும் கிடையாது என்பதையும் சொல்லி விடுகிறேன். சில அழுகுணிகள் உண்டு. அவர்களைப் பார்த்தாலே எனக்குக் குமட்டிக் கொண்டு வரும். நாள்தோறும் மனைவிகளுக்கும் காதலிகளுக்கும் எழுதுவார்கள். எழுதுவதற்குக் காரணமே இருக்காது. சும்மா மூக்காலே அழ வேண்டுமே, அதற்காக எழுதுவார்கள். ஐயோ, வாழ்க்கை கடுமையாயிருக்கிறதே. ஐயோ, நான் குண்டுபட்டுச் செத்துப் போவேனோ என்னவோ என்றெல்லாம் வசவசவென்று எழுதிக் கொண்டு போவார்கள். நாய்க்குப் பிறந்த பயல்கள்! இப்படி முறையிடுகிறது; வாய்க்கு வந்ததை உளறுகிறது; பின்பு யாராவது இரக்கம் காட்ட மாட்டார்களா என்று பார்த்துக் கொண்டிருக்கிறது. பாவம், அந்தப் பெண்களும் பிள்ளைகளும் அங்கே ஊரில் இதேபோலத்தான் துன்பப் படுகிறார்கள் என்பதை இவர்கள் புரிந்து கொள்வதே கிடையாது. பார்க்கப்போனால் அவர்கள் அல்லவா நாடு முழுவதையும் தோள் கொடுத்துத் தாங்கி நின்றார்கள்! அடே யப்பா! அது போன்ற பெரும் சுமையால் நசுக்குண்டு சிதைந்து போகாமல் இருக்க நமது பெண்கள் பிள்ளைகளின் தோள்கள் எவ்வளவு வலிவாயிருந்திருக்க வேண்டும்! ஆனால் அவர்கள் சிதைந்து போகவில்லை. முடிவு வரை தளராமல் தாங்கி நின்றார்கள். அந்த நிலையில் இந்த அழுகுணிகளில் எவனாவது ஒரு விடியாமூஞ்சிப் பயல் கடிதத்தில் துன்பக் கதையைக் கொட்டி அளக்கிறான். அங்கே ஊரில் வேலை செய்யும் பெண் அதைப் படித்துத் தவித்துக் தடுமாறிப் போவாளா? மாட்டாளா? அந்த மாதிரி ஒரு கடிதம் வந்த பிறகு, பாவம், அந்தப் பெண், தான் என்ன செய்வதென்றோ தனது வேலையை எவ்வாறு சமாளிப்பதேன்றோ அறியாது தவிப்பாள். இல்லை! தேவை ஏற்பட்டால் எந்தத் துன்பம் வந்தாலும் தாங்கிக் கொள்வதல்லாவா ஆண் மகனுக்கு அழகு! எல்லாக் கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள வேண்டாமா? போர்வீரனாக இருப்பதும் அதற்காகத் தானே! பெண்மை மிகுந்து ஆண்மை குறைந்திருந்தால் எங்கேனும் தொலையட்டுமே; பின்புறம் சற்று பொம்மென்று தெரியும் படியாக நிறைய மடிப்பு வைத்துத் தைத்த ஸ்கர்ட்டைப் போட்டுக்கொண்டு (பின்னாலிருந்து பார்ப்பதற்காவது பெண்ணைப் போலத் தெரியுமல்லவா) பீட்ரூட் கிழங்கு வயல்களில் களைபிடுங்கவோ பால் கறக்கவோ போகிறதுதானே! இந்த மாதிரிப் பயல்கள் எல்லாம் போர்முனைக்கு வர வேண்டிய தேவையில்லையே! அங்கே ஏற்கேனவே அடிக்கிற நாற்றமே சகிக்கவில்லை, இவர்கள் வேறு வந்து நாறடிக்க வேண்டுமா?

தொடரும்............

## தருமி போய்விட்டாள்

அன்னை என்று பெயர் சொல்ல
அவளும வாழ்ந்தாள் இதுகாறும்
முன்னை வினையின் பயன்தானோ
மண்ணில் பூண்ட வினைதானோ
என்னே என்று ஏங்கிடவே
அவளும் அனாதை யாய்ப்போனாள்;
தன்னைப் பிரிந்து வருந்தாதோர்
தயவில் காற்றாய்க் கலந்தாளே!

தலையிற் பிள்ளை பெயரிற்கு
தண்ணி போட்டு வந்தானே
தொலைவில் உள்ள இளையோனும்
தந்தி மட்டும் தந்தானே
கலையுள் நல்ல வாழ்வுற்ற
குன்றாம் மகளும் தன்னண்ணன்
நிலையுள் இல்லம் வரோமென்றே
நிட்டை மனையுள் கொண்டானே!

பணமும் பொருளும் கொண்டிருந்தும்
பிணத்தை நடத்தப் பிறப்பில்லை
குணமும் தயவும் கொண்டூரார்
கனத்தை வரையும் முன்நின்றார்
உணவும் உடையும் எதிர்பார்ப்பும்
உளவில் குழந்தை தீயிட்டான்;
தினமும் பிணியில் உழலாமல்
தருமி யவளும் போய்விட்டாள்!

பெற்ற பிள்ளை சீர்செய்யா
பயணம் இறுதி யாயிற்று
உற்றம் சுற்றம் இருந்தென்ன
உறவும் ஊரும் பெயருக்கே!
கற்ற கல்வி ஈதென்று
கடைசி வாழ்வு ஒன்றிற்காய்
சொற்ப சேமம் செய்தாலே
சயனம் பெறுமதி பெற்றேகும்!

மாஸ்வ- வரோதயன்.

## சிறுகதை

# தண்டனை

-கன்னி-

**இருள் சூழ ஆரம்பித்ததைக் கண்டு பகலோன் தன் கடமையை முடித்துக் கொண்டதையுணர்ந்தவனாய் "கெதியாய் நடடா மச்சான் இருட்டி விட்டது" என்று சலீமை கேட்டுக் கொண்டவனாய் தானும் பைசிகளை வேகமாக தள்ளிக்கொண்டு செல்கின்றான்.**

மழை மேகங்களின் முற்றுகையால் பகலோன் பதியத்துடன் தன் முகத்தை மறைத்துக் கொண்டு இருள் சூழ இடமளித்துக் கொண்டிருந்தான். சற்றைக் கெல்லாம் வானம் குறு குறுத்தது. இடையிடையே கண்களைப் பறிப்பதாய் மின்னல் அச்சுறுத்திக் கொண்டிருந்தது. கூடவே பயங்கர ஓசையுடன் இடித்த இடி, தூங்கிக் கொண்டிருந்த முஸ்தபாவைத் தூக்கி வாரிப்போட்டது. தன்னிரு பிள்ளைகளும் மனைவியும் தன்னைச் சூழ இருந்ததைக் கண்ட முஸ்தபாவுக்குச் சற்றுத்தெம்பு ஏற்பட்டது. இதனால் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட முஸ்தபா, "மழை பெய்யப் போகுதா என்ன?... கட்டாயம் வயலுக்கும் போக வேணும். ஆனை, பண்டி பெரும் கரச்சல் படுத்துது" கொண்டு போற சாமானுகளை பேக்கில் வையேன்." என்று மனைவியிடம் சொல்லிக் கொண்டே கிணற்றடியை நோக்கிச் சென்றான்.

முகம் கழுவிக் கொண்டு தயாரான போது தேனீர் கொண்டு வந்த மனைவியிடம், "ராவைக்கு இருக்கிற பெற்றியும் காணாது. அவன்ட கடயிலையும் கடன் கூடிப்போச்சி, என முணுமுணுத்தவனாய் வெற்றுக் குவளையை மனைவியிடம் கொடுத்தவிட்டு பைசிகளில் ஏறித் தன் வயலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

"என்னடா ஒப்பாய் சங்கத்தான்ட தலையாட்டம் சொணயில்லாத டயரு, காத்து வேற மந்தம், என்ற சத்தத்தைக் கேட்டு திரும்பி சலீம் வருவதைக் கண்டு, இருக்கிற வெற்றி காணாதே என்ற யோசனையில் நான் வாரன், ஒனக்குக் கிண்டல் என்ன"? என்று அலுத்துக் கொண்ட முஸ்தபாவும், சலீமும் அயலவர்கள் தமது விளைந்த நெற்காணிக்குக் காவலுக்கு செல்கின்றார்கள்.

அரசாங்கம் அரிசியை ஏற்றுமதி செய்யப்போகுதாம். நமக்கு வெவசாயத்துக்குக் கடன் தந்தவன் நம்மட நெல்லை எடுக்காட்டி குடியிருக்கிற வளவை வித்து கடனைக் குடுத்துப் போட்டு, நம்மட நெல்லைத் தூக்கித் தலையில வைச்சுக் கொண்டு தெருவில நிக்க வேண்டியது தான் "ஏழை வெவசாயிகளின்ற அரசாங்கம் எப்ப வருமோ?" அலுத்துக் கொண்டான் சலீம்.

இருவரும் உரையாடிக் கொண்டு அரைவாசித் தூரத்தை கடந்து செல்லும் போது வேகமான சுழற் காற்றுடன் மழை கொட்டத் தொடங்கியது. மச்சான் இந்த மழை நம்மட வெவசாயத்தை அழித்துவிடும் போலத்தான் தெரியுது. என்று சலீம் கூறி முடிப்பதற்குள், "தடார்" முஸ்தபா விழுந்து விட்டான். மழைக்கும் பிடித்து வந்த குடை சுக்குநூறாகியது. "என்னடா மச்சான் விழுந்திட்டாயா? இந்த ஈரமான தார் றோட்டில் ஒன்ட மொட்டை டயரு வழுக்காம என்ன செய்யும்? என்றவாறு சலீம் பைசிகளை நிமிர்த்த "எல்லாம் நம்மட காலப்பகைடா, என்று வெறுப்பாய் எழுந்தான். எங்கடா மச்சான் செருப்பக்காணல்ல? அந்தாபாரு பட்டியறுந்து வீதியோரம் ஒருக்களித்துக் கிடந்தது. "கட்டிக்கிட்டி எடுக்கலாம்" எனக் கூறிக் கொண்டு குடையையும், செருப்பையும் பேக்கில் திணித்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஊ... ஊ... என அவர்களை எதிர்திசையாய்த் தள்ளிக்கொண்டிருந்த காற்றைச் சமாளித்துக் கொண்டு முன்னால் தென்பட்ட பாலத்தைக் கடக்க ஒரு சில யார் தூரம் இருக்கையில், அடே நில்லுங்கடா, என்ற சத்தம் அவர்களை நிறுத்தியது.

"நாம கறுமம் இல்ல நலைஞ்சி நிக்றம். நீ குடபிடிச்சி சைக்கள் போற" என்று கடுப்பாய்க் கத்திக் கொண்டு அருகில் வந்த இளம் இராணுவத்தன் பளார் பளார் சலீமின் கண்கள் நீரைச் சொரிய முகம் சிவந்தது. பாலத்தின் கீழே இருந்து ஓடி வந்த மற்றொரு வீரன் முஸ்தபாவின் முதுகை தன் துப்பாக்கிப்பிடியால் பதம் பார்க்கின்றான். உ...ம்...மா. மூன்றாவது வீரன் இரு பைசிகளினதும் முன்சில்லின் மேல் டியூப்பை பிடுங்க, காற்று புஷ்......... என இறங்கியது. அதன் பின் "தென் தள்ளுகரகென பளயள்ளா". என்று மற்றொரு வீரன் கர்ஜிக்க செய்வதறியாது தள்ளிக் கொண்டு செல்கின்றனர்.

ம்ஹ்.... பார்ரா ஒப்பாய், வரக்க தெருவில் நீ விழுறாய் அது காணாதெண்டு இவன்ற மக்களும் அடித்ததும் போதாதெண்டு சைக்கள் காத்தையும் திறந்திட்டானுகள். இவனுகளுக்குக் கொஞ்சக்கால ஆயுசுதான்டா, ஏழையாய்ப் பொறந்தா எல்லானுக்கும் சம்பலாகணும். இது தாண்டா நம்மட விதி, நம்மட மட்டுமல்ல நாட்டின்ர விதியும் அப்படித்தானெண்டு சொல்லு. அலுத்துக் கொண்டான் முஸ்தபா.

இருள் சூழ ஆரம்பித்ததைக் கண்டு பகலோன் தன் கடமையை முடித்துக் கொண்டதையுணர்ந்தவனாய் "கெதியாய் நடரா மச்சான் இருட்டி விட்டது" என்று சலீமை கேட்டுக் கொண்டவனாய் தானும் பைசிகளை வேகமாக தள்ளிக்கொண்டு செல்கின்றான்.

இரண்டு மணித்தியாலங்கள் உருண்டன. அவர்கள் முதலில் முஸ்த்தபாவின் காவற்கூடத்தை அடைந்தார்கள்". இனி எனக்கெண்டால் நடக்க முடியாது கொஞ்சம் உண்ட வாடியில சுணங்கித்தான் போகணும். தேத்தண்ணீ ஒன்டு வையேன். நான் நல்ல பெற்றிகளைத் தெரியப் போறன் என்று கூறிக் கொண்டே தனது பேக்கைத் துளாவிக் கொண்டிருந்த சலீம் இன்டைக்கென்றா கடும் இருட்டுத்தான், இந்தா ஒனக்கு ரெண்டு பெற்றி ராவைக்குச் சமாளிப்பம் எனக் கூறி சலீம் பெற்றரியைக் கொடுக்கும் போது வயலில் நிறைந்திருந்த நீரின் சக்குச் சக்கு... எனும் சத்தம் யாரோ வருவதையுணர்த்த, முஸ்த்தபா தன் டோர்ச்சின் ஒளியைப் பரப்பி வருவது



யார் என்றறிய முனைந்த போது "டேய் காக்கா லைற் அடிக்காதே" என்ற சத்தம் அடங்குவதற்குள் ஓர் உருவம் உள்ளே நுழைந்தது. காவற் கூடத்தைச் சுற்றிப் பல உருவங்கள். இருவருக்கும் உதறல் எடுத்தது.

தலையும் காலும் தெரிய ஏனைய பாகம் ஆயுதங்களால் மூடப்பட்டிருக்க பச்சை நிற ஆடையுடன் உள்ளே நுழைந்த அந்தக் கொழுத்த உருவம் அவர்களின் பேக்கை ஆராய்ந்தது. அதனுள்ளிருந்த சாப்பாட்டு (சோற்று) முடிச்சுகளைத் தன் இடுப்பில் செருக்கிக் கொண்டு டேய் காக்கா இந்தக் காணிக்காரன் யாரு? நான்தான் சேர். சேர் என்டு சொல்லாதடா எத்தனை ஏக்கர்ரா? மூனு ஏக்கர். உன்ட பெயர் என்ன? முஸ்தபா மூன்று நாள் டைம் தாறம். அதுக்குள்ள ரூபா ஆறாயிரம் தரணும். இல்லே மண்டையிலபோடுவோம். அதேபோல் சலீமின் ஐந்து ஏக்கருக்கும் பத்தாயிரம். இறுதி முடிவாய்ச் சொல்லிச் சென்று விட்டார்கள். இவர்களுக்கோ இருப்புக் கொள்ளவில்லை.

அடுத்த நாள் வீட்டுக்கு வந்த முஸ்தபாவின் முகம் சோபை இழந்து காணப்பட்டதை அவதானித்த மனைவி மரியத்திடம் நடந்ததை விபரமாகக் கூறினான். "அதுக்கு ஏன் இப்படி வெலவெலத்தாப்போல் மொகத்த வைச்சிரிக்கிரியள் நம்மட வளவுட உறுதிய அடகு வைச்சிக் காசி வாங்குவோம்". என்று ஆறுதலளித்தாள்.

மூன்றாம் நாள் அப்பு ஹாமியிடமிருந்து வளவுறுதியை அடகாக வைத்துக் காசி வாங்கிக் கொள்ளும் வரை முஸ்தபாவின், அன்றிரவு உறைந்த குருதி தன் சுயநிலைக்கு வரவில்லை. அன்று பின்னேரம் காசுடன் வயலைநோக்கிச் சென்று கொண்டிருந்த முஸ்தபாவை, தெருவில் ரோந்து வந்த இராணுவத்தின் வரிசையில் நான்காவதாய் வந்த அந்தச் சிப்பாய் "ஏய் எங்க போறா? இங்க வா என்னடா பேக்ல? என்றான் கடுகடுக்க நடுங்கிய குரலில் வயலுக்க சேர் பேக்கில சாப்பாடு சேர், என்றவாறு அவ்வீரனை அண்மித்த முஸ்தபாவின் பேக்கைக் கிளறிய அவன் உள்ளேயிருந்து சிறு வெற்றிலைக்கட்டை எடுத்தபோதுதான் உடலெல்லாம் நடுக்கமெடுத்து வியர்வை வியர்த்துக் கொட்டியது.

வெற்றிலையைப் பிரித்த சிப்பாய் அதனுள்ளிருந்து பணநோட்டுக்கள் வெளித்தெரிந்ததைக் கண்டு அம்மட்ட ஹுக்கண்ண புலிக்குக் காசி கொண்டு போற......தப்.. முஸ்தபாவின் நெஞ்சில் சப்பாத்துக் காலால் உதைக்க அவன் மல்லாக்காய்ச் சைக்கிளுக்கு மேலே சரிந்து விழுந்தவனை மற்ற இராணுவ இளைஞர்கள் எல்லோரும் சேர்ந்து விளாசித்தள்ளுகின்றனர், உம்மா என்பதைத் தவிர வேறு எந்த வார்த்தையும் முஸ்தபாவால் பேசமுடியவில்லை. சற்றைக்கெல்லாம் ஆடைகளெல்லாம் கிழிந்த நிலையில் நிர்வாணமாக, அவன் காசையும் எடுத்துக் கொண்டு அவர்கள் சென்றுவிட்டார்கள். உடற் பலத்தையெல்லாம் கூட்டி மெல்ல வரம்பு வரை இழுகிச் சென்று வரம்பில் குந்திக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அங்கு வந்த சலீம் நிலைமையை விளங்கிக் கொண்டு முஸ்தபாவை அவனது காவற் கூடத்துக்குக் கொண்டு சென்று விட்ட பின் தனது வயலுக்குச் சென்றான்.

மாலை வெள்ளி ஒய்வு பெற எத்தனித்துக் கொண்டிருந்தது. அப்போது பசி எடுக்க தேனீர் கேற்றலைக் கழுவித் தண்ணீரெடுத்து அடுப்பில் வைக்க முனைந்து கொண்டிருந்தான். அப்போது தண்ணீர்ச் சத்தம் கேட்க ஆரம்பித்தது. நிமிர்ந்தான் டேய் முஸ்தபா காக்கா கொண்டாடா காசை ஒரு உருவம் உள்ளே நுழைந்தவாறு அவனருகே வர காசிக்கு நடந்த கதியைச் சொன்ன முஸ்தபா அந்த உருவத்தின் காலசைவால் வரப்புக்குள் சென்று விழுந்தான். அவனால் இனி நிமிர்ந்து நிற்க முடியாதவரைக்கும் தாக்கினார்களாயினும் அவர்களின் ஆத்திரம் அடங்கிவிடவில்லை. இறுதியாக அவனை இரு கணுக்களில் கட்டி வைத்து அவனது காதுக்குள்ளே ஒயில்குளோத் (Oil Cloth)தை உருக்கியதால் வந்த திரவத்தை ஊற்றி நிரப்பி விட்டுச் செல்கின்றனர். அப்போது எந்த உணர்வு மற்றிருந்தவன் இப்போது காதும் கேட்காத நிலையில்...

(யாவும் கற்பனை)

## சிங்கள நண்பா நீ கூறு

நான் ஒரு மானிடன்
நான் ஒரு தமிழன்
நான் ஒரு இலங்கையனா?
நான் எந்நாட்டவன்?
ஓ சிங்கள நண்பனே
நீ கூறு
நான் யார்?
நான் எந்நாட்டவன்?
நான் இந்நாட்டில்
அடிமையாக வாழினும்
மனித உருவில்
உலவுவதால்
மானிடன் என்பதை
ஏற்றுக் கொள்வாய்.
நான் தமிழைப் பேசுவதால்
பறத்தெமழா எனக் கூறி
உன் சமூகம்
என்னை-
தமிழனாக அங்கீகரிக்கிறது.
நான் எந்நாட்டவன்?
நான் இலங்கையனா?
அதற்கு-
உனது பதில் யாது?
ஏன் மௌனம்?
இத்தீவு-
சிங்கள பௌத்த நாடு
சிங்களவரின் நாடு
பிறருக்குரிமையல்ல
என-
உனது,
மதகுருமாரும்
அரசியல்வாதிகளும்
பேரினவாதிகளும்
பிரகடனம் செய்கின்றனர்.
நானும்
உன்னைப் போல்
இந்நாட்டில் தான்
பிறந்தேன்
வளர்ந்தேன்
வாழ்கிறேன்
சிங்கள நண்பனே
இது உனது தாய் நாடென்றால்
எது எனது தாய் நாடு?
நான்
இந்நாட்டவன்
இல்லை என்றால்
எந்நாட்டவன்?
சிங்கள நண்பனே
உன்னவர்கள்
என்னவர்களை
துரத்தியடித்தமையால்
சர்வதேச வீதிகளில்
அகதிகள் அந்தஸ்தில்
நாடற்று, நாதியற்று
முகவரியற்ற மனிதர்களாக
முகம் தெரியா நாடுகளில்
அலைந்து திரிகிறார்கள

-சண்-

# புதிய அரசியல் சட்ட நகல்


## இது தொடர்பாக இவர்களின் கருத்துக்கள்

### மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்துவோம்.

இந்நாட்டில் எழுந்துள்ள நெருக்கடியை தீர்ப்பதற்கான யதார்த்தமான தீர்வை காண்பதற்குப் பதிலாக தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு புதிய அரசியலமைப்பு வரைபை நிறைவேற்ற எடுக்கும் முயற்சியை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். பிரச்சினையின் தாற்பரியத்தை விளங்கிக் கொள்ளாமல் முன்வைக்கப்படும் தீர்வு மேலும் பிரச்சினையை உக்கிரமடையச் செய்யும், இவ்வாறான அரசியல் யாப்பு சீர்த்திருத்தத்தால் நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. அதனால் அடிப்படையிலேயே இதனை நாம் எதிர்க்கின்றோம். எனவே இதனை எதிர்ப்பதற்கான ஆர்ப்பாட்டங்களை நடாத்துவோம், நீதியின் முன்னால் செல்லவும் தயாராகின்றோம்.

**விஜித ஹேரத்**
மேல் மாகாண சபை உறுப்பினர்,
மத்திய குழு,
மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி).

### தமிழ் மக்கள் மீது பலவந்தமாக சுமத்தப்படும் அரசியலமைப்பு



இப் புதிய அரசியல் யாப்பிற்கு எங்களது கட்சி எவ்வகையிலும் ஆதரவு அளிக்க மாட்டாது. இது தமிழ் மக்கள் மீது பலவந்தமாக சுமத்தப்படும் அரசியல் யாப்பாகும். இந்நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பது அரசின் நோக்கமல்ல, மாறாக தமது அவர்களது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதே அவர்களின் நோக்கமாகும். இதனால் எங்கள் மலையக மக்களின் பிரச்சினை மேலும் உக்கிர மடையும் அதனால் நாம் இதனை முற்றும் முழுதாக எதிர்க்கின்றோம்.

**பெ. சந்திரசேகரன்,**
மலையக மக்கள் முன்னணி.

### நாம் ஆதரவு அளிக்கமாட்டோம்



அரசியல் யாப்பொன்றை 24 மணித்தியாலத்திற்குள் தயாரிக்க முடியாது. இது பொறுப்புடன் செயல்படுத்தவேண்டிய விடயமாகும். அதனால் நாம் இதற்கு ஆதரவு அளிக்க மாட்டோம் எமக்கும் அரசுக்கும் இடையில் இது குறித்து பேச்சு வார்த்தை நடைபெற்ற பொழுது எமது நிலைப்பாட்டை நாம் தெளிவாக முன்வைத்துள்ளோம். புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றுவதற்கு முன் அனைத்து கட்சிகளும், பௌத்தமத பீடாதிபதிகளும் பொது மக்கள் அனைவரும் இது தொடர்பாக அறிந்திருக்க வேண்டும்.

**கரு ஜயசூரிய,**
தவிசாளர்.
ஐக்கிய தேசியக் கட்சி


### நாம் ஆதரிக்கிறோம்



புதிய அரசியல் யாப்பு தொடர்பாக இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கையை நாம் ஆதரிக்கின்றோம். இவ்வளவு காலம் தாழ்த்தியேனும் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை நோக்கி மேற்கொள்ளும் இம் முயற்சிக்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

**ரவூப் ஹக்கீம்,**
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

### நாம் எதிர்க்கின்றோம்



புதிய அரசியல் யாப்பு பற்றி எமக்கு ஒன்றும் தெரியாது. அதில் உள்ளடக்கியுள்ள விடயங்ககள் பற்றி பல்வகைப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதனை அறியாமல் எமது கருத்தை கூற முடியாது. தேர்தலை நோக்கமாகக் கொண்டு அவசரமாக அரசியல் யாப்பை நிறைவேற்றிக் கொள்ள எடுக்கும் முயற்சியை நாம் எதிர்க்கின்றோம். அனைத்து கட்சிகளையும் இதனை எதிர்க்கும் படி கேட்டுக் கொள்கின்றோம். அவசரமாக தேர்தலில் மாற்றத்தையும் கொண்டு வர முடியாது இதற்கு காலமும் போதாது.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்,**
செயலாளர் நாயகம்,
ஈபி.ஆர்.எல்.எப்.

### அரசியல் வஞ்சனை



நான் அதிகாரப் பகிர்வை ஆதரிக்கிறேன். இவ்வாறு நினைக்கும் அநேகம் பேர் இந்த நாட்டில் இருக்கின்றார்கள். ஆனால் அரசியல் யாப்பு போன்ற பாராதுரமான விடயங்களை இலகுவாக கணிப்பிட முடியாது. இதனை வர்த்தமானிமூலம் வெளியிடாமல் பொதுவான கருத்து பரிமாற்றத்துக்கான விவாதத்தை நடாத்தாமல் இதனை நிறைவேற்றுவது பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

**சீ.ஜே.வலிஅமுன,**
சட்டத்தரணி.

### கபட முயற்சி, ஆபத்தான நிலைமை



அரசியல் யாப்பு என்பது நாட்டை ஆட்சி செய்யும் கோவையாகும். இதனை அவசரப்பட்டு நிறைவேற்ற முடியாது. எவ்வித ஒரு கட்டுக்கோப்பும் இல்லாமல் அரசு இது விடயத்தில் நடந்து கொள்கிறது. அதனால் சந்தேகம் எழுந்துள்ளது. அரசும் எதிர்க்கட்சியும் இப்போது ஒன்றை ஒன்று குறை கூறிக் கொள்கின்றது. உண்மையில் இவர்களின் வலது கை செய்வதை இடதுகை அறியாது இருக்கின்றது. அதனால் குறுகிய நோக்கம் கொண்ட கபடத்தனமான அரசியலுக்காக இதனை விரைவில் நிறைவேற்றிக் கொள்ள இவை முயற்சிக்கின்றன. நாம் மௌனமாக இருக்க முடியாது. உத்தேச அரசியல் அமைப்பில் என்ன உள்ளது என்பது எமக்கு இன்னும் தெரியாது. நாட்டில் உள்ள நெருக்கடியை தீர்ப்பதற்கு பதிலாக தங்களின் அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்ளவதிலேயே இவர்கள் கவனத்தை செலுத்தியுள்ளனர். தேர்தலே அவர்களின் இலக்காக உள்ளது. ஜனநாயக நாட்டில் இவ்வாறு நடக்கக்கூடாது. இது பெரும் ஆபத்தான நிலைமையாகும். உலகில் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் இவ்வாறு செயல்படுவதில்லை. இராணுவ ஆட்சியிலேயே இவ்வாறு நடைபெறும்.

**நிர்மலா பெரேரா,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

### அரசின் நோக்கம் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதே



அரசு பதவி ஏற்ற ஆரம்ப கால கட்டத்திலேயே அரசியல் யாப்பு மாற்றத்தை எதிர்பார்த்தோம். உண்மையிலேயே இது தேர்தல் வாக்குறுதியாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை அளிக்க வேண்டும். ஜனாதிபதி இது தொர்டர்பாக மக்கள் விடுதலை முன்னணிக்கு எழுத்தில் வாக்குறுதி அளித்திருந்தார். இனப் பிரச்சினை தொடர்பாக தீர்வினை எதிர்பார்த்தோம் இவ் அரசியல் யாப்பு ஜனநாயகம் விரோத தன்மை கொண்டதாகும். பராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைய இன்னும் சில தினங்கள் இருக்கும் போது இவ்வாறான அரசியல் யாப்பை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பது இலங்கையில் மாத்திரமல்ல உலகத்திலேயே நடைபெறாத ஒரு விடயமாகும்.. இதனை நான் திறந்த பொருளாதார முறையின் பரிபூரணமான அரசியல் யாப்பாகவே கருதுகின்றேன்.

**வாசுதேவ நாணயக்கார,**
தலைவர்.
ஜனநாயக இடதுசாரி முன்னணி

### மக்கள் விரோத சதியை முறியடிப்போம்



எங்களது அரசியல் யாப்பை நாமே உருவாக்க வேண்டும். இவ் அரசியல் யாப்பை எமது தேவைக்காக உருவாக்கவில்லை. நோர்வே அரசை திருப்தி படுத்தவே இவ் அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. நோர்வேக்கு மாத்திரமல்ல மேற்குலக நாடுகளை திருப்தி படுத்தவே இதனை விரைவாக நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர். இதனை ஜனநாயக விரோத நடவடிக்கை மூலமே நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். நாம் எமக்கு முடிந்த வகையில் இதனை எதிர்ப்போம். அது போல் மக்கள் விரோதசதியையும் முறியடிப்போம்.

**சம்பிக்க ரணவக,**
தேசிய அமைப்பாளர்,
சிஹல உறுமய.

கடந்தவாரம் நாம் பல பகட்டான பிரச்சார இயக்கங்களைக் கண்டோம் அங்கே ஒரே விடயம் தொடர்பாகப் பல்வேறு தவறான புரிதல்கள் உள்ளதென்பதை நம்ப முடியாதுள்ளது.



## பார்வையில்...

சந்திரிகாவின் அரசியலமைப்புக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்பவர்கள் உத்தேச அரசியலமைப்பினால் உண்மையான அதிகாரப் பகிர்வொன்று ஏற்படும் என அவர்கள் நம்புகின்றார்கள். மறுபுறம் சிஹல உறுமயவும், வண. சோபித்த தேரர் தலைமையிலான பௌத்த பிக்குகளும் அரசியலமைப்புக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் பிரச்சாரம் செய்கின்றார்கள். ஈழத்துக்கு நிகரான உரிமைகளை அரசியலமைப்பில் தமிழர்களுக்கு வழங்குவதாக அவர்கள் நம்புகிறார்கள். அதேவேளை இலங்கையை ஒரு பல் இனப்பாங்கான சிவில் சமூகமாக மாற்றுவதனூடாக அரசியலமைப்பில் முக்கிய இடத்தை பௌத்த மதம் இழந்தவிடும் என அவர்கள் நம்புகின்றார்கள். உண்மையிலேயே சிங்கள இனவாதிகளின் நம்பிக்கை உண்மையானால் எல்லா ஜனநாயக சக்திகளும் ஐக்கியப்பட்டு அரசியலமைப்பு வரைவைப் பாதுகாக்க வேண்டும். எவ்வாறெனினும், உண்மை நிலையோ இந்தப் பிரச்சார இயக்கங்கள் எல்லாவற்றிலுமிருந்து வேறுபட்டிருக்கிறது.

அடிப்படைப் பிரச்சினை என்னவெனில் வரைவு யோசனைகள் தமிழ்த் தேசியத்தை அங்கீகரிக்கவில்லை. இலங்கையில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் முழு நோக்கமுமே தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகளைத் திருப்பதிப்படுத்துவது தான் தமிழர்களின் இன அடையாளமும் வடக்கு கிழக்கில் உள்ள தமது தாயகமும் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்வும், அதிகாரம் அந்தஅடிப்படையிலேயே பகிர்ந்தளிக்கபட வேண்டுமெனவும் கோருகின்றார்கள். எனவே இது பூகோள அடிப்படையிலான வெறும் அதிகாரப்பகிர்வு அல்ல. மாறாக தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தக் கூடிய ஒரு சுயாதீனத்துவமும் ஆகும். இதுவே அவசியமானதாகும். எவ்வாறாயினும், உத்தேச வரைவு அரசியலமைப்பும் கூடவே தமிழ் மக்களின் தாயகத்தை அங்கீகரிக்காது பிராந்தியங்களுக்கான பகிர்ந்தளிப்பை மட்டுமே சட்டமாகக் கொண்டுள்ளமை வெளிப்படையான ஒன்றாகும். இது தொடர்பில் உத்தேச அரசியலமைப்பானது இப்போது இருப்பதிலிருந்து அதிக வேறுபாடான ஒன்று அல்ல. நிஜமாகவே அது ஒரு படி பின்னோக்கியே உள்ளது. ஒரு புறம் இப்போதைய அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைக் கொண்டுள்ளது. ஒட்டுமொத்த ஜனநாயகம் தொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மோசமானது எனினும் அது இனப் பாகுபாட்டிற்கு எதிரான ஒரு சமநிலைப்படுத்தும் காரணியுமாகும். மறுபுறமாக இப்போதைய மாகாண சபைகளோடு ஒப்பிடுகையில் உத்தேச பிராந்திய சபைகளுக்கு மிக முக்கியமான விடயங்களில் குறைந்தளவு அதிகாரங்களே உள்ளன. காணியும் பொலிசும் அந்த இரு விடயங்களாகும். வடக்கு கிழக்குத் தமிழ்த் தாயகத்தின் மறைமுகமானதொரு அங்கீகாரத்துடனேயே 1988 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் பிரேரிக்கப்பட்டன. இப்போது அது நீக்கப்படவுள்ளது.

1998 ஆம் ஆண்டில் பகிர்வு மீதான முதற்படியாக மாகாண சபைகளை ஏற்றுக் கொள்வதில் சில வாதங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உட்பட ஏனைய பாராளுமன்றக் கட்சிகளும் கொண்டிருந்தன. அவர்கள் பிராந்திய சபை அமைப்பு முறைக்கும் அதையே திரும்பவும் செய்யலாம்தானே? மிகச் சரியாக அவர்கள் மிகவும் முட்டாள்களாக கருதப்படுவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் கடுங் கோபத்திற்கும் ஆளாகுவார்கள் 12 வருடங்களாகப் பாரிய இரத்தம் சிந்தப்பட்ட பின்ப இந்த மாகாண சபைகளின் வெட்டிச் சுருக்கப்பட்ட இரண்டாவது பதிப்புடன் தமிழர்கள் திருப்திப்படுவார்களா?

ஆனாலும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு ஆதரவான, எதிரான குழுக்களுக்கும் இடையேயான மோதல்கள் அரசியல் தந்திரோபாயம் ஒன்றாகத் தொடர்ந்தும் நடந்து கொண்டே இருக்கும். பகிர்வுக்கு ஆதரவான பகுதியினரை அணி திரட்டுவதில் பொது ஜன ஐக்கிய முன்னணியும் அதேசமயம் பகிர்வுக்கு எதிரான பிரச்சார இயக்கங்கள் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) உட்பட எதிர்க் கட்சியினரால் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது. நாட்டைப் பல்தேசியக் நிறுவனங்களுக்குவிற்கும் அதேசமயம் படுகொலை யுத்தம் தொடர்ந்து கொண்டும் இருப்பதால் அதிகரித்து வரும்விலைவாசி உயர்விலிருந்து மக்கள் மனங்களைத் திசை திருப்பவுமே இந்தப் பரிகாசங்கள் எல்லாம் நடைபெறுகின்றன.

ஒரு புறத்தில் சந்திரிகா மேற்குலக நாடுகளில் உள்ள தனது எஜமானர்களின் அனுதாபத்தை வென்றெடுப்பதற்காகவே அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வந்துள்ளார். மறுபுறத்தில், யுத்தத்தினால் உருவாக்கப்பட்டசமூக விடயங்களிலும் அழிவுகளிலிருந்தும் தொழிலாள உழைக்கும் மக்களின் மனங்களைத் திசை திருப்பவுமே ஆகும். இதில் தமிழ்ப் பேசும் மக்களுக்கோ அன்றி யுத்தத்தினாலும், திறந்த பொருளாதாரத்தினாலும் இரட்டிப்பாகச் சுமை ஏற்றப்பட்ட தொழிலாள உழைக்கும் மக்களிற்கோ எதுவுமே இல்லை என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. இந்தத் திட்டத்தில் ரணில் முழுமையாகவே சந்திரிகாவோடு பங்காளியாக உள்ளார். உண்மையிலேயே, 1995ஆம் ஆண்டு சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு யோசனைகளில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய எதனையாவது இல்லாமல் செய்து அழித்ததில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு.

இந்தப் பரிகாசங்கள் எல்லாவற்றுக்கும் எதிராக உறுதியாக நின்று, வாழக் கூடிய மாற்று ஒன்றை மக்களுக்கு வழங்க வேண்டியது இடதுசாரிகளின் கடமையாகும்.

**கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன.**

தொகுப்பு- சி. வி. வினோத்.

நூல் விமர்சனம்

'பேராசிரியர் சாந்தையூர் சக்திவேல்.

# நீதிபதியின் மகன்

## அழகு சுப்பிரமணியம் (ஆங்கிலத்தில்)
## ராஜ ஸ்ரீகாந்தன் (தமிழில்)

நீதிபதியின் மகன் நான் எனும் அழகு சுப்பிரமணியமே தான் ஒரு நீதிபதியின் மகன் என அங்கீகாரம் கிடைத்ததை பெரிய பேறாக எண்ணி தன்னுடைய நாளாந்த செயல்களை மாற்றியமைத்து, தனக்கும் மரியாதை தேவை என சமூக அந்தஸ்து பார்க்கும் தோரணையில் கதையை வளர்த்துச் சென்று நீதிபதி அவர்கள் "நீயும் உனது அம்மாவும் என்னை உயிருடன் வைத்து சமாதி கட்டுவீர்கள்" என்பதன் மூலமும் "உனது ஆடம்பரங்களும் கேளிக்கை ஆசைகளும் அதிகார மோகமும் இல்லாது ஒழியும் வரை அடித்து நொருக்கப் போகிறேன்; என்பதன் மூலம் அகந்தையை அகற்றும் தன்மையை சிறப்பித்துக் கூறுகிறார் கதாசிரியர்.

அழகு சுப்பிரமணியம் தனது அனுபவங்களை சுவை சொட்ட ஆங்கிலத்தில் வழங்கியவற்றை அழகு தமிழில் மூலமொழியில் காணப்படும் பொருள்,சுவை,தன்மை மாறாத நிலையில் மொழிபெயர்த்து இதுவோர் மொழிப்பெய்ப்பு நூலோ எனக் கேட்குமளவிற்குச் செய்துள்ளார் ஆசிரியர் ராஜ ஸ்ரீகாந்தன்.

அழகு சுப்பிரமணியத்தின் கணிதவியலாளன் தன்னைப் பற்றி எண்ணும் போது நீயூட்டன், இராமனுஜன், சந்திரம் என தன்னை எடுத்தபடியில் வைத்து எண்ணுவதும் சந்திரம், நியூட்டன், இராமானுஜன் என தன்னை முதற்படியில் வைத்து எண்ணுவதும் தன்னை மேதை எனக் கூறிய போதும் மாணவன் ஒருவன் எழுதிய விடை கண்டு புழகாங்காகிதம் அடைகிறார்.

பேராசிரியர் சந்திரம் + கணிதவியல் = முடிவிலி

ஆனால் அதே மாணவன் எழுதிய அடுத்தவரி

பேராசிரியர் சந்திரம் - கணிதவியல் = பூஜ்யம்

என்பதை பொறுக்க முடியாது மன உளச்சல் கொள்ளும் கணிதவியலாளனுக்கு அவருடைய மனைவி சுபத்திரா "அது இந்த உலகத்தையோ அல்லது சமுத்திரங்களையோ விடப் பெரியதொன்று" எனக் கூறுவதும் கணிதவியல் இல்லை என்றால் "நீங்கள் ஒன்றுமேயில்லை" என்பதன் மூலம் அவள் கணிதவியலாளன் எதிர்பார்த்த தன்னுடைய உணர்வுகளுடன் ஒன்றிப்போவதற்கு உனது கல்வி அறிவு போதாது" என்றவரை விட அவள் முன்னணியில் நிற்பது போலவும், அவரது உளவியல் பாதிப்பு அவரை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்கு கூட்டி செல்வதாக அழகு சுப்பிரமணியம் அற்புதமான கதை படைத்துள்ளார்.

அப்புக்காத்து எனும் சிறுகதையில் ஆசிரியர் தனது தொழிலையே கருவாக எடுத்தமையும் "அவர் தனது மனைவிக்குத் துரோகம் செய்வதற்கு அந்த இளம் பெண் உடந்தையாக இருந்தாள்" என்பதன் மூலம் இங்கிதமாக தான் சொல்ல வந்தகருத்தை வெளிப்படுத்தியிருப்பது சிறப்பானதாக உள்ளது.

முள்ளுக்கரண்டி என்னும் கதையூடாக மதமாற்றத்தையும், மதமாற்றக் காரணிகளையும் இலகுவாக சாடியுள்ளார். கூலிக்கு மாரடிப்போர் எனும் கதையூடாக அழகு சுப்பிரமணியம் அவர்கள் சாதியத்தைசாடியுள்ளமையும் ஈனப் பெண்டுகள் என பெண்களை அழைப்பதையும், அப் பெண்கள் சட்டை அணியக்கூடாது என்பதை "கண்ணீரால் நனைந்து நெகிழ்ந்திருந்த சேலைகளை குத்திட்டு நிற்கும் மார்பின் குறுக்கிச் செருகியவாறு சகோதரிகள் வந்தனர்" என்பதன் மூலம் தெரியப்படுத்துகிறார். இக்கதையினுடே யாழ்ப்பாணத்து சாதித் திமிரும் செத்த வீட்டு பாராம் பரியமும் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அழகு சுப்பிரமணியம் காதலையும், சீதனக் கொடுமையையும் விட்டு வைக்கவில்லை என்பதைகல்விமான் எனும் கதையூடாக அறியக்கூடியதாக உள்ளது.

மற்றைய கதைகளான "மூடும் நேரம்", "வனப்புமிக்க நாள்" "மலேசியா ஓய்வூதியக்காரர்" ஆகியன அழகு சுப்பிரமணியத்தின் வெளிநாட்டு அனுபவங்களை பறை சாற்றுகின்றன.

பெண்களின் இயல்பை வெளிக்காட்டும் கதையாக "ரெனில்" கதைபுனையப்பட்டுள்ள முறை சிறப்பானதாகும். சில பெண்களுக்கு இதைத்தவிர வேறு கதைகளே இருப்பதில்லை, எந்த நேரமும் கணவரைப் பற்றியே கதைத்துக் கொண்டிருப்பார்கள் எனக் கூறும் டாக்டரின் மனைவியும் வக்கீலின் மனைவியும் தங்கள் கணவன் பற்றி புகழ் பாடுவதே தொழிலாக கொண்டிருப்பதை கதையூடாக வெளிக்கொணர்ந்துள்ளனர்.

ஆங்கில மொழிக்கதைகளை அழகிய எளிமையான முறையில் தொகுத்து தந்த ராஜ ஸ்ரீகாந்தனின் பணி சிறப்பானதாகும்.

# சேத்தனார் பதில்கள்



**ஒரு தமிழ் அரசியல் வாதியாவதற்கு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமா? அல்லது அரசின் கருணையைப் பெற வேண்டுமா?**

ஹாஜி ஹசன், மாளிகாவத்தை,
கொழும்பு - 10.

20 வாக்குளைப் போடக்கூடிய அடியாட்களும் பாராளுமன்றம் சென்ற பின் அரசின் கருணையும் இருந்தால் போதும்.

**நம் நாட்டில் எப்பொழுதும் சமாதானம் பிறக்கும்?**

ரா-சு. லலிதா, டெல்வின்,
இறக்குவானை

ஒரு இனம் மற்றைய இனத்தை அடிமைப்படுத்தாமலும், சுயநலமற்ற அரசியல் வாதிகளிடம் ஆட்சி அதிகாரம் போகாத விடத்தும் நிச்சயம் சமாதானம் பிறக்கும்.

**ஆயிரம் பேரைக் கொன்றால் அரை வைத்தியர் என்று சொல்வார்கள். எத்தனை பேரைக் கொன்றால் ஒருவர் அரசியல் வாதியாவார்?**

ஹசன் - கொழும்பு - 10.

நண்பனே உலகில் புனிதமான நேர்மையான அரசியல் வாதிகள் இருந்துள்ளனர். எந்தஒரு அரசியல் வாதிக்கு பணத்திமிரும் பதவிமோகமும், தான் என்ற ஆணவமும் பிறக்கின்றதோ அவனால் தான் உலகம் அழிகின்றது. ஆபிரகாம் லிங்கன், மாட்டின் லூதர் கிங், காந்தி போன்றவர்கள் மற்றவரை வாழ வைப்பதற்காக தம் உயிரை ஈந்துள்ளனர்.

**அரசியல் ஓர் சாக்கடை என்று ஏன் கூறுகிறார்கள்?**

எம்.ராஜன்,
பின்தெனிய தோட்டம், அத்தல.

புனிதமான பணியை அரசியல் வாதிகள் தமது சுயலாபத்திற்காக சாக்கடையாக்கியதால்.

**இன்றைய அரசியல் வாதிகளின் நோக்கம் என்ன?**

தங்கள் வசதிகளை பெருக்கிக்கொள்வதற்காக அரசியலின் பெயரால் எந்தப் பாதகத்தையும் செய்வது.

**தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க அயராது பாடுபடும் ஜனநாயக வழிக்கு திரும்பிய ஆயுதம் தாங்கிய தமிழ்க் கும்பல்கள் செய்த, செய்கின்ற தமிழர் கொலைகளைப் பற்றி என்ன எண்ணுகின்றீர்கள்?**

ஆர்.வன்னிமகன்,
கொழும்பு - 06

கருத்தை கருத்தால் செய்ய முடியாதவர்கள் கருத்தை ஆயுதத்தால் முடித்து விடுகின்றனர். இதனால் ஒரு கொலைகார கலாசாரமே இங்கு வளர்ந்துள்ளது.

**நாடு இருக்கும் நிலைமையில் ஒவ்வொருவர் வீட்டிலும் AK47 இருந்தால் எப்படி?**

நயிம் ரூபி,
26ஏ. வெட்டுக்குளம் வீதி புத்தளம்.

இப்போது மட்டும் என்ன? சில வீடுகளில் மட்டும் தான் இல்லை. முன்பு வீடுகளில் சுய பாதுகாப்புக்காக கத்தி, வாள், பொல்லு இருந்தது. இனிமேல்? அமெரிக்கா போன்ற நாடுகளில் இது சின்ன விடயம்.

**காதலைப் பற்றி...?**

வசந்தி - கிரான் குளம்.

உன்னதமானது உயர்வானது.

**நாளை என்பது பற்றி நம்பிக்கை இருக்கின்றதா?**

தாவூத்-பொத்துவில்.

அந்தநம்பிக்கையில் தானே நாம் வாழ்கின்றோம்.

**பெண்ணுக்கு கற்பு அவசியமா?**

ஏ.தங்கவேல்

கற்பு என்பது உடலைப் பொறுத்தவிடயமல் உள்ளத்தைப் பொறுத்ததாகும்.

# ஜே.ஆரும் - சந்திரிகாவும்...

5ம் பக்க தொடர்ச்சி

தங்கியிருக்கின்றது. ஜனநாயக மரபுக்கு எதிராக, குறுகிய அதிகார வெறியின் நோக்கில் அரசியலமைப்போடு தாம் நினைத்தபடி விளையாட அதிகார வர்க்கத்திற்கு சந்தர்ப்பமளிக்காமல் இருப்பது உயர் நீதி மன்றத்தின் கடமையாகும்.

திட்டமிடப்பட்ட கபடத்தனங்களை செயல்படுத்துவதற்கு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு தடையாக உள்ளது. இவ்வாறான தந்திரமான நடவடிக்கையொன்றிற்காக நடாத்தப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றின் மூலம் பொதுமக்கள் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வது மிகவும் கஷ்டமான காரியமாகும். மறு புறத்தால் இது போன்ற அரசியல் தந்திர செயல்பாடுகளை தோற்கடிப்பதற்கு அனைத்து எதிரணிகளும் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து எதிர்க்கும் நிலைக்குத் தள்ளப்படுவதும் தவிர்க்கப் முடியாதொன்றாகி விடும். அரசு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றில் தோல்வியடைவது எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

எதிர்க்கட்சியில் அரசோடு இணக்கப்பாடு கண்டுள்ள பாராளுமன்ற பிரதிநிதிகள் சிலரோடு இணக்கப்பாட்டினை செய்து கொள்வது இதைவிட இலகுவானதாகும். ஜனாதிபதி முறைக்கு எதிராக எழும் சவாலை தடுப்பதற்கு விலை ஒன்று இருக்குமானால் அவ்வழியில் செயல்படுவது அரசுக்கு இலாபமாகும்.

நடைப்பெறப்போகின்றது என்ன என்பது பற்றி அரசாங்கக் கட்சியில் உள்ள பிரதிநிதிகளில் அதிகமானவர்கள் தெரிந்து வைத்துள்ளனர். இருந்தாலும் இவற்றை எதிர்க்கும் சக்தி அவர்களிடம் இல்லை. விகிதாசார முறையில் மாற்றங்கள் ஏற்படுவதை சிறுபான்மைக் கட்சிகள் விரும்பாது விடினும், அவர்களுக்கு தமது பாதுகாப்பு மிக முக்கியமானதாகும். அரசாங்கம் வழங்கும் பாதுகாப்பின்றி சொற்ப நேரமேனும் அவர்களால் வாழ முடியாது. இதன் காரணமாக இறுதியில் தமக்குப் பாதகமேற்படும் நடவடிக்கையொன்றாக இருப்பினும் அதற்கு இசைவதேயின்றி எதிர்க்கும் நிலையில் அவர்கள் இல்லை.

அதன் பின்பு தேவைப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுக்கு தேவையான பிரதிநிதிகளை ஐ.தே. கட்சியிலிருந்து பெற்றுக் கொள்வதேயாகும். ஐ.தே.கட்சியின் பாராளுமன்றப் பிரதிநிதிகளுள் சிலர் வழக்குகள் போன்ற பல சட்டப் பிரச்சினைகளில் சிக்கிய நிலையில் உள்ளனர். சிலருக்கு ஊழல் குற்றச்சாட்டுக்களும் இன்னும் சிலருக்கு கொலைக் குற்றச் சாட்டுக்களும் உண்டு. இவர்களோடு இணக்கத்துக் செல்வது அரசுக்கு இலகுவானதாகும். இவர்களை சட்டநடவடிக்கைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மேலாக அவர்கள் சந்தோஷப்படும் விதத்திலான பதவிகளோ அல்லது பணமோ வழங்கி அரசு அவர்களை தன் வசப்படுத்திக் கொள்ளலாம். இது பயனளிக்காவிடில் மேலும் கூடுதலான பணம் வழங்குவதின் மூலமும் சிலரின் அதீத ஆசைகளை நிறைவேற்றுவதன் மூலமும் சிலரை தம் வசப்படுத்திக் கொள்ளலாம்.

தற்போது பொ.ஐ.முன்னணியிலுள்ள தொகுதிகளுக்கான அங்கத்தவர் தொகை நூற்றி மூன்றாகும். அதற்கு அடுத்தபடியாக முஸ்லீம் காங்கிரசுக்கு ஏழு தொகுதிகளும், ஈ.பி.டி.பி ஒன்பது தொகுதிகளும், தோட்டத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஏழு தொகுதிகளும், புளொட், டெலோவுக்கு மூன்று தொகுதிகளும் மாற்றுக் குழுவில் ஏழு தொகுதிகளுமாக நூற்றி முப்பத்தாறு தொகுதி அங்கத்துவம் இருக்கின்றன. கூட்டணியின் ஐந்து பேரையும் இணக்கப்படுத்திக் கொண்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைப் பெறுவதற்கு மேலும் ஒன்பது பேர் மட்டுமே தேவையாகும். இவர்களின் ஆதரவை பெறுவதற்கு அரசாங்கத்திற்கு சிரமமான காரியமல்ல. தலைக்கு இரண்டு கோடி ரூபா வீதம் ஒன்பது பேருக்கு பதினெட்டு கோடி ரூபாய்களை அரசு செலவிடவேண்டி வரும்.

## பயோடேட்டா

| | |
|---|---|
| கௌரவப்பெயர் | : தமிழ் அரசியல்வாதி |
| வயது | : என்றும் பதினாறு |
| பழைய தொழில் | : கமிஷன் ஏஜன்ட் |
| புதிய தொழில் | : பார்லிமென்டில் கைகளை உயர்த்துவது |
| படித்தது | : சட்டம் |
| படிக்காதது | : நியாயம் |
| பொழுது போக்கு | : சமாதானத்துக்காக பேச்சு வார்த்தை நடத்துவது |
| மறந்து போனது | : வாக்குறுதிகளை |
| கவலைப்படுவது | : சொந்த நலன்களை |
| கவலைப்படாதது | : மக்களின் பிரச்சினைகளை |
| நண்பர்கள் | : ஆதரவாளர்கள் |
| எதிரிகள் | : சொந்தக் கட்சியினர் |
| எலிச்சல்படுவது | : அவதூறுகளைக் கேட்டு |
| ஒரே ஆசை | : உப ஜனாதிபதி ஆகவேண்டுமென்று. |



- கௌதமன்

# தனியார் கட்டிட நிறுவனங்கள் மக்களை ஏமாற்றிச் சுரண்டுவதை அரசு அறிந்தும், பாராமுகமாக இருக்கலாமா?



கடந்த சில வருடங்களாக இடத்திற்கு இடம், மூலைக்கு மூலை தொடர் மாடிக் குடிமனைத் தொகுதி வீடுகள் காளான் முளைப்பது போல் பரவலாக எழுகின்றன. இதனை நிர்வகிக்கும் சட்டம் 1973இல் உருவாக்கம் செய்யப்பட்டு 1982இல் திருத்தம் செய்யப்பட்டது. இத்திருத்தச்சட்டத்தின் பிரகாரம், அனுமதி பெற்ற ஒரு குடிமனைத் தொகுதி வரைபடம் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்படுமிடத்து, வதிவிட உரிமையாளர் பரிபாலன சபையாக அமைகின்றனர்.

வரைபடத்தைப் பதிவு செய்து, பரிபாலனத்தை உரிமையாளர்களிடம் சுமத்த முன்னர், தொடர் மாடிக் குடிமனைத் தொகுதிக்குப் பொறுப்பான தனியார் கட்டிட நிறுவனத்தினர் தமது கடமைகளை சர்ச்சைகளுக்கு இடமின்றி முற்று முழுதாக நிறைவேற்றி, கழிவு நீர் மலசலக்குழாய்களை பொதுச்சாக்கடைப்பிரதான வெளிக் குழாயுடன் இணைப்பதைப் பூர்த்தி செய்து, மாநகர சபையிடமிருந்து அனைத்துச்சட்டதிட்டங்களுக்கும் அமைய கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டதற்கான C.O.C. என்றும் உறுதிச் சீட்டைப் பெற்று, அதன் பின்னர் தான் வரைபடம் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும் என மேற்குறிப்பிட்ட தொடர் மாடி குடிமனைத் தொகுதி வதிவிட உரிமை 1982 (திருத்த)ச் சட்டத்தின் பிரிவு 29 (பி) 1 கடந்தகாலத்திற்கும் செல்லுபடியாகும் தன்மையுடன் தாமதமின்றி மேலும் திருத்தப்பட வேண்டியுள்ளது.

இச்சட்டத்தின் மூலம் மக்கள் கொடுக்கும் பணத்திற்கும் உத்தரவாதம் வழங்கப்படல் பொருத்தமானது.

மாநகர சபையின் ஒழுங்கு 127இன் பிரகாரம் மேற் குறிப்பிட்ட டி.ஓ.டி இன்றி எவரும், எவ்வதிவிடத்திலும் குடிபுகுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ளசட்டத்தின் பிரகாரம் நேர்மையற்ற நிறுவனத்தினர் எவரும், தமது கடமைகளைச் சம்பூரணமாகப் பூர்த்தி செய்யாது, அனுமதிபெற்ற ஒரு தொடர் மாடிக் குடிமனைத் தொகுதி வரைபடத்தைக் காணிப்பதிவகத்தின் பதிவு செய்து நிர்வாகத்தையும் மிகுதிக் கடமைகளையும், பணம் செலுத்தி வீடுகள் வாங்கியோரிடம் சுமத்தி, கஸ்டத்திலும், நட்டத்திலும், ஏமாற்றத்திலும் செய்வது ஏது என அறியாது தவிக்கவிட்டு, காலம் கடத்தி தமது நிறுவனத்தைக் கலைத்து நழுவுவதற்கும் வாய்ப்பும், வசதியும் உள்ளன.

சட்டம் செவ்வனே தயாரிக்கப்பட்டிருப்பின் பணம் செலுத்தி வீடுகள் வாங்கியோர், மீண்டும் பணத்தையும், நேரத் தையும் விரயம் செய்து நியாயம் கேட்டு, கட்டிட நிறுவனங்களுக்கு எதிராக சட்டவல்லுனர்களையும, நீதி மன்றங்களையும் நாடவேண்டிய நிர்ப்பந்தம ஏற்படாது.

19 ஆம் பக்கத்தில் உரத்த சிந்தனையில் வெளியாகும் சி.சிவசேகரத்தின் கட்டுரை இன்னும் ஒரு காலடியிலிருந்து மீளவும் பிரசுரிக்கப்படுகிறது.

## ஆதவன் ஆதரவுடன் கட்டுரைப் போட்டி

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆதவன் பத்திரிகையுடன் இணைந்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் வகையிலான கட்டுரைப் போட்டியொன்றினை நடாத்த தீர்மானித்துள்ளது.
உண்மையானதும் நேர்மையானதுமான சமாதான விரும்பிகளின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதற்கான களமாக இக்கட்டுரைப் போட்டியை ஆதவன் ஆசிரியர் பீடம் எதிர்பார்ப்பதால், சமாதானத்தில் அக்கறையுள்ள எழுத்தார்வமிக்கவர்கள் இக் களத்தைப் பயன்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

### போட்டிக்கான நிபந்தனைகள்

தலைப்பு : நிரந்தர சமாதானம் - அதற்கான செயற்பாட்டு படிமுறைகள்.
முடிவுத் திகதி : 15.10.2000
பரிசு : ரூபா 5000.00

அவசியமேற்படின் கட்டுரையின் தரத்திற்கேற்ப பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

பரிசு வழங்குவோர் : அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் இணையம்.

நோக்கம் எதிர்பார்ப்பு : அம்பாறை போன்ற பல இன சமூகக் குழுக்கள் வாழும் மாவட்டங்களில் சமாதான சக வாழ்விற்கு அரசுசார்பற்ற அமைப்புகளால் அனைத்து மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய சாத்தியப்பாடான குறுகிய நீண்ட கால செயற்திட்டங்களை அடையாளம் காட்டுவதாக கட்டுரைகள் அமைதல் வேண்டும். கட்டுரைகள் அளவு தாளில் பத்து பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

நிரந்தர சமாதானம்,
கட்டுரைப் போட்டி,
ஆதவன்,
83, பிலியன்தலை வீதி,
மஹரகம.

(கடித உறையின் முகவரியை வெட்டி ஒட்டவும்)

# திசை திருப்பப்படும் யாழ் இந்துக்கல்லூரி மாணவனின் படுகொலை

கொக்குவில் தலையாளி பகுதியில் கடந்தமாத இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சோம சுந்தரம் சஞ்சீவன் கொலைச் சம்பவத்தை திசைதிருப்பும் வகையிலேயே படைத்தரப்பினரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இந்த மாணவன் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை மூடி மறைக்க பலாலியிலிருந்து இயங்கும் வானொலியும் படையினர் தரப்பால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களும் இந்த மாணவனை ஒரு புலி உறுப்பினராக இனங்காட்ட முற்பட்டுள்ளன.

இதே வேளை இந்த மாணவனின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக 51 வது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர தலைமையில் கடந்த வியாழக்கிழமை மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது யாழ் நகர எஸ்.பி. காமினி விஜயசேகர, மாணவன் சஞ்சீவன் பல முறை சுடப்பட்டதாலேயே மரண மடைந்ததாகவும் இது தொடர்பான சுதந்திரமான விசாரணை ஒன்றுக்கு யாரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்று தெரிவித்து இதனை திசை திருப்பும் போக்கொன்றிலேயே அவர் ஈடுபட்டுள்ளார்.

எதிர் வரும் 21 நாட்களுக்குள் இது தொடர்பான அறிக்கை ஒன்று வழங்குமாறும் மக்கள் அவரால் பிரதிநிதிகளிடம் கோரப்பட்டுள்ளது.

## லண்டனில் ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் நூல் கண்காட்சி

ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் நோக்குடன்
ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் நூல் கண்காட்சி ஒன்றை லண்டனில் நடத்துவதற்கு ஏற்பாடாகி வருகின்றது.
ஈழத்து எழுத்தாளர்கள் எந்நாட்டில் வாழ்ந்தாலும், அவர்கள் தங்கள் ஆக்கங்களின் ஐந்து பிரதிகளை எமக்கு அனுப்பி உதவினால் அவற்றை கண்காட்சியில் வைத்து அறிமுகம் செய்யப்படும்.

**நூல் கண்காட்சி நடைபெறும் இடம், காலம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.**

இந் நூற் கண்காட்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கு சகல தமிழ் எழுத்தாளர்களும் தமது பூரண ஆதரவையும் ஒத்தழைப்பையும் அளிக்குமாறு பணிவுடன் வேண்டப் படுகின்றனர்.
ஆக்கங்ளை அனுப்பவேண்டிய முகவரி:

Mr.R.Mahendran (Mullai Amudan),
Exhibition Organisers,
Eelam Tamil Book Writers Exhibition Committee,
34 Redriffe Road,
Plaistow,
London E13 0JX.
Tel:020 8586 7783.

## தம்பு மாஸ்ரரும், ராசாமணிப் பாட்டியும்...



# இனம் தெரியாத வெள்ளத்தில் அடியுண்டு போகும் மாணவர்கள்.

பாதுகாப்பு காரணத்தைக் காட்டி அதிகரித்து வரும் கெடுபிடிகள் இனவாதத்தை நோக்கி செல்வதாய் உள்ளதுடன் மாணவர் சமூகத்தை அச்சுறுத்துவதாயும் உள்ளதை ஆங்காங்கே காணக்கூடியதாக உள்ளது. மாணவர் படுகொலைகள் யாழில் ஆரம்பித்து, திருமலை, மட்டக்களப்பு என்று ஆங்காங்கே பரவி தற்போது வவுனியாவில் தழைத்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையிலான தொடர்பு மார்க்கமாக வவுனியா பல



காலமாக நிலவிவருகின்றது இது இவ்வாறு இருப்பதனால் வன்னியில் இருந்துவரும் புலிகள் வவுனியா ஊடாகவே வேறு பிரதேசங்களுக்கு செல்கிறார்கள் என்ற கருத்தில் பாதுகாப்பு படையினர் பல பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப் படுத்திப் பாதுகாப்பை அதிகரித்து உள்ளனர். வதிவிட அனுமதிப் பத்திரத்தை அறிமுகப்படுத்தி உள்ளனர். இதன் ஊடாக புலிகளை வலை வைத்து பிடிக்கலாம் என்று பாதுகாப்பு தரப்பு நம்பி யுள்ளது. இது ஒரு விதத்தில் சாதகமாக இருந்தாலும், இவற்றால் பெரிதும் பாதிக்கப்படுவது பொது மக்களே யாகும்.

தற்பொழுது குறிப்பிட்ட சில நாட்களாக வவுனியாவில் புலிகளின் தாக்குதல் அதிகரித்து உள்ளதால் படையினர் சீற்றம் அடைந்துள்ளது உண்மையே. ஆனால் அவர்களின் சீற்றம் மக்கள் மத்தியிலும், மாணவர் மத்தியிலும் திசை திருப்பப்படுவது மிகவும் வருத்தத்துக்கு உரிய செயலாக மாறியுள்ளது. ஆங்காங்கே இளைஞர், யுவதிகள் விடுதலைப்புலிகள் என்னும் முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்படுவதும், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு துன்புறுத்தப் படுவதும் சாதாரணமான ஒன்றாக நிலவி வருகின்றது. இது சில காலமாக பாடசாலை மாணவர்களை நோக்கியதாக நடைபெற்று வருகின்றது.

மாணவர் கைது செய்யப் படுவதும், அதனைக் கண்டித்து மாணவர்கள் பகிஸ்கரிப்பு மேற் கொள்வதும் அதன் பின் விடுதலை செய்யப்படுவதும் சர்வசாதாரணமாக உள்ளது. இதேபோல் தற்போது வவுனியாவில் சிறுவர் துஷ்பிரயோகமும் அதிகரித்து உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இனம் தெரியாதவர்களால் கடத்தப் படுவதும் கொலை செய்யப்படுவதும் கொலை செய்யப் பட்டவர்களை ஆங் காங்கே வீசி விடு வதும் மலிந்து காணப்படுகின்றது. இதனால் பல்வேறு கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் மாணவர்கள் மாறியுள்ளமை மன வேதனையைத் தரக் கூடிய தொன்றாகும்.

இவை இவ்வாறு இருக்க கடந்த ஜுலை 28ம் திகதி வவுனியா மாணவர்களை சோக வெள்ளத்தில் தள்ளிவிட்ட ஒரு நிகழ்வு, அது தண்டிக்கப்படவும் கண்டிக்கப்படவும் வேண்டியதே. வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்களும் பண்டாரிக்குளம் விபுலானந்த மா.வி. மாணவன் கைது செய்யப்பட்டமை தொடர்பாக விடுதலை செய்யக் கோரி மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பு போராட்டத்தில் இறங்கியதால் பாடசாலையும், தனியார் கல்வி நிறுவனங்களும் இயங்கவில்லை.

இது இவ்வாறு இருக்க, வெள்ளி அன்று மாலை தோணிக்கல் பகுதியில் உள்ள ஒரு சிறு மினி சினிமா ஒன்றுக்கு படம் பார்க்கச் சென்ற இரு மாணவர்கள் பரிதாப முறையில் துப்பாக்கி சூட்டுக்கு பலியாகி உள்ளார்கள். இதற்கு முன் தினம் அந்த மினிக்கு நூறு மீற்றர் தொலைவில் உள்ள படையினரின் பாதுகாப்பு அரண்மீது புலிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

28ம் திகதி மாலை 5.30 மணியளவில் படம் முடிந்து வெளியேறும் நேரம் பார்த்து மினி திரை அரங்கு அருகில் கைக்குண்டு தாக்குதலும், துப்பாக்கி பிரயோகமும் நிகழ்ந்தது. இதில் மொத்தம் இரண்டு மாணவர்கள் உட்பட ஆறு சிவிலியன்கள் பரிதாப முறையில் கொல்லப்பட்டுள்ளனர். அவ்வழியாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு படையினர் இதனை மேற்கொண்டதாகவும், இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட கைக்குண்டு தாக்குதலால் இது நிகழ்ந்தது என்றும் தகவல்கள் முரண்பாடாக உள்ளன. எது எவ்வாறு இருப்பினும் இதில் சிவிலியன் கொல்லப்பட்டது கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும். பாடசாலை மாணவர்களான கணேசபிள்ளை கஜேந்திரன் (19), ஸ்ரீமனோகரன்-நிஷாந்தன் (15) ஆகிய இரு மாணவர்கள் பரிதாபமான முறையில் கொல்லை செய்யப்பட்டுள்ளமை கண்டிக்கப்பட வேண்டியதே.

இவ்வாறு மாணவர் மீது தொடரும் அசம்பாவிதங்கள் இனியும் தொடருமா? என்பது மாணவர் மத்தியில் உள்ள கேள்விக்குறியாகும். கெடுபிடிகள், கைதுக்ளை மட்டுமே சந்தித்து வந்த வவுனியா மாணவர்கள் தற்போது பரிதாப இழப்புக்களையும் சந்திக்கின்ற நிலைக்கு தள்ளப் பட்டுள்ளார்கள். மாணவர் படுகொலைகள் இன்னும் தொடருமா...? இத்துடன் நின்றுவிடுமா...? யாரிடம் பதில் கேட்பது?

தொகுப்பு-
எம். ராம்ஜிவ்.

## பெண்கள் சந்திப்பு

புகலிடத்து பெண்கள் சந்திப்பின் 19வது தொடர் இம்முறை பரிஸ் நகரின் புறநகர் பிரதேசமொன்றில் நடாத்தப்பட்டது. ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து, இந்தியா என்று பல நாடுகளிலிருந்தும் பெண்ணியலாளர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். இச்சந்திப்பு இவ்வாண்டுடன் பத்தொன்பது ஆண்டுகளாக நடாத்தபட்டு வருகின்றது. பெண்ணிய சிந்தனை நோக்கிலான கருத்தாடல்கள், ஆண்மையவாதகதையாடல்கள் மீதான கட்டுடைப்புக்கள், மற்றும் அனுபவப்பகிர்வுகள் என்றவாறாக மையங்கொள்ளும் பேச்சுக்களும் விவாதங்களும், விமர்சனங்களுமாக பல தலைப்புகளில் இரு நாள் நிகழ்வுகள் நடந்தன.

மானுட விடுதலையின் முன்நிபந்தனை பெண் விடுதலையே என்ற கோஷத்துடன் நடாத்தப்பட்ட இச்சந்திப்பில் எக்ஸில் நண்பிகளான ஜெபா, இன்பவல்லி "சக்தி" பெண்கள் சஞ்சிகையின் ஆசிரியை நஞ்சி போன்றோர் இதனை நடாத்துவதற்கு முன்நின்றனர். யூலை 29,30ம் திகதிகளில் நடைபெற்ற அமர்வுகளில் மீரா, மல்லிகா, நஞ்சி,ஜெபா,நிருபா, தேவா,சிவகாமி, விஜி, சுபா, என்று பல பெண்ணிலைவாதிகள் பிரதான பேச்சாளர்களாக பங்கெடுத்தனர். இரண்டாம் நாள் நிகழ்வுகளின் இறுதியில் அடிமைகளின் தேசம் என்கின்ற விவரணப் படம் ஒன்றை காண்பித்து, அதுசார்ந்த விவாதங்களும் இடம்பெற்றன. இந்தியாவின் தலித் பெண்கள் மீதான ஒடுக்குமுறை குறித்த உண்மைச்சம்பவமொன்றை அடிப்படையாக கொண்டது இப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் களம்

தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் எதிர்வரும் பொதுத்தேர்தலையொட்டி ஓர் உருக்கமான வேண்டுகோளை எமது பெற்றோர்களுக்கும், தமிழினத் திற்கும் விடுகின்றோம்.

நாம் சந்தேகத்தின் பேரில் கைதாகி இன்று வருடக்கணக்காக எதுவித நீதிமன்ற விசாரணைகளுமின்றி "புலி" எனும் நாமத்துடன் ஸ்ரீலங்காவில் உள்ள களுத்துறை, போகம்பரை, அநுராதபுரம், வெலிக்கடை போன்ற பெரிய பயங்கரமான சிறைச்சாலைகளிலும், மற்றும் ஏனைய பல இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். இன்று எமக்காக குரல் கொடுக்க எவருமில்லை. குரல் கொடுக்க வினைவோரும் படுகொலை செய்யப்படுகின்றனர். தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கானோரில் ஒரு தொகுதியினர் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே தடுப்பில் உள்ளனர். இவர்களுக்கு நீதிமன்றம் பிணை அனுமதி கொடுக்கலாம். ஆனால் அச்சட்டத்தை மாதந்தோறும் தமிழ்

### எம் மக்களே! எமது விடுதலை உங்களிடம்!..



பாராளுமன்ற உறுப்பினர்கள் என தம்மை தாமே அழைத்துக் கொள்ளும் நபர்களின் வாக்குகளுடன் சட்டம் நீடிக்கப்படுவதால் (அவசரகால சட்டம்) இவர்கள் பிணையில் செல்ல முடியாது உள்ளது. இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் முதியோர்கள், நோயாளிகள், குடும்பத்தலைவர்கள், மாணவர்கள் என பல்வேறு தரத்தினரும் உள்ளனர். அன்றாடம் கூலிவேலை செய்து குடும்பத்தை காப்பாற்றி வந்த பலர் கண்ணீருடன் வாழ்வைக் கழிக்கின்றனர். இவர்களது குடும்பம் வறுமையினாலும், குடா நாட்டு இடப்பெயர்வுகள், மருந்து தடைபோன்றவற்றாலும் படுகின்ற வேதனை கடிதங்களினூடாக எமது நெஞ்சை உருகவைக்கின்றது. மாணவர்களின் மீதான தொடர் கைதுகளால் தமிழ் கல்விச் சமூகம் திட்டமிட்ட ரீதியில் அழிக்கப்படுகிறது. மாணவர்களின் கொலைகள், மாணவிகள் மீது பாலியல் வல்லுறவு போன்ற காடைத்தனமான செயற்பாடுகளால் இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டே வெளியேற முற்படுகின்றனர். இச்சம்பவங்களால் ஒரு சமூகமே மெல்ல, மெல்ல இலகுவில் புரியாதபடி அழிக்கப்படுகிறது. இதனை தமிழ் கல்விமான்களும், ஆய்வாளர்களும் எடுத்துக் கூற அஞ்சுகின்றனர். காரணம் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு நடந்த சம்பவம் தான். இவற்றுக்கெல்லாம் எம் மக்கள் தொடர்ந்து ஏமாளிகளாக ஆக்கப்பட்டவண்ணம் இருக்கக் கூடாது. நாமும் தொடர்ந்து கைதிகளாக நான்கு சுவர்களுக்குள் வாழ்வை முடிப்பதா? எமது எதிர்காலம் எமது மக்களின் கைகளில் ஓரளவேனும் உள்ளது. அதனை பயன்படுத்த வேண்டிய தருணம் நெருங்குகிறதாகவே நாம் கருதுகின்றோம். அதாவது நாம் முன் எடுத்துக்காட்டிய சம்பவங்கள் நடைபெற்றதற்கும், தொடர்வதற்கும் முழுப்பொறுப்பும் ஈ.பி.டி.பி, புளொட்,இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய குழுக்களையே சாரும் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் இல்லை. எனவே தான் இம்முறையும் இவர்கள் கௌரவம் மிக்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி.யாம்) என்ற முகமூடி போட்டு உலாவருவதற்கு சந்தர்ப்பம் வழங்கக்கூடாது. இம்முறை பெரும்பாலும் தேர்தலுக்கு சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் வருகை தரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் நியாயமான முறையில் தேர்தல் சில வேளைகளில் நடைபெறலாம். எனவே தான், எம் மக்கள் எமக்காகவும், எமது இனத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்த (ஓரளவு தான்) சிலர் போட்டியிடுவதால் அவர்களை தேர்ந்தெடுத்து நல்லதொரு சூழலை உருவாக்க பாடுபடுங்கள். எச்சந்தர்ப்பத்திலும் ஜனநாயக... என்ற ஆரம்ப வாக்கியங்களில் தொடங்கும் ஆயுதக் குழுக்களுக்கு ஒரு வாக்கையேனும் இட்டு கோடரிக் காம்பாகி விடாதீர்கள். இதனையே எம் நான்கு சுவர்களுக்குள் ஒலிக்கும் அவலக் குரலின் வேண்டுகோள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தமிழ் அரசியல் கைதிகள்,
களுத்துறை.

உரத்த சிந்தனை

சி. சிவசேகரம்

# தேசியக் கோட்பாடு தன்னகத்தே கொண்டுள்ள அகமுரண்பாட்டின் பிரதிவிளைவுகள்

## அடையாளப் பிரச்சினையும் தேசியவாதமும்;

சென்றவாரத் தொடர்ச்சி...

**தமிழ் அடையாளம் என்பது பற்றிய தேசியவாதப் பார்வைக்கும் மனிதசமத்துவப் பார்வைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு, முன்னையது தமிழரது நலனை மற்ற இனத்தவரது நலன்களைவிட உயர்வானதாகக் கொள்வதற்கும் பின்னையது தேசிய இனங்களிடையே சமத்துவத்தைவலியுறுத்துவதற்கும் இடையிலானது.**

தமிழகம் தவிர்ந்த இந்திய மாநிலங்களில் இந்திய எதிர்ப்பு ஒரு பெரிய அரசியற் பிரச்சினையாக இல்லை. ஆயினும் மாநிலத்தின் பெரும்பான்மை மொழி பேசுவோரது மொழிப்பற்று நடைமுறையிற் புலனாகிறது. இந்தியை எதிர்த்துத் தமிழைக் காக்கக் கச்சை கட்டிநிற்கும் திராவிடக் கட்சிகள் யாவுமே ஆங்கிலம் தொடர்புமொழி என்ற பெயரில் ஆதிக்கம் செலுத்துவதை அங்கீகரிக்கின்றன. தாய்மொழிக் கல்வி பற்றி கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்று அவர்களைவிட அதிகம் பேசுகின்றன. கர்நாடகத்தில் கன்னடம் கட்டாய மொழியானது பற்றிக் கூச்சலிட்ட தமிழ்த் தேசியவாதிகள், தமது மாநிலத்தில் தாய்மொழிக் கல்வியைக் கட்டாயமானதாக்க இதுவரை எடுத்தமுயற்சிகள் அற்பமானவையே. பல தமிழ்த் தேசியவாதிகள் ஆங்கிலத்திற்மேற் கொண்டுள்ள மோகமும் மயக்கமும் அவர்களது வர்க்கச் சார்பை, மேல்தட்டு வர்க்க நலன்பேணும் பண்பை, வலியுறுத்துகிறது. அதேவேளை,தமிழகத்தில் உள்ள தமிழரல்லாதார் பற்றிய நிலைப்பாடும் குழப்பமான ஒரு மனநிலையையே காட்டுகிறது. தமிழ் பேசும் மக்கள் பிற மாநிலங்கட்கும் பிறநாடுகட்கும் புலம்பெயர்ந்து போனபின்பு அவர்களது பரம்பரையினர் தமிழை மறப்பது பற்றிய மனவேதனை தமிழ்த் தேசியவாதிகட்கு உண்டு. தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுவது கூட ஒரு அளவுக்கு நியாயமானது எனலாம். அதேவேளை அதேவிதமான ஆசை, தமிழ்நாட்டுக்குள்வந்துள்ள தமிழரல்லாதார் பற்றி அவர்களது மொழிபேசுவோருக்கு இருக்க முடியாதா என்பது அவர்களது அக்கறைக்கு அப்பாற்பட்டது. தமிழர்மீது பிறமொழித் திணிப்பு (ஆங்கிலத் திணிப்பு தமிழர் தாமாகவே மேற்கொள்ளும் ஒன்று என்பதால் மன்னிக்கப்படக்கூடும்) தவறு என்று தெரிகிற அளவுக்குத் தமிழகத்திலுள்ள தமிழரல்லாதார் மீது தமிழ்த்திணிப்பு நியாயமானதா என்பது பற்றித் தமிழ்த் தேசியவாதிகள் சிந்திக்க விரும்புவதில்லை. தமிழகத்தில் உள்ள மக்களில் 25-30 வீதமானோர் தெலுங்குமொழி பேசியவர்களது வம்சாழியினர் என்று கூறப்படுகிறது. அவர்களிற் பெருவாரியானோர், தமிழையே தமது பிரதான மொழியாகக் கொண்டுவிட்டனர். ஆயினும் கணிசமானோர் தம்முள் தெலுங்கிற் பேசுவது உண்டு. இவர்களைவிட, வரலாற்றுக் காரணங்களால் தமிழகத்திற்கு வந்து அதைத் தமது நாடாக்கிக்கொண்ட மராத்தியர் போன்று பல இனத்தவர்களும் உள்ளனர். இவர்கள் பற்றித்தமிழ் தேசியவாதத்தின் நிலைப்பாடென்ன? இங்கே தான் தேசியவாதத்தின் ஜனநாயக விரோத மேலாதிக்கப் பண்புகளை நாம் அடையாளம் காணலாம். தாய்மொழிக் கல்வியுரிமை எல்லாருக்குமான ஒன்றாக இருக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசிய வாதத்துக்கும் உடன்பாடானதல்ல, இந்தி - இந்துத்துவத்துக்கு உடன்பாடானதுமல்ல.

ஆதிக்கம் செலுத்தும் தேசிய இன அடையாளத்தை குறிப்பிட்ட தேசிய எல்லைகட்குள்வாழும் பூர்வ குடிகள் உட்பட்ட மற்ற இனப்பிரிவுகள்மீது திணிக்கும் போக்கு ஒருபுறமிருக்க, இந்தப் பொது அடையாளம், அந்தத் தேசிய இனத்தினுள் இருக்கக்கூடிய அடையாள அக வேறுபாடுகளை மறுக்கவும் பயன்படுகிறது. தமிழகத்தின் தமிழ்த்தேசியவாதத்தின் மேலாதிக்க உணர்வின் நெருக்கடியைப் பார்ப்பன எதிர்ப்பும் இந்தி எதிர்ப்பும் ஓரளவுக்குத் தணித்தன. ஆயினும், இவ்வாறான குறுகிய பார்வைகள் தவிர்க்க முடியாமலே தம்மை வெளிப்படுத்தத் தலைப்பட்டன. ஈழத்தில் அனாகரிக தர்மபாலவின் சிங்கள பௌத்தக் கோட்பாடு எவ்வாறு அதன் தேசிய விடுதலை நிலைப்பாட்டின்று வளர்ந்து இனவாத மதவாதக் கோட்பாடாக மாறியது என்று அறிவோம். யாழ்ப்பாணச் சைவ வேளாள அரசியலிலும் இவ்வாறான பண்புகள் இருந்ததை அறிவோம். தமிழகத்தின் தனித்தமிழ் இயக்கத்திலும் இவற்றையொத்த குறுகிய பார்வை இருந்தது. தனித்தமிழ் இயக்கத்தின் முற்போக்கான விடுதலைக் கூறுகளை அடையாளங்காணத் தவறாமலே நம்மால் அதன் குறுகிய பார்வையையும் அடையாளங் காணலாம். இன்று தனித்தமிழ் இயக்கத்தின் வாரிசுகளாகத் தம்மைக் காணுகிற சக்திகள் அந்த இயக்கத்தின் நிறைகளைவிடக் குறைகளையே அதிகம் தமது கொள்கைகளிற் காட்டுகிறார்களா? என்று ஐயுற வேண்டி இருக்கிறது.

மலையாளிகள், மராத்தியர், தெலுங்கர் என்ற அடிப்படையில் சில தமிழ்த் தேசியவாதிகளால் வெறுத்தொதுக்கப்படுவோருட் பலர், தமிழையே தமது அன்றாட மொழியாகக் கொண்டவர்கள். ஆயினும் யார் தமிழன் என்ற இக்கேள்விக்கு ஒரு இனத்தூய்மைவாதக் கருத்தைவிடையாகச் சிலர் வலியுறுத்தியமை, ஜேர்மன் ஆரிய இனக் கோட்பாட்டையும் தென்னாபிரிக்க வெள்ளை இனக்கோட்பாட்டையும் நினைவூட்டத் தவறவில்லை. இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு எம்.ஜி. ராமச்சந்திரனை ஒரு மலையாளி என்று தி.மு.க.வினர் தாக்கியபோது மு.கருணாநிதி ஒரு தெலுங்கர் என்று பதில் தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஏறத்தாழ அதேகாலகட்டத்தில், ம.பொ.சிவஞானம் தமிழரல்ல என்றும் தி.மு.க.வினரால் தாக்கப்பட்டார். பார்ப்பனர்கள் தமிழரல்லர் என்பது இன்னமும் ஒரு சாராரது நிலைப்பாடு. இது போன்ற உதாரணங்கட்குத் தமிழகத்தில் பஞ்சமில்லையாயினும், இவ்வாறான தேசிய அடையாளப் பிரச்சினையின் விளைவாகத் தமிழ்த் தேசியவாதம் மேலும் பலவீனமடைந்தது.

ஏற்கனவே சாதியத்தின் பிரச்சினைகட்கு முகங்கொடுக்க இயலாது சோர்வுற்றிருந்த தமிழ்த்தேசிய வாதம் இன்று சாதி அரசியலையும் சாதிப் பூசல்களையும் தவிர்க்க முடியாது தத்தளிக்கிறது. இவ்வாறான சாதி அரசியல், தாழ்த்தப்பட்ட சாதியினரது விடுதலைக்கு உதவுவதற்கு மாறாக அவர்களைத் தனிமைப் படுத்திச் சாதி அடிப்படையில் மேலும் பிளவுபடுத்தவே உதவும் என்பது என் மதிப்பீடு. இன்று தமிழகத்தில் சாதி அடிப்படையிலான கட்சிகளது தோற்றமும் செல்வாக்கும் இன்னும் சில காலத்துக்குத் தமிழ்ச்சமுதாயத்தின் அடிப்படையான சமூகப் பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பவே உதவும்.

தமிழ் அடையாளம் என்பது பற்றிய தேசியவாதப் பார்வைக்கும் மனிதசமத்துவப் பார்வைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு, முன்னையது தமிழரது நலனை மற்ற இனத்தவரது நலன்களைவிட உயர்வானதாகக் கொள்வதற்கும் பின்னையது தேசிய இனங்களிடையே சமத்துவத்தைவலியுறுத்துவதற்கும் இடையிலானது. தேசிய அடையாளம் என்றும், இன அடையானம் என்றும் உள்ள அடையாளங்கள் பற்றிய விறைப்பான பார்வைகள் பல விபரீதமான முடிவுகட்கு நம்மை வழிநடத்தக்கூடும். எனவே இந்த அடையாளங்களை அவற்றுக்குரிய அரசியற் சூழலுக்கு ஏற்ப விளங்கிக்கொள்வதும் மனிதரிடையே இனம், மொழி, மதம், பண்பாடு ஆகியவற்றில் புரிந்துணர்வையும் சமத்துவத்தையும் ஊக்குவிக்குமாறு பயன்படுத்துவதும் மனிதஇன மேம்பாட்டுக்கு உகந்தவை மற்றப்படி, எந்தக் குறுகிய பார்வையும் இன்னும் மோசமான குறுகியபார்வைகட்கே வழிகோலி எந்தஇனத்தினதும் விடுதலைக்கும் பாதகமாக அமையும் என்பதைநாம் நினைவிலிருத்துவது பயனுள்ளது.

---

# காத்திருக்கிறாள்...

ஸ்ரீ

"சீச்சி.... என்ன இந்த கொல்லி பத்தி எரியுதும் இல்ல, புகைஞ்சி உயிரை எடுக்கிறது" என புறு புறுத்துக் கொண்டிருந்தாள், அடுப்படியில் இருந்த கனகம். "கனகம் தேநீரைக் கொண்டு வாவன் நான் போகணும் நேரமும் போய்க் கொண்டிருக்கிறது" என கூறியவாறு விற்கக் கொண்டு போக வைத்திருந்த விறகை துவிச்சக்கர வண்டி கரியரில் வைத்துக் கட்டிக் கொண்டு இருந்தார். கனகத்தின் கணவர் ரஞ்சன். என்னங்க கொஞ்சம் பொறுங்க தண்ணீ கொதிக்குதும் இல்ல அடுப்பு பத்தி எரியுதும் இல்ல. ஊருக்கே கொல்லி கொடுக்கிற உங்க வீட்டில நல்ல கொல்லி இல்ல, இதத்தான் பழையவங்க சொலலியிருக்காங்க "ஓடாவிர விட்ட நாய் பூறுமாம்" என்று. அது போலத் தான் இருக்கின்றது இதுவும் பழைய ஆக்கள் சும்மாவா சொல்லியிருக்காங்க". எனக் கூறிக் கொண்டு அடுப்பை பற்ற வைத்துக் கொண்டிருந்தாள் கனகம். அப்போது "அம்....மா...அம்...மா.. என இவன் இளைய மகன் அழும் சத்தம் கேட்டு இன்றைக்கு தேநீர் போட்ட மாதிரிதான் தம்பியும் எழும்பித்தான்" என சொல்லிக் கொண்டு ஓடி, தொட்டிலில் கிடந்த மகனை தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு தாலாட்டினாள். "கனகம் எனக்கு நேரம் போகுது நான் வாரன் போயிற்று" எனக்கூறி விட்டு துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டவனை "என்னங்க தேநீர் வேண்டாமா தண்ணி கொதிக்குது குடிச்சித்து போங்களன்" "இல்ல கனகம் எனக்கு நேரம் போகுது நான் போயிற்று வாரன்." "சரிங்க வரும்போது தம்பிக்கு பால்மா பக்கட் வாங்கிட்டு வந்திருங்க, பால் மா முடிஞ்சி போச்சி" என கனகம் கூற தலை அசைத்தவனாக துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

ரஞ்சன் சென்றதும் தேநீரை எடுத்து போத்தலுக்குள் கிடந்த சிறிது பால்மாவை கலந்து அழுது கொண்டு இருக்கும் மகனுக்கு கொடுத்தாள், பாலை பருகிய அவன் மீண்டும் உறங்கினான். உறங்கிய அவனை தொட்டிலில் போட்டு விட்டு " இன்னும் கொஞ்ச நேரத்தில் மற்ற இரு பிள்ளைகளும் எழுந்திடுவாங்க எழுந்ததும் அவங்களுக்கு கிடக்கிற தண்ணீ சோற்ற கொடுத்து பள்ளிக்கு அனுப்பனும்". என நினைக்க அவள் இரு பிள்ளைகளும் எழுந்து கண்களை கசக்கியவாறு நின்றனர். அதைக்கண்ட இவள் " கவிதா போய் நீயும் குளிச்சித்து தங்கைச்சியையும் குளிக்க வாத்து கூட்டி வா. பள்ளிக்கு போகணும் அல்லவா? என கூற இரு பிள்ளைகளும் குளிக்கச் சென்றனர்.

அவர்களை அனுப்பி விட்டு தேநீரை எடுத்து சீனியை நக்கிக் கொண்டு தேநீரை குடித்தாள் கனகம். அப்போது அவளது கடந்தகால வாழ்க்கையை எண்ணி பார்த்தாள். தனது குடும்பம் எவ்வளவு வசதியாக வாழ்ந்த குடும்பம் ரஞ்சனை மணம் முடித்தும் எந்த கஷ்டமும் இல்லாம வாழ்ந்த நான், அவர் கடும் உழைப்பால அவருக்கென்று சொந்தமா தோணி வலை என எல்லாம் இருந்தது. இதனால் நல்ல வருமானம் கிடைத்தது. இந்த பாழாப்போன யுத்தத்தால எல்லாத்தையும் இழந்தோம். கடலுக்கு போகவும் தடைபோட்டாங்க இதனால் கடும் கஷ்டப்பட்டோம், இப்போ அவரு கொல்லி கொத்தி விற்று குடும்பத்தை ஓரளவு காப்பாற்றுராரு. என்ன செய்வது, எல்லாம் நம் தலை எழுத்து என நினைத்துக் கொண்டிருக்க "அம்மா.... அம்மா நாங்க குளிச்சித்தம்" என அவள் இரு பிள்ளைகளின் குரல் கேட்டு நினைவுக்கு வந்தவள் சரி வாங்க சாப்பிட என அழைத்து பானைக்குள் கிடந்ததண்ணீர் சோற்றை இரு பிள்ளைகளுக்கும் கொடுத்தாள். அவர்கள் சாப்பிட்டு விட்டு பாடசாலை சீர் உடையை அணிந்து கொண்டு பாடசாலைக்கு புறப்பட்டனர்.



சின்னத்தம்பி நாகேந்திரன்

இரு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பி விட்டு உணவு முத்திரையில் எடுத்த அரிசியில் இரு சுண்டை எடுத்து கழுவி பானையில் இட்டு அடுப்பில் வைத்தாள். வீட்டுக்கு பின்னால் நின்ற குப்பை கீரையை பிடுங்கி அரிந்தெடுத்தாள். சமையலையும் முடிக்க, பிள்ளையின் அழுகை சத்தமும் கேட்டது. ஓடிச் சென்று பிள்ளையை தூக்கி தோலில்போட்டுக் கொண்டு தாலாட்டினாள் அவன் அழுகையை நிறுத்துவதாய் இல்லை. இப்ப கை வசம் பால் மாவும் இல்ல, தம்பி பசியில் அழுகிறான் என்ன செய்ற என தனக்குள் நினைத்துக் கொண்டு" தம்பி அழாதே அப்பா இப்ப தம்பிக்கு பால் கொண்டு வருவாரு என கூறினாள். அவன் கேட்பதாயில்லை நேரமோ பனிரெண்டையும் தாண்டி விட்டது. ரஞ்சன் வரவில்லை ஏன்ன இன்றைக்கு இவ்வளவு நேரமா போகுது ஆள காணவில்லை தம்பியும் பசியில அழுதான் கையில காசிம் இல்ல என நினைத்தவள் எதற்கும் அவர் சேட் பையை பாப்பம் சில்லறை கிடக்கும். கிடந்தா தம்பிக்கு பிஸ்கட் வாங்கி கொடுக்கலாமே" என நினைத்தவள் வீட்டு கொடியில் கிடந்த ரஞ்சனின் சேட் பைக்குள் கையை நுளைத்தவள் "கடவுளே இந்த மனுசன் அயிடன்டி காட்ட வைச்சித்து போயிற்றாரு இந்த காலத்தில அயிடன்டி இல்லாம எங்கையும் போகலாமா கடவுளே அவர நீ தான் காப்பாத்தவேண்டும்" என சத்தமிட்டு அழுதாள் அவள் அழுவதைகண்டு அவள் தோளில் கிடந்த அவள் மகள் அழுகையை நிறுத்தினான்.

நேரம் மாலை ஆறு மணியையும் தாண்டி விட்டது ரஞ்சன் வீடு திரும்பவில்லை தாயும் பிள்ளைகளுமாக அழுது கொண்டு அவன் வருகைக்காக காத்து கிடந்தனர். காலங்கள் கடந்தன ரஞ்சன் வீடு திரும்பவேயில்லை. அவன் வருகைக்காக கண்ணீருடன் இன்றும் காத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

**முற்றுப் பெற்றது**
**(யாவும் கற்பனை அல்லது)**



**மலையாள மாந்திரீகம்**

பிரிந்தவர்களை ஒன்று சேர்க்க, விட்டு சென்றவர்களை அழைத்து எடுக்க, கணவன், மனைவி தன்னை விட்டு பிரியாமல் இருக்க, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாண தடை நீங்க, தடைப்பட்ட திருமணம் கைகூட, காதல் வெற்றி பெற, வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். நேரடி தொடர்புகளுக்கு
T.P. 01-4662771

கருணாகரபூசணம். உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி P.K. Sammy (J.D.GN) J.P

162, Kotahena St, Mayfield Rd, Col-13 Tel: 01-342463 Fax: 0094-1-344831
E-Mail: drpksamy @ sltnet. lk Web site: www.imexpolanka.com/drpksami

வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.







**ஜாதகம்**

அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்கப்போவதுடன், திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். தேவைகளுக்கு நேரில் வருவது சாலச்சிறந்தது. விபரங்கள் அறிய திகதி, மாதம், வருடம் போதுமானது. கைரேகை என்றால் திகதி, மாதம், வருடம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு மலையால மாந்திரீக சக்கரவர்த்தி துர்க்கை சித்தர் டாக்டர் பி.கே.சாமி,( J.D.G.A.N) J.Pஇல. 162, கொட்டாஞ்சேனை வீதி மேபீல்ட் ரோட், கொழும்பு- 13 தொ.பே 344883


# சக்தியின் சக்திமிகு ஒளிபரப்பு

## மரைக்கார் ராம்தாஸின்

## "மீண்டும் மீண்டும் கோமாளிகள்"

ஒரு கால கட்டத்தில் அதாவது 1975களில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் மக்கள் வங்கியின் ஆதரவில் சுமார் 90 வாரங்கள் தொடராக ஒலிபரப்பாகி, பரந்து வாழும் நேயர்களை மகிழ்வித்த கோமாளிகள், 1976ல் சுமார் மூன்று மணி நேரத் திரைப்படமாக வெளிவந்து இலங்கைத் தமிழ்த் திரைப் படத், துறையில் அதுவும் தனி நகைச்சுவைப் பாணியில் ஒரு சரித்திரத்தைப் படைத்து விட்டுச் சென்றதை தமிழ் பேசும் ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

தென்னிந்திய தமிழ் தொலைக்காட்சி நாடகங்களுக்குச் சமமான வகையில் ஏன் சவால் விடுமளவுக்கு மரைக்கார் ராம்தாஸின் மீண்டும் மீண்டும் கோமாளிகள் எம் நாட்டுத் தொலைக்காட்சியான சக்தி டி.வி.யில் ஒவ்வொரு வியாழன் தோறும் ஒளிபரப்பாகிக் கொண்டே வருகின்றது.

ஆங்கிலத்தில் வெளிவந்து பல தொடர்களாக பரிணமித்த கரி ஒன் சீரிஸ் எனும் ஹாஸ்ய சினிமாவைப் போன்றுதான் கோமாளிகளும் இன்று மீண்டும் மீண்டும் தொடர்களாகி மொத்தமாக ஒரு வருடத்துக்கு ஒளிபரப்பாக காத்திருப்பது தமிழ் பேசும் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் செய்தியெனலாம். மூவினத்தைச் சேர்ந்தோர் ஓரில்லத்தில் சகோதர வாஞ்சையோடு ஒற்றுமையாக வாழ்வதை மையமாகக் கொண்டு ஹாஸ்யம் இழையோடும் பாணியில் அமையும் வண்ணம் இத் தொலைக்காட்சி நாடகத்துக்கு கதை வசனம் எழுதி இயக்கி தயாரித்து வழங்கும் கலாசாகர் எஸ்.ராம்தாஸை இவ்வேளையில் மெச்சாமல் இருக்க முடியாது.

அதேவேளை இலங்கை வாழ் தமிழ் பேசும் லட்சக்கணக்காண நேயர்களின் நீண்டகாலக் கனவாக இருந்து வரும் ஒரு உள்ளூர் தமிழ் நாடகம் தயாரிக்கப்படாதா, எமது நாட்டுக் கலைஞர்களின் திறமையை வெளிக்கொணர ஒரு களம் கிடைக்காதா என்ற ஆதங்கத்தை சக்தி டி.வி இன்று மீண்டும் மீண்டும் கோமாளிகள் எனும் ஒரு வருட தொடர் மூலம் நிறைவேற்றி வைப்பது இந் நேயர்களுக்கு மட்டுமன்றி, உள்ளூர் கலைஞர்களுக்கும், ஆர்வமிக்க தயாரிப்பாளர்களுக்கும் பெரும் மனத்திருப்தியை ஏற்படுத்தி விட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.



இலங்கை வாழ் லட்சக்கணக்கான தமிழ் பேசும் ரசிகர்களின் உச்சரிப்பாக இருக்கும் மீண்டும் மீண்டும் கோமாளிகளில், மரிக்கார் எனும் கதாபாத்திரத்தில் கலாசாகர் ராம்தாஸ், அவரது மனைவி ஆயிஷாவாக நெய் றஹீம் ஷஹீட், அப்புக்குட்டி எனும் யாழ்ப்பாண பாத்திரத்தில் ரி. ராஜகோபால், அவரது மனைவியாக ஏ. எம்.சி. ஜெய ஜோதியும், உபாலி எனும் சிங்களப் பாத்திரத்தில் எஸ். செல்வசேகரன், அவரது மனைவி ரீட்டா பாத்திரத்தில் ஆர். மணிமேகலை, பண்டிதராக கே. சந்திர சேகரன், சிறீதர் பிச்சையப்பா, வி.கி.பிரதாபன், நேசன் தியாகராஜா, ராஜா கணேசன் இவர்களுடன் சிங்கள தொலைக்காட்சி நாடக புகழ் மேர்வின் மகேசன், ரஞ்சன் ராஜ்மோகன், மற்றும் நிலாமதி பிச்சையப்பா, வீணா ஜெயக்கொடி, குமாரி திஸாநாயக்க உட்பட பல சிங்கள கலைஞர்களுடன், அடுத்தடுத்த வாரங்களில் மற்றுமொரு முகமும் கோமாளிக்குள் தலைகாட்டவிருக்கின்றதாம்.

ஆக, கலாசாகர் ராம்தாஸின் கதை இயக்கத்தில் உருவான "கோமாளிகள்" சுமார் 25 வருடங்களாக பல்வேறு பெயர்களில் சரித்திரம் படைத்துக் கொண்டேயிருக்கின்றது. இவரின் தமிழ் பேசும் ரசிகர்களை நோக்கிய கலைப்பயணம் சளைப்பின்றி தொடரட்டும்.

ஏ.எச்..எம். பூமுதீ

*சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள், மேடை நாடகங்கள் தொடர்பாக ஆதவனுக்கு தனிப்பட்ட கண்ணோட்டம் இருந்தாலும், மீண்டும் மீண்டும் கோமாளிகள் எமது தேசிய தயாரிப்பு என்ற காரணத்தினால் இவ்விடயத்தை பிரசுரிப்பதோடு ராம்தாஸ் அவர்கள் தமது திறமையால் நல்ல சமூக பிரக்ஞையுள்ள நாடகங்களை தமிழ் ரசிகருக்கு தரவேண்டும் என ஆதவன் கேட்டுக்கொள்கிறது.*

## ஆதவன் சினிமா

# புரஹந்த கருவல

# திரைப்படத்திற்கு ஏன் அரசு அஞ்சுகின்றது

பௌர்ணமி தினத்தன்று அனுராத புரத்தில் உள்ள கிராமம் ஒன்றிற்கு சிங்கக் கொடியால் போர்த்தப்பட்ட பிரேதப் பெட்டியுடன் பிரேதக்கார் ஒன்று வருகின்றது. அதில் வடக்கு யுத்தத்தில் உயிரிழந்த இராணுவ வீரனின் உடல் இருக்கின்றது. இறந்த இராணுவ வீரனின் (பண்டார) தந்தை வன்னி ஹாமி கண்பார்வையை இழந்தவர். இவர்தன் மகன் இறந்து விட்டான் என்பதைநம்ப மறுக்கிறார். என்றோ ஒரு நாள் வீடு திரும்புவான் எனும் நினைப்பில் வாழ்கின்றார்.

பண்டாரவின் உடல் அடக்கம் செய்தபின் அதற்குரிய நட்டஈட்டு பணத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். அரைகுறையாக கட்டப்பட்டுள்ள வீடு, கிராம சேவகரிடம் காணியை அடகு வைத்து வட்டிக்கு எடுத்தபணத்தை திருப்பி கொடுக்க வேண்டும், திருமணத்திற்காக காத்திருக்கும் கடைசி மகள். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நட்ட ஈட்டு பணத்தால் தான் தீர்க்க வேண்டும். ஆனால் வன்னிஹாம் இதற்குரிய ஆவணங்களில் கையெழுத்து வைக்க மறுக்கிறார். மகன் ஒரு நாள் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றார்.

ஒரு நாள் ஒருவருக்கும் தெரியாமல் வன்னி ஹாமி, மகனின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் சவக்குழியை தோண்டுகின்றார். இவ்வேளையில் கிராம வாசிகள் அங்கு சேர்கின்றனர். சவப்பெட்டியை திறக்கின்றார், உள்ளே வெறும் வாழைக் குற்றிகள் மட்டுமே இருக்கின்றது. அந்நேரம் அங்கு வந்த கிராம சேவகர் "என்ன வேலை செய்தீர், இப்பொழுது எப்படி நட்ட ஈட்டை பெறுவது" எனக் கேட்கின்றார்.



வன்னி ஹாமி மெதுவாக குளக்கரைக்கு நடந்து செல்கின்றார்.

ஆதவன் மறையும் மாலைப்பொழுது, குளத்தில் நீராடும் சிறுவர்களின் மகிழ்ச்சிகலந்த சிரிப்போசை வன்னி ஹாமிக்கு கேட்கின்றது.

பிரசந்த விதானகேயின் "புரஹந்த கருவலய" திரைப்பட கதையின் சாராம்சம்.

ஏழைக் கிராமத்து இளைஞர்கள் இராணுவத்தில் சேர்ந்து போராடும் போது ஏற்படும் மரணங்களில் எவ்வாறு ஏமாற்றப் படுகின்றனர் என்பதை எடுத்துக்காட்டும் இத்திரைப்படத்தை அரசாங்கம் இப்பொழுது தடை செய்திருக்கின்றது. ஏன் இந்தத் தடை, இத் திரைப்படத்திற்கு ஏன் அரசாங்கம் பயப் படுகின்றது. பயப் படுகின்றதா அல்லது ஜனாதிபதியின் சனத் குணதிலக்கவின் திரைப் படத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்கின்ற காரணத்தினால் இத் திரைப் படம் தடைசெய்யப் பட்டதா? ஜனநாயகம் பேசும் அரசாங்கம் சினிமாக்கலை விடயத்தில் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றது.



ஏ.எஸ். ஞானம்.